www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு
16 - 31 டிசம்பர்'90 6/3 விலை ரூ.2.00



தி.க.வின் மேல்சாதி வெறி! வல்லத்தில் அட்டகாசம்!




மு.க. லட்சியம் பரம்பரை ஆட்சியே!

படிப்பகம்

www.padippakam.com

# தண்ணீர் கேட்டால் ரத்தம் கேட்கும் போலீசு

தமிழகத்தில் அண்மையில் பெய்த பருவமழையால் கோவை சிறுவாணி ஆறு தண்ணீர் நிரம்பி வழிகிறது. அதேசமயம் கோவையிலுள்ள பீளமேடு மற்றும் சுற்று வட்டார மக்கள் தங்களுக்கு குடிக்கத் தண்ணீரில்லை என்று ஓங்கி எழுப்பிய குரலும் உரக்க கேட்டது!

வெளிநாட்டு இந்தியர்கள் சிலர் பல கோடி ரூபாய் மூலதனத்தில் 'கோவை மெடிக்கல் சென்டர்' என்ற மருத்துவமனையை நடத்தி வருகின்றனர். மருத்துவமனையை கருணாநிதியைக் கொண்டு திறந்து வைத்தும் மேலும் பல ஆளுங்கட்சி அமைச்சர்கள் ஆசியுடன் பல சலுகைகளைப் பெற்றும் நடத்துகின்றனர். இம் மருத்துவமனைக்கு சமீபத்தில் 8 அடி ஆழத்தில் பைப் லைன் போட்டு தண்ணீர் கொண்டு சென்றதால் சுற்று வட்டார பகுதியிலுள்ள குழாய்களில் தண்ணீர் செல்வது தடைப்பட்டது. 6 மாத காலமாக சுற்று வட்டார மக்களுக்கு போதிய தண்ணீர் கிடைக்காமல் குறைந்து கொண்டே வந்தது. கடந்த 10 நாட்களாக நிலைமை மோசமாகவே 500க்கும் மேற்பட்ட பகுதி மக்கள் தாங்களாக முன்வந்து 26-11-90 அன்று சாலை மறியல் போராட்டம் நடத்தினர்.

அதுவரை நேரிலும், மனு மூலமும் வைத்த மக்கள் கோரிக்கையை அலட்சியப்படுத்திய அதிகாரிகள் ஓடோடி வந்தனர். பாராமுகமாக இருந்த ஓட்டுக் கட்சித் தலைவர்கள் வந்து போராட்டத்தை கைவிட்டு எங்கள் துண்டின் நுனியை பிடித்துக் கொள்ளுங்கள் என்று கெஞ்சினார்கள். மக்கள் மயங்கி விடவில்லை; 'தண்ணீருக்கு வழி பிறக்காமல் நகர மாட்டோம்' என உறுதியுடன் போராடினர்.

ரகுபதி மற்றும் ராதாகிருஷ்ணன் என்ற போலீசு அதிகாரிகள் தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்ட காக்கிச் சட்டைகள் வந்து குவிந்தன. ரகுபதி, (போராடியவர்களில் பெரும்பான்மையானவர்கள் பெண்கள்) பெண்களை சிறிதும் நாகூசாமல் கண்டபடி திட்டிப் பேசினான். இதைக் கண்டு ஆத்திரமுற்ற மூதாட்டி லட்சுமியம்மாள் எதிர்த்துக் கேள்வி கேட்கவே பலமாக தாக்கி மண்டையை உடைத்தான். இடையில் மூதாட்டியை காப்பாற்ற வந்த இளைஞர் சாந்தாராமையும் போலீசு கும்பல் பலமாக தாக்கியது.

இச்செய்தி பரவியதும் மேலும் பெருவாரியான மக்கள் வெகுண்டெழுந்து வந்து போராட்டத்தில் குதித்தனர். போலீசின் அராஜக தாக்குதலை கண்டித்து குரலெழுப்பினர். போலீசு கும்பல் திடீரென போராடியவர்கள் மீது தடியடி நடத்தி பலரது கை - கால்களை முறித்தது. 17 பேர் மீது 50 பிரிவுகளில் பொய் வழக்குப் போட்டுள்ளது. பாதிக்கப்பட்ட இளைஞர் சாந்தாராமிடம், தடுக்கி விழுந்து அடிபட்டதாக எழுதித் தரும்படி மிரட்டியது. இத்தனைக்குப் பிறகும் கலெக்டர் ராமனாதன் மறுநாள் பத்திரிகையாளர்களிடம் தடியடி நடக்கவேயில்லை என முழுப் பூசணிக்காயையும் சோற்றில் மறைக்க முயன்றார்.



குடிநீர் கேட்டுப் போராடும் பெண்கள்; மண்டையைப் பிளக்க காத்திருக்கும் போலீசு.

30.11.90 அன்று பீளமேடு, பீளமேடு புதூர், பி.ஆர்.புரம், பாலன் நகர், மசக்கிளிப்பாளையம், இலட்சுமிபுரம் முதலான பல பகுதிகளில் போலீசு தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து கடையடைப்பு வெற்றிகரமாக நடத்தப்பட்டது. அதே நாளில் சர்வ கட்சி சார்பில் பேரணியும், பொதுக்கூட்டமும் நடத்தி பகுதி மக்கள் தங்கள் எதிர்ப்பை தெரிவித்தனர். சர்வ கட்சி கமிட்டி, பேரணியில் போலீசுக்கு எதிரான கோஷம் போடக் கூடாது என வலியுறுத்தியும் கூட மக்கள் போலீசை வன்மையாகக் கண்டித்து கோஷமெழுப்பி தங்களது உணர்வை வெளிப்படுத்தினர். காங்கிரஸ் எம்.பி.குப்புசாமி, அ.தி.மு.க. எம்.எல்.ஏ. அண்ணாநம்பி, பா.ஜ.க. மாவட்டத் தலைவர் அர்ஜுனன் சம்பத், இந்திய ஜனநாயக மாதர் சங்கப் பிரதிநிதி ஜெயம்மா முதலானோர் பாதிக்கப்பட்ட மக்களுக்காக தத்தம் மொழியில் நீலிக் கண்ணீர் வடித்தனர். போலீசை செல்லமாக கடிந்து கொண்டனரே ஒழிய யாரும் மக்கள் விரோத கும்பலான போலீசை பகிரங்க விசாரணைக்கும் தண்டனைக்கும் உட்படுத்தச் சொல்லி கோரவில்லை. பா.ஜ.க. மாவட்டத் தலைவரோ போலீசுக்கு வக்காலத்து வாங்கிப் பேசி தன்னை பகுதி மக்களிடம் அடையாளம் காட்டிக் கொண்டார். மொத்தத்தில் எவரும், பாதிக்கப் பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கக் கோருவதில்கூட அக்கறையின்றி ஓட்டுப் பொறுக்குவதிலேயே கவனமாயிருந்தனர்.

ஆனால் பகுதி மக்கள் இந்த எத்தர்களை நன்றாக புரிந்து கொண்டு தக்க பாடம் புகட்டினர். போலீசு தாக்குதலுக்குப் பின் மறுநாள் பகுதிக்கு வந்த தொகுதி எம்.எல்.ஏ. மோகன் மறியலில் ஈடுபட்டது தவறு என கூறியதும், பகுதி மக்களின் கேள்விக் கணைகளால் மூக்குடைபட்டு ஓடினார். மேலும், தங்களை அலட்சியப்படுத்திய குடிநீர் வாரிய அதிகாரிகள் இருவரையும் ஊருக்குள் வைத்து மக்கள் நையப் புடைத்து அனுப்பினர். அவமானப்பட்ட அவ்விருவரும் அரசியல்வாதிகள் உதவியுடன் மாற்றல் வாங்கிக் கொண்டு போய் விட்டார்கள்.

''எட்டரை மணி நேரமா விஜய்காந்த் ஷூட்டிங்கிற்காக போக்குவரத்தை ரத்து செய்யலாம்; தண்ணீரின்றி தவிக்கும் நாங்க சாலை மறியல் செய்தா போக்குவரத்து பாதிக்குதுன்னு எங்க மண்டைய பொளக்குறாங்களே, இனிமே ஊருக்குள்ள போலீசுகாரன் எவனாவது வந்தா துடைப்பக் கட்டையும் வெட்டரி வாளும்தான் பேசும்'' என்பது பெண்களின் உள்ளார்ந்த உணர்விலிருந்து எழுந்து வந்த வெப்பக் கீற்று. இது பேச்சோடு நின்று விடும் ஒன்றல்ல; செயலுக்கும் வரும்.

**தகவல்:**
**மக்கள் கலை இலக்கியக் கழகம்,**
**கோவை.**

படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

ஆறாமாண்டு

3

16 - 31 டிசம்பர்'90

உள்நாடு
தனிஇதழ் : ரூ.2.
ஆண்டு சந்தா : ரூ.48

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுசந்தா : US

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.

# பரவும் மதவெறி பாசிசம் -பயங்கரம்

ஐதராபாத், அலிகர், கான்பூர், அகமதாபாத் ஆகிய நகரங்களில் மீண்டும் துவங்கி நடக்கும் மதவெறிக் கலவரங்கள் பற்றிய செய்திகள் இரத்தத்தை உறைய வைக்கும் அதிர்ச்சியூட்டுகின்றன.

ஆறுமாதக் குழந்தை முதல் ஒன்பது வயதுச் சிறுமி வரை பலர் கத்தியால் குத்திக் கொல்லப்படுகின்றனர். கர்ப்பிணிப் பெண்களையும் அவர்கள் வயிற்றிலுள்ள கருவையும் கூட விட்டு வைக்கவில்லை. எண்பது வயதுக் கிழவியின் கைகளை வெட்டி, வாயை அறுத்துள்ளனர். உயிரோடு கொளுத்தப்பட்ட ஆண்கள், பெண்களின் பிணங்கள் இரண்டு, மூன்று நாட்கள் பிரதானச் சாலைகளில் கிடந்து நாறுகின்றன. தன் கண் முன்பாகவே தனது தாய் துண்டு துண்டாக வெட்டி வீசப்பட்டதாக ஒரு இளம்பெண் கூறுகிறார். ஆண்கள், பெண்களின் உடைகளையும், நிர்வாணமாக்கி மதச் சின்னங்களை உறுதிப்படுத்திக் கொண்டும் படுகொலை செய்யப்படுகின்றனர்.

நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் இருந்தாலும் திட்டமிட்டு, அமைப்பு ரீதியில் திரண்டு, ஒரே மாதிரியான மதவெறிப் படுகொலைகள் நடக்கின்றன. 20, 30 பேரை ஏற்றிக் கொண்டு 5, 6 லாரிகளில் பயங்கர ஆயுதங்களுடன் மாற்று மதத்தினர் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளுக்குள் புகுந்து தாக்குகின்றனர். கத்திக்குத்து, சூறையாடல், கொள்ளை, கற்பழிப்பு, தீவைப்பு ஆகிய வெறியாட்டங்களை பகுதிபகுதியாகச் செய்துகொண்டே போகிறார்கள். போலீசு, ஊரடங்கு உத்திரவு, இராணுவ அணிவகுப்பு எதுவும் அவர்களைத் தடுத்து நிறுத்தி விடவில்லை.

1947- நாடு பிரிவினையின் போது எல்லையின் இருபுறங்களிலும் நடந்த மதவெறிப் படுகொலைகளை - கலவரங்களை நினைவுபடுத்துவதாக முதியவர்கள் கூறுகின்றனர். மக்கள் தாம் வாழும் பகுதிகளை விட்டு அகதிகளாக ஓடுகின்றனர். அலிகரில் ரயிலை நிறுத்தி ரயில் பெட்டியோடு மக்களைக் கொளுத்துகின்றனர். வாரணாசி - பிரெய்லி ஓடும் ரயிலில் இருந்து கைக்குழந்தைகளைப் பிடுங்கி வெளியே வீசிக் கொல்கின்றனர்.

வாரணாசி, மீரட், புதௌன், புலந்த்சர் ஆகிய உ.பி. நகரங்களுக்கும் கலவரங்கள் பரவிக் கொண்டிருக்கின்றன. தொடர்ந்து ஒரு வாரத்துக்கு மேல் ஊரடங்கும், இராணுவ ஆட்சியும் பல நகரங்களில் நீடித்தும் கலவரங்கள் ஓய்வதாகத் தெரியவில்லை. நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக சகோதர பாசத்துடனும், அண்டை வீட்டு நட்புடனும் வந்த மக்களிடையே வெறுப்பும், பகையும் ஆத்திரமும் பழி தீர்க்கும் உணர்வும் பொங்கி வழிகிறது.

இந்த முறை போலீசு மீதான தாக்குதலும், மசூதி ஒலி பெருக்கிகள் மூலம் தாக்குதல் தொடுக்கும்படியான உத்திரவும் வருகின்றன; எனவே முஸ்லீம்கள் தான் மதக்கலவரங்களுக்குக் காரணம் என்கிற தோரணையில் பார்ப்பன - பனியா பத்திரிகைகள் எழுதுகின்றன. உண்மையாகவும் இருக்கலாம். ஆனால் இதற்கான பழி முழுவதையும் முஸ்லீம் மதவாதிகள் மீது சுமத்த முடியாது. விஜயரதம், ஏகத்மாதா பூசை, செங்கல் பூசை, ரத யாத்திரை, கரசேவா தொண்டுப் பணி ஆகியவற்றைத் தொடர்ந்து இந்துமத வெறியர்கள் நடத்தும் படுகொலைகள், அயோத்தி மசூதியின் குவிமாடங்களைத் தகர்த்தது; அதை தொடர்ந்து பல இடங்களில், குறிப்பாக இராஜஸ்தான், ம.பி. ஆகிய பாரதீய ஜனதா கட்சி ஆளும் மாநிலங்களில் மசூதிகளைத் தாக்கி வருவது; கடைசியாக அயோத்தி மசூதியை இந்து மதவெறியர்களுக்குத் தாரை வார்க்க ராஜீவ் - சந்திரசேகர் கூட்டு சதி செய்வது — ஆகியவற்றின் எதிர்விளைவு தான் முஸ்லீம் மக்களை முஸ்லீம் மதவெறியர்களிடம் தள்ளுகின்றன.

போலீசும், துணை இராணுவமும் ஒன்று மதவெறிப் படுகொலைகள் துவங்கியதும், அவ்விடங்களில் இருந்து ஓடி ஒளிந்து கொள்ளுகின்றனர்; பலமுறை அவசர உதவி கேட்டு தகவல் சொன்னாலும் நேரில் முறையிட்டாலும் தலையிடுவதில்லை. அல்லது இந்துமத வெறியர்களுடன் சேர்ந்து கொண்டு, கொலை, கொள்ளை கற்பழிப்பு, தீயிடல் ஆகிய நாசவேலைகளில் ஈடுபடுகின்றனர். இதனால் இரண்டு தரப்புமே, குறிப்பாக முஸ்லீம் மக்கள் அவற்றின் மீது நம்பிக்கையிழந்து விட்டனர். அவற்றுக்கு எதிரான தாக்குதல் அல்லது விரட்டும் நடவடிக்கைகளுக்கும் இதுவே காரணம்.

அரசியல் கட்சிகள் எல்லாம் கூட்டாகவோ, தனிக் கட்சியாகவோ ஆய்வுக் குழுக்கள் அனுப்புகின்றன. மக்கள் உயிர் பறிக்கும் இப்படுகொலைகளையும் ஒவ்வொரு அரசியல் கட்சியும், அதனுள் உள்ள குழுக்களுமே தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி ஆதாயம் தேடிக் கொள்ளுகின்றன. குறிப்பாக ஆளும் கட்சிகள் இவ்வாறு செய்வதாக எண்ணும் இரண்டு மத மக்களுமே அவற்றின் அமைச்சர்கள், ஆய்வுக் குழுக்களை விரட்டியடிக்கின்றனர். ஆனால் சமரசவாத எதிர்க்கட்சிகளையும், தத்தம் மதவெறி அமைப்புகளையும் மீண்டும் நம்பவேண்டிய நிர்பந்தம் நீடிக்கிறது.

இந்நிலையில் உயிரையும் பணயம் வைத்து மதவெறியர்களின் பிடியிலிருந்து மக்களை மீட்க வேண்டியது தான் மதச்சார்பற்ற புரட்சியாளர்கள், ஜனநாயக சக்திகளின் உடனடிக் கடமை. ஏற்கனவே இக்கலவரங்கள் நடக்கும் பகுதிகளில், வெளியில் இருந்து வரும் மதவெறிக் குண்டர்களுக்கு எதிராக மதவேறுபாடின்றி பாதுகாப்பான இடங்களில் கூடித் தாக்குதல் தொடுக்கின்றனர். ஆகவே வெறுமனே மத ஒற்றுமை - சமாதானம் என்கிற பிரச்சாரம் மட்டும் போதாது. மக்களது தற்காப்பு ஒற்றுமை நடவடிக்கைகளை முன்னுதாரணமாகக் கொண்டு மதவெறியர்களை எதிர்த்துத் தாக்கும் தற்காப்புக் குழுக்களைக் கட்ட வேண்டும். இல்லையானால் இந்து மதவெறி பாசிசத்துக்கும், அதன் விளைவாய் தவறான மதவெறி அடிப்படையில் கட்டப்படும் சிறுபான்மை மதவாத பயங்கரவாதத்துக்கும் மக்கள் பலியாவதைத் தடுக்க முடியாது.

படிப்பகம்

www.padippakam.com

## கடற்படையில்

# தளபதிகளின் பதவிச் சண்டை

**கைநிறையச் சம்பளம்; உலகம் சுற்றிப் பார்க்கலாம்; இப்படிப் பதவி ஆசை காட்டித்தானே கடற்படைக்கு ஆள் சேர்க்கிறார்கள். நாட்டு விசுவாசம் எங்கே இருக்கப்போகிறது. இதன் தர்க்க ரீதியான வளர்ச்சிதான் உயர்மட்டப் பதவிச் சண்டை.**

பங்கு போடுவதில் தகராறு வரும் போதுதான் திருடர்கள் பிடிபடுகிறார்கள். பதவிச் சண்டைகள் முற்றும் போதுதான் அதிகார வர்க்கத்தின் தகிடுதத்தங்கள் வெளி வருகின்றன. இந்தியக் கடற்படையின் அட்மிரல் நட்கர்னி பதவி ஓய்வு பெறுவதையொட்டி கடற்படையின் தலைமைத் தளபதி பதவிக்கு போட்டி எழுந்தது. கிழக்குக் (கரை) கடற்படை ஆணையத்தின் தலைமை அதிகாரி ராமதாசும் மேற்கு (கரை) கடற்படை ஆணையத்தின் தலைமை அதிகாரி ஜெயினும்தான் போட்டியாளர்கள். கடற்படை உயரதிகாரிகள் இருவரின் பின்னாலும் அணிவகுத்து நின்று யுத்தத்தைத் தொடங்கினர். இந்த மோதல்கள் வழக்கமாக நடைபெறுபவைதான் என்றாலும் அவை ராணுவத்தின் இரும்புக் கோட்டைக்கு வெளியே கசிந்ததில்லை.

ராமதாசின் நெருங்கிய நண்பரான மேற்குக் கடற்படையின் ரியர் அட்மிரல் பகவத் இந்த விவகாரத்தைச் சந்திக்குக் கொண்டு வந்தார். மேற்குக் கடற்படையின் ஃபிளாக் ஆபீசராக (Flag Officer) தனக்குக் கிடைக்க வேண்டிய பதவி உயர்வு மறுக்கப்படுவதாகவும் கடற்படை தலைமையில் லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள் மலிந்து விட்டதுதான் இதற்குக் காரணம் என்றும் கூறி பம்பாய் உயர்நீதி மன்றத்தில் செப்டம்பர் 12ம்தேதி ஒரு ரிட் மனு தாக்கல் செய்தார். இதை எதிர்பார்த்த கடற்படைத் தலைமை தளபதி நட்கர்னி, தனது கும்பலைச் சேர்ந்த ரியர் அட்மிரல் கோஹ்லியை இரவோடிரவாக டெல்லியிலிருந்து பம்பாய்க்கு விமானத்தில் வரவழைத்து செப்டம்பர் 12ம் தேதி அதிகாலை 3 மணிக்கே பதவி உயர்வளித்து ஃபிளாக் ஆபீசராக பதவிப் பிரமாணமும் செய்து வைத்து விட்டார்.

தன்னுடைய பதவி உயர்வை தற்காலிகமாக இழந்த போதிலும் பகவத் தாக்கல் செய்த ரிட் மனு ராமதாசின் போட்டியாளர் ஜெயின் தலைமைத் தளபதியாக பதவி நியமனம் பெறும் வாய்ப்பைத் தடுத்து விட்டது.

கடற்படை பதவி நியமனங்கள், ஆயுத பேரங்கள், தேசப் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட முக்கியமான விஷயங்கள் குறித்து பிரதமர் வி.பி.சிங்குடன் நேரடியாகப் பேச வாய்ப்பு மறுக்கப் பட்டதால், தனக்கு நீதி மன்றம் செல்வதைத் தவிர வேறு வழியில்லாமல் போனதாக பகவத் தன்னிலை விளக்கம் கொடுத்த போதும் ராணுவத்தின் ஒழுங்கை(!) மீறி நீதிமன்றம் சென்றதற்காக விளக்கம் கோரும் நோட்டீசு அனுப்பியிருக்கிறது கடற்படைத் தலைமையகம். இவை ஒருபுறமிருக்க பகவத் தாக்கல் செய்த 400 பக்க ரிட் மனுவில் கண்டுள்ள விஷயங்கள் வீதிக்கு வந்துள்ளன.

''சென்ற ஆகஸ்டு 20ம் தேதி 'அந்தமான்' எனும் போர்க்கப்பல் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது கப்பலுக்குள் கடல்நீர் புகுந்து அது கடலில் மூழ்கியது. கப்பல் சிறிது சிறிதாகக் கடலில் மூழ்குவதையும் அக்கப்பலில் இருந்த 11 மாலுமிகளும் 3 அதிகாரிகளும் கப்பலைக் காப்பாற்றப் போராடியபடியே உயிர் விட்டதையும் இந்த பயிற்சியை வேறொரு கப்பலிலிருந்து மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்த ரியர் அட்மிரல் பி.எஸ்.தாஸ் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். இது குறித்து நடத்தப்பட்ட விசாரணையின் அறிக்கை பாதுகாப்பு அமைச்சகத்தில் உறங்குகிறது'' என்று சாடுகிறார் பகவத்.

உண்மைதான். ஆனால் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது தாஸ் மட்டுமா? இன்றைய தளபதி ராமதாசும்தான். அது மட்டுமல்ல, கப்பல் மூழ்கிக் கொண்டிருக்கும் போது அவர்கள் சாராய விருந்துக்கு கிளம்பிக் கொண்டிருந்தார்கள். தனது கோஷ்டியின் தலைவரைப் பற்றி பகவத் கண்டு கொள்ளாததில் ஆச்சரியமில்லை.

மூழ்கியது காகிதக் கப்பலல்ல; பல கோடி ரூபாய்களை விழுங்கியுள்ள போர்க் கப்பல். பயிற்சியிலேயே முழுகும் கப்பல் யுத்த காலத்தில் எப்படிப் போரிடும்? கடலில் கரைந்த பல கோடி ரூபாய்க்கும், 14 உயிர்களுக்கும் யார் பொறுப்பு? என்ன தண்டனை?

பகவத்தின் இரண்டாவது குற்றச்சாட்டு பாரபட்சம், அதிகார முறைகேடு பற்றியது. ''தன்னைவிட கடற்சேவைக் காலம் குறைவான எந்த யுத்தத்திலும் நேரடியாகப் பங்கேற்காத, ரியர் அட்மிரல் பி.எஸ்.தாஸ் என்பவர் தனக்கு முன் பதவி உயர்வு பெறக் காரணம், அவர் அன்றைய பாதுகாப்புத் துறை செயலர் பட்நாகரின் மைத்துனர் என்பதுதான். அரசாங்கம் மாறி ஜனதா தளம் வந்த பின் தாஸின் பதவி உயர்வை உறுதிப்படுத்தியது அவரது மாமனான உள்துறைச் செயலர் நரேஷ் சந்திரா.''

தனது எதிரிகளை அம்பலப் படுத்தும் பகவத் மீண்டும் ராமதாசை கண்டு கொள்ளாமல் விடுகிறார். தலைமைத் தளபதி பதவியைப் பிடிப்பதற்காகவே ராமதாஸ் மூன்று முறை டெல்லிக்குப் படையெடுத்ததையும், உயர் அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புத் துறை ராஜாங்க அமைச்சர் ராஜா ராமண்

கடலில் மூழ்கும் ஐ.என்.எஸ். அந்தமான் போர்க்கப்பல்; (உள்ளே) கப்பல் மூழ்குவதை ரசித்த கடற்படை தளபதிகள் ராமதாஸ், தாஸ்.




படிப்பகம்

www.padippakam.com

னாவை கையில் போட்டுக் கொண்டதையும் பற்றி மவுனம் சாதிக்கிறார்.

பகவத்தின் மூன்றாவது குற்றச்சாட்டு கடற்படையை ஆக்கிரமித்திருக்கும் அமெரிக்க ஆதரவு கோஷ்டியைப் பற்றியது. அமெரிக்காவில் உள்ள கடற்படை யுத்தக் கல்லூரியில் தயாரான அனைவரும் இந்தியக் கடற்படையின் உயர் அதிகாரிகளாக உள்ளனர். இந்தியக் கடற்படைக்குத் தேவையற்ற, தரம் தாழ்ந்த எ.டி.டபுள்யூ நீர் மூழ்கிக் கப்பல்கள், சீ-கிங் மற்றும் வெஸ்ட்லாண்ட் ஹெலிகாப்டர்கள் ஆகியவற்றை வாங்கியது இந்த அமெரிக்க ஆதரவு கோஷ்டி தான். இந்தியா அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலை வாங்க வேண்டும் என்று தான் சிபாரிசு செய்தது இந்த அமெரிக்க ஆதரவு கும்பலுக்கு பிடிக்கவில்லை என்றும், அதனாலேயே தன்னை எதிர்ப்பதாகவும் குற்றம் சாட்டுகிறார் பகவத். கடற்படை அதிகாரிகளின் பிள்ளைகள் பலர் அமெரிக்க குடிமகன் அந்தஸ்துடன் அங்கேயே தங்கியிருப்பதையும் பட்டியல் போட்டுக் காட்டுகிறார். ஆனால் ராமதாசின் மூன்று பெண்களும் அமெரிக்காவில் தான் குடியிருக்கின்றனர் என்பதை மட்டும் பகவத் கண்டு கொள்ளவில்லை.

கடற்படையிலுள்ள அமெரிக்க ஆதரவு கோஷ்டிகள் குளிர்சாதனப் பெட்டி, தொலைக்காட்சிப் பெட்டிகளைத் திருடிய அதிகாரிகள்... என்று பல ரகமான ஊழல்களையும் அம்பலப் படுத்துவதன் மூலம் கடற்படையின் பளிச்சிடும் வெள்ளைச் சீருடையின் உள்ளே உள்ள அழுக்குகளை சந்திக்குக் கொண்டு வந்திருக்கிறது பகவத்தின் 400 பக்க ரிட் மனு.

ஆனால் "நாட்டின் பாதுகாப்பு ரகசியங்கள் சம்பந்தப் பட்டிருப்பதாலும், ராணுவ விவகாரங்கள் குறித்த தொழில் நுட்ப அறிவு நீதிமன்றத்திற்குக் குறைவு என்பதாலும் ராணுவத்தின் பதவி உயர்வு சம்பந்தமான விவகாரங்களில் தலையிட்டு நாம் தீர்ப்பு சொல்ல முடியாது என்று நவம்பர் 29ம் தேதி உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்து விட்டது. இந்திய 'ஜனநாயகத்தின்' தூண்களில் ஒன்றாக அல்ல — முதுகெலும்பாக இருப்பது அதிகார வர்க்கமும் ராணுவமும்தான் என்று மீண்டும் ஒருமுறை நிருபணமாகி இருக்கிறது. இது மட்டுமல்ல;

கடற்படையின் உள்ளே அமெரிக்க ஆதரவு கோஷ்டிகளும், பகவத் போன்ற ரஷிய ஆதரவு கோஷ்டிகளும் உள்ளன; ஆனால் 'இந்திய' ஆதரவு கோஷ்டி எதுவும் இல்லை.

யுத்த காலத்தில் அல்ல, பயிற்சிக் காலத்திலேயே உயிரை விட்டுவிடும் தரம் கெட்ட தளவாடங்கள் பல கோடி ரூபாய் கமிஷனுக்காகவே வாங்கப்படுகின்றன.

தகுதி திறமையைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளும் மேல்சாதி அதிகார வர்க்கம் முழுவதும் சிபாரிசுகளாலும், அதிகார முறைகேடுகளாலும் நாறுகிறது.

ஓட்டுக் கட்சித் தலைவர்களும், நீதிமன்றமும், பத்திரிகைகளும் அடிக்கடி குறிப்பிடும் 'ராணுவ ரகசியம்' இதுதான் போலும்!

● அஜித்

## ராஜீவ் - சந்திரசேகர் கூட்டு உருவாக்கும்

# புது அரசியல் பாரம்பரியம்

***இதுவரையிலான மற்றபிற ஆட்சியாளர்களும் அரசியல், பொருளாதார, கிரிமினல் குற்றங்கள் செய்வதுண்டு. ஆனால் இப்போது ஆட்சிக்கு வந்திருப்பவர்கள் அவற்றையே தொழிலாகக் கொண்டவர்கள்.***

மத்திய அரசாங்கத்தைக் கைப்பற்றியுள்ள சந்திரசேகர் - தேவிலால் தலைமையிலான ஜனதா தளம் (சமாஜ்வாதி) ஒரு புதிய அரசியல் பாரம்பரியம் - பண்பாட்டை உருவாக்கி வருகிறது.

கருணாநிதி, எம்.ஜி.ஆர், ராஜீவ் போன்ற கடைந்தெடுத்த ஊறிந்த அதிகார முறைகேடு - லஞ்ச ஊழல் பேர்வழிகள் கூட பகிரங்கமாகச் செய்வதற்கு கூச்சப்படும் காரியங்களை,

பிலிப்பைன்சின் மார்க்கோஸ், ஈரானின் ஷா, உகாண்டாவின் இடி அமீன் போன்ற பாசிச சர்வாதிகாரிகள் கூட மூடி மறைத்துச் செய்த சமூக விரோத - கிரிமினல் குற்றங்களை,

பகிரங்கமாக, பெருமையோடு, அகங்காரம் - திமிரோடு செய்யும் அரசியல் பாரம்பரியம் - பண்பாட்டை இந்தச் சந்திரசேகர் - தேவிலால் கும்பல் உருவாக்குகிறது.

"பிரதமர் பதவியையே குறிவைத்துப் பேராசையுடன் அரசியல் நடத்துகிறீர்களே!" என்று சந்திரசேகரிடம் கேட்டால்,

"அதிலென்ன தப்பு! பிரதமர் பதவிக்குப் பேராசைப் படுவது ஒன்றும் கிரிமினல் குற்றமில்லையே!" என்று பதில் வருகிறது.

"பணம் - பதவியைக் கொடுத்து ஆட்சியைப் பிடித்ததாகக் கூறப்படுகிறதே!" என்று சந்திரசேகரிடம் கேட்டால்,

"அரசியல் ஒழுக்கம் - நேர்மை, நீதி - தர்மம் எல்லாம் இரட்டை வேட மோசடிப் பேர்வழிகளுக்குத்தான் முக்கியமான வார்த்தைகள். அரசியலில் உள்ள நாங்கள் எல்லோரும்தான் பணம் வாங்குகிறோம். எல்லாம் கருப்புப் பணம்" என்று பெருமையோடு ஒப்புக் கொள்கிறார்.

"அமெரிக்கா, இங்கிலாந்து என்று சுற்றுகிறீர்களே உங்களுக்கு ஏது இவ்வளவு 'பணம்?" என்று சுப்பிரமணிய சாமியிடம் முன்பு கேட்டபோது "எனக்கு வேண்டியவர்கள் ஏராளமாகத் தருகிறார்கள். நான் பிராமணன். யாரிடமிருந்தும் பிச்சை வாங்கத் தர்மப்படி இடமுண்டு!" என்று நியாயம் சொன்னார்.

இப்போது, "லட்சம் லட்சமாய் கட்சி நிதி புழங்குவதாய் வங்கி ஆதாரங்கள் வெளியிடப்பட்டுள்ளதே, உண்மையா? எப்படிக் கிடைத்தது" என்று வர்த்தக மற்றும் சட்ட - நீதி அமைச்சரான பிறகு அதே சுப்பிரமணிய சாமியிடம் கேட்டால்,

"உண்மைதான்! (சில நபர் பினாமி) ஜனதா கட்சிக்கு பலர் நிதி தருகிறார்கள். எல்லாக் கட்சிகளும்தான் வாங்குகின்றன. யார் யார் தருகிறார்கள் என்று சட்டப்படி சொல்லத் தேவையில்லை" என்று பதிலளிக்கிறார்.

பொருளாதார - நிதி மோசடிக் குற்றச் சாட்டுகளில் சிக்கியுள்ள திருபாய் அம்பானியுடன் உறவு வைத்திருப்பது பற்றி சந்திரசேகரிடம் கேட்டால்,

"தொழிலதிபர்களிலேயே மிக மோசமான கிரிமினல் அல்ல, திரு.அம்பானி. மற்றவர்களும் அவர் அளவுக்குக் கிரிமினல்கள் அல்லது புனிதர்கள்தான். திரு.அம்பானியைப் பற்றி அறியாதவர்கள் நான் அவரை வெறுக்க வேண்டும் என்கிறார்கள். நான் அப்படிச் செய்ய மாட்டேன்" என்கிறார். "திரு.அம்பானி என்னை வந்து பார்க்கத் தயங்குகிறார். அவர் ஒன்றும் குற்றம் செய்யவில்லை. பகிரங்கமாகவே என்னை வந்து பார்க்கலாம்" என்று அழைப்பு விடுக்கிறார்.

பகல்வேட, தில்லுமுல்லு - மோசடிச் சாமியார் சந்திராசாமியுடன் உள்ள நெருக்கம் பற்றிக் கேட்டால்,

"சந்திராசாமி இன்று - நேற்று என் நண்பர் அல்ல; இந்திரா காந்தி காலத்திலிருந்தே அவர் நெருங்கிய நண்பர்" என்று பெருமையோடு சொந்தம் கொண்டாடுகிறார், சந்திரசேகர்.

தான்பாத் நிலக்கரி மஃபியா கிரிமினல் தலைவன் சூர்யதேவ் சிங்குடன் உள்ள உறவு பற்றிக் கேட்டால்,

"சூரியதேவ்சிங் குடும்பம் எனது மாவட்டத்தைச் சேர்ந்தது. அவர் மீதான எந்தப் புகாரும் நிரூபிக்கப் படவில்லை. தவறெதுவும் செய்வதற்கு நான் அவருக்கு உதவ

படிப்பகம்

www.padippakam.com

வில்லை. ஆகவே, நிரூபிக்கப்படாத புகார்களுக்கு அவருடனான உறவை நான் ஏன் துண்டித்துக் கொள்ள வேண்டும்'' என்று கொலை, கொள்ளை, நிலக்கரி - ஆள் கடத்தல், கட்டாய வசூல், கற்பழிப்பு குற்றங்களுக்காக பல வழக்குகள் உள்ள நபரைப் பற்றிப் பிரதமர் கூறுகிறார்.

தேவிலால் - சௌதாலா கும்பல் மேகம் தொகுதியில் நடத்திய கொலை வெறியாட்டங்கள் பற்றிக் கேட்டால்,

''நாடு கவனம் செலுத்த வேண்டிய எவ்வளவோ பிரச்சனைகள் இருக்கின்றன. மேகம் சம்பவங்களைப் பத்திரிக்கைகள் தான் அளவுக்கு மீறிப் பெரிது படுத்துகின்றன. இது கட்சி விவகாரம்; வெளியே கொண்டு போக வேண்டாம் என்று வி.பி.சிங்கிடம் சொன்னேன்; அவர் கேட்கவில்லை. தேவிலாலைப் பகைத்துக் கொண்டார்'' என்று நாட்டுப் பஞ்சாயத்துக்காரன் போல் பேசுகிறார்.

''தவறுதலாக அரசியலுக்கு வந்துவிட்ட சிறுவன்தான் ராஜீவ்காந்தி'' என்றும், ''வி.பி.சிங்குக்கும் ராஜீவ் காந்திக்கும் இடையில் வித்தியாசம் கிடையாது'' என்றும், ''தேவிலால் ஒரு நாட்டுப்புற ஆதிக்க வாதி'' என்றும் கூறிவிட்டு இப்போது கூட்டுச் சேர்ந்துள்ளீர்களே என்று சந்திரசேகரிடம் கேட்டால்,

''அரசியலில் நிரந்தர நண்பரும் கிடையாது. எதிரியும் கிடையாது. அரசியல் என்பதே வாய்ப்பு வசதிகள், சந்தர்ப்பத்திற் கேற்ப சாதுரியமாக நடந்து கொள்வதுதான்''

என்று பச்சோந்தித் தனத்தையே நியாயப் படுத்துகிறார்.

போ.ஃபார்ஸ், நீர்மூழ்கிக் கப்பல், ஏர் பஸ் ஏ-320 விமான பேரம் ஆகிய ஊழல் விசாரணைகள் என்னவாகும் என்று கேட்டால் ''எல்லாப் பொருளாதாரக் குற்றங்களையும் ஒரே மாதிரித்தான் கையாள்வோம், அவை போலீசு சப்-இன்ஸ்பெக்டர்கள் கவனிக்க வேண்டியவை; பிரதம மந்திரியின் வேலையல்ல'' என்று அலட்சியம் திமிரோடு கூறுகிறார் சந்திரசேகர்.

சந்திரசேகர், தேவிலால், சுப்பிரமணிய சுவாமி ஆகிய இந்த கும்பலின் அன்றாட நிகழ்ச்சிகளில் தவறாது இடம் பெறுபவை: ஐந்து நட்சத்திர ஓட்டல்களில் உல்லாசம், களியாட்டங்கள்; அல்லது பரந்து விரிந்த ஆடம்பர பண்ணை - ஆசிரமங்களில் சதியாலோசனை - விருந்து; அல்லது பெரும் தரகு அதிகார முதலாளிகள், ஏகாதிபத்திய நாடுகளின் தூதர்கள் முதல் சர்வதேச ஆயுத - போதை மருந்து - கறுப்புப் பணக் கடத்தல் மற்றும் விபச்சார கிரிமினல் ம.ஃபியா கும்பல் தலைவன் ஆதனான் கஷோகி வரை ஏற்பாடு செய்யும் கேளிக்கை விருந்துகள்; அல்லது மாந்திரீக - தாந்திரீக போலி சாமியார்கள் நடத்தும் இரகசியப் பூசைகள்.

இந்தக் கும்பல் ஆட்சிக்கு வந்திருப்பதற்கும், நீடிப்பதற்கும் காரணம், இதன் பதவி வெறி மட்டும் கிடையாது. இந்தக் கும்பலின் முக்கியத் தலைவர்களும், இதன் பின்னிருந்து இயக்கும் அம்பானி - இந்துஜா - கஷோகி போன்ற சூத்திரதாரிகளும், இதைத் தூக்கி நிறுத்தியிருக்கும் ராஜீவ் போன்ற பாசிஸ்டுகளும் குறிப்பான பல குற்றங்களில் சிக்கிக் கொண்டுள்ளனர்.

வி.பி.சிங்குடைய அண்ணனின் மருமகன் சஞ்சய்சிங், இப்போது சந்திரசேகர் ஆட்சியில் செய்தித் தொடர்பு அமைச்சர். இவர் கள்ளக் காதலி அமிதா மோடியுடன் சேர்ந்து பூப்பந்து விளையாட்டு வீரர் சையது மோடி கொலை வழக்கில் சிக்கியுள்ளார்.

தரகுப் பண - அந்நிய செலாவணி மோசடியில் சிக்கியுள்ள சந்திராசாமி, தனது சீடர்களான நரசிம்மராவ் போன்றோருடன் சேர்ந்து வி.பி.சிங்குக்கு எதிராக (ஃபோர்ஜரி) கள்ள ஆவணத் தயாரிப்பு வழக்கிலும் மாட்டியுள்ளார்.

வி.பி.சிங் பெயரில் (ஃபோர்ஜரி) கள்ளக் கடித வழக்கில் சிக்கியுள்ள தேவிலாலும், அவரது மகன் சௌதாலாவும் மேகம் தேர்தல் கொலை வழக்குகளிலும் மாட்டியுள்ளனர்.

அரசியல் எதிரிகள் மீது அவதூறு பிரச்சாரம் செய்வதற்காக பொய்ப் புகார்களும், போலி ஆவணத் தயாரிப்புகளும் கொடுத்து விசாரணைகளில் சிக்கியுள்ளனர் சந்திரசேகரும், சுப்பிரமணிய சுவாமியும்.

செயற்கை நூல் - துணி ஆலை இறக்குமதி, லார்சன் அண்டு டூப்ரோ பங்கு மோசடிகளில் சிக்கிய அம்பானி, போ.ஃபார்ஸ் தரகில் சிக்கிய இந்துஜா, சுமிடோமோ எண்ணெய்க் குழாய் பேரத்தில் சிக்கிய லலித் சூரி போன்ற பல தரகு அதிகார முதலாளிகள் மீதும் வழக்குகள் உள்ளன.

பீரங்கி, நீர்மூழ்கி கப்பல், விமானம், சர்க்கரை போன்ற பல பேரங்களில் லஞ்ச ஊழல் அதிகார முறைகேடு வழக்குகளில் ராஜீவ், பலராம் ஜாக்கர், சத்தீஷ்சர்மா, சாம் பிட்ரோடா போன்ற முக்கிய உயர் அதிகாரிகள் சிக்கியுள்ளனர்.

மேற்கண்ட விவகாரங்கள் - விசாரணைகள், வழக்குகள் அனைத்துக்கும் சமாதி கட்டிவிடுவது என்பது ராஜீவ் - சந்திரசேகர் ஆகிய இரு தரப்பினரிடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தம் என்று ஏறக்குறைய எல்லா பத்திரிகைகளும், அரசியல் விமர்சகர்களும் ஊகித்தனர்.

இது ஊகமல்ல; உண்மைதான் என்பதை ஆட்சிக்கு வந்த ஒரு மாதத்துக்குள் சந்திரசேகர் - தேவிலால் கும்பல் பகிரங்கமாகவே காட்டிவிட்டது.

வி.பி.சிங்கின் 11 மாத ஆட்சிக் காலத்தில் மேற்கண்ட வழக்குகள் புலன் விசாரணையிலும், வழக்கு மன்றங்களில் பல்வேறு நிலைகளிலும் இருந்தன. சந்திரசேகர் ஆட்சிக்கு வந்ததும், முதல் வேலையாக இந்தப் புகார்களை விசாரித்த ராஜேந்திர சேகர், பூரேலால் போன்ற அதிகாரிகளை அதிகார மற்ற பதவிகளுக்கு விரட்டியது; அல்லது கையையும் வாயையும் கட்டிப் போட்டது; இந்த வழக்குகளை நடத்திய அருண் ஜெய்த்லே, சோலி சொராப்ஜி போன்ற அரசு வக்கீல்களை வீட்டுக்கு அனுப்பியது.

ராஜீவ் ஆட்சிக் காலத்தில் இந்த வழக்குகள், புகார்களை சாகடிக்கும் வேலைகளைச் செய்து வந்த ஜி.ராமசாமி என்ற ராஜீவ் - அம்பானி எடுபிடியை அரசு உயர்



டில்லி அருகே போன்சி கிராம 45 ஏக்கர் பண்ணை மாளிகை - ஆசிரம ஏரியில் படகுவிட்டு மகிழும் சந்திரசேகர்.

படிப்பகம்

www.padippakam.com

வக்கீலாகவும் (அட்வகேட் ஜெனரல்) மேலும் துளசி, கிரி, சந்திரசேகரன் போன்ற எடுபிடிகளைத் துணை உயர் வக்கீல்களாக-வும் நியமித்தது.

சந்திரசேகர் - தேவிலால் அரசாங்கம் நாடாளுமன்றத்தில் நவம்பர் 15ந்தேதி நம்பிக்கை வாக்குப் பெறுவதில் வெற்றி பெற்றது. ஆனால் அதை ராஜீவ் கும்பலோடு சேர்ந்து ஆட்சியாளர்கள் கொண்டாட முடியவில்லை. ஏனெனில் அன்றே போ∴பார்ஸ் ஊழல் வங்கிக் கணக்குகளில் ஒன்றின் மீதான ஆவணங்களை இந்திய அரசு உளவுத்துறைக்குத் தந்து விடும்படி சூரிச்சில் உள்ள சுவிஸ் உச்சநீதி மன்றத் தீர்ப்பு வந்தது. அடுத்த சில நாட்களில் இந்தியத் தூதரகத்திடம் அந்த ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டன. இன்னும் 5 ஊழல் வங்கிக் கணக்குகளைப் பெறுவதற்காக சுவிஸில் உள்ள ஜெனிவா நீதிமன்றத்திலும் வழக்கு நடக்கிறது.

ஊழல் பற்றிய உண்மை அம்பலமாகி விடும் என்று அஞ்சும் ராஜீவ் - இந்துஜா கும்பல் பினாமி மூலம் டில்லி உயர்நீதி மன்றத்தில் பொதுநலன் வழக்கு ஒன்றைத் தொடுத்துள்ளது. அதன்படி போ∴பார்ஸ் ஊழல் புலன் விசாரணையை உடனே நிறுத்த வேண்டும்; பதிவு செய்யப்பட்டுள்ள முதல் தகவல் குற்ற அறிக்கையையும் ரத்து செய்துவிட வேண்டும் என்று கோருகிறது.

சந்திரசேகர் தலைமையிலான அரசு இந்த வழக்கைப் பயன்படுத்தி போ∴பார்ஸ் விசாரணைக்குச் சமாதிகட்டி விடும் என்று கருதிய ஜனதா தளம், இரு போலிக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் மற்றும் சில தனிநபர்கள் வழக்கில் தலையிடுவதற்கான சிறப்பு மனுப் போட்டனர். வழக்கு டிசம்பர் 6ந்தேதி 'நீதி' பதி எம்.கே.சௌலா முன்பு விசாரணைக்கு வந்தது. சந்திரசேகர் அரசு சார்பாக நியமிக்கப்பட்டிருந்த துணை உயர் வழக்கறிஞர் எம்.கே.டி.துளசி எழுந்தார். முந்தைய அரசு தொடுத்துள்ள முதல் தகவல் குற்ற அறிக்கை அடிப்படை ஆதாரமற்றது; ஆரம்ப விசாரணை மட்டுமே செய்ய வேண்டும்; வழக்குப் போட்டிருக்கக் கூடாது என்று வாதாடினார். இது உண்மையில் தானே வாதாடும் தரப்பைத் தோற்கடிக்கும் வகையிலானது; 'நீதி'மன்றத்தின் மூலம் போ∴பார்ஸ் விசாரணையை முடக்குவதற்கு இப்போதைய ஆட்சியாளர்கள் முயன்றனர்.

புலன் விசாரணை செய்துவந்த சி.பி.ஐ. இணை இயக்குநர் கே.மாதவன் ஆத்திரமடைந்து தனது கருத்தைச் சொல்ல அனுமதி கேட்டார். 'நீதி'பதி சௌலா அனுமதி மறுத்து அடக்கிவிட்டார். ஜனதா தளம் சார்பாக ராம்ஜேத்மலானி என்ற வக்கீல் வாதாட முயன்றபோது, அவரையும் சௌலா அடக்கினார். சிறப்புக் குறுக்கீடு மனுவை அனுமதிப்பதா இல்லையா என்பதைக் கூட பிறகு தான் சொல்லமுடியும்; எப்போது முடிவு செய்வது என்பதையும் கூறமுடியாது என்று தடலடியாக சௌலா மறுத்துவிட்டார். ராம் ஜேத்மலானி ஆத்திரத்துடன் வெளியேறினார்.

'நீதி'பதி சௌலாவைப் பதவி நீக்கம் செய்ய எம்.பிக்களிடையே கையெழுத்து வேட்டை நடக்கிறது; ஒருதலைப்பட்சமாக



வழக்கை விசாரிப்பது, ஓய்வு பெறுவதற்கு முன் (டிசம்பர் 21ந்தேதி) வழக்கை முடிப்பதற்காக அதீத அக்கறை, வேகம் காட்டுவது; எதிர்த்தரப்பு வாதத்தைக் கேட்கவே மறுப்பது ஆகிய காரணங்களைக் கூறி உச்சநீதி மன்றத்திடம் மேல்முறையீடு செய்து ராம் ஜேத்மலானி முதலியவர்கள் வெற்றிபெற்றுள்ளனர்.

சௌலாவையும், துளசியையும் நீக்கும்படி பலர் கோருகின்றனர். ஆனால் சந்திரசேகர் கும்பலின் முக்கியப் புள்ளியும் சட்டம் - நீதித்துறை மந்திரியுமான சுப்பிரமணியம் சுவாமி சி.பி.ஐ. இணை இயக்குநர் குறுக்கீடு செய்தது முறைகேடானதெனச் சாடியுள்ளார்; அரசு வக்கீல் துளசியின் வாதம் திருப்தியளிக்கிறது; இருந்தபோதும் அவருடைய உயிருக்கு மிரட்டல் வந்துள்ளதால் இன்னொரு அரசு வக்கீலான கிரி வாதாடுவார் என்று அறிவித்துள்ளார். மீண்டும் விசாரணையைத் துவங்கிய சௌலா எதிர் மனுதாரர் தமது உயிருக்கு மிரட்டல் விடுவதாக நாடகமாடினார்.

இந்த விவரங்கள் அனைத்தும் காட்டுவது என்ன? போ∴பார்ஸ் பீரங்கி பேர ஊழலில் உண்மை விவரங்கள் அதிகாரபூர்வமாக வெளிவரக்கூடிய இச்சமயத்தில் அதை எப்படியாவது அமுக்கி அழித்துவிட ராஜீவ் - சந்திரசேகர் கூட்டு முடிவு செய்து விட்டது. அதற்காக நீதித் துறையையே கேடாகப் பயன்படுத்தவும் துணிந்துவிட்டது. நீதி, நேர்மையெல்லாம் தனக்குத் துச்சமெனக் காட்டிவிட்டது.

தனக்குப் பணிந்து போகும் நீதித்துறைப் பிரிவை இவ்வாறு பயன்படுத்தும் போதே, வளைந்து கொடுக்கும் பிரிவை வேறு வகையில் முடக்கவும் தயாராகும் என்பதையும் காட்டி விட்டது. தேவிலால் - சௌதாலா கும்பல் நடத்திய மேகம் தேர்தல் படுகொலைகளை விசாரிக்க நியமிக்கப்பட்ட 'நீதி'பதி டி.பி.மதோன் விசாரணைக் கமிஷனை மண்ணைப் போட்டு மூடிவிட்டது. போ∴பார்ஸ் வழக்கிலாவது சில கட்சிகள், நபர்கள் எதிர்த்து வழக்காடினர். மேகம் விசாரணைக் கமிஷனுக்கு சமாதி கட்டிய போது யாருமே மூச்சுவிடவில்லை. மவுனமாக இருந்து அங்கீகாரமளித்து விட்டன.

தேவிலாலின் இரு மகன்களிடையே நடந்த பதவிச் சண்டையின் காரணமாக மேகம் தொகுதி இடைத்தேர்தலில் சௌதாலா தோல்வி காணும் நிலை ஏற்பட்டது. பலரைக் கொன்று, போலீசை வைத்து கள்ள ஓட்டுப்போட்டு வெற்றிபெற சௌதாலா முயன்றார். ஆனால் வி.பி.சிங் துணையோடு பத்திரிகைகளும், தேவிலாலின் இன்னொரு மகன் ரஞ்சித்சிங்கும் கடுமையாக எதிர்த்து அம்பலப்படுத்தவே தேர்தலே ரத்தானது.

மீண்டும் நடந்த இடைத்தேர்தல்களில் கௌரவத்துக்காக மேகம் தொகுதியிலும், பதவியைப் பிடிக்க இன்னொரு தொகுதியிலும் சௌதாலா போட்டியிட்டார். மேகம் தொகுதியில் தோல்வி நிச்சயமென்று நம்பியதால் தானே நிறுத்திய சுயேச்சை வேட்பாளர் அமிர் சிங்கை ஆட்கள் வைத்துக் கொன்று தேர்தலை ரத்து செய்துவிட்டார். வேறு ஒரு தொகுதியில் வென்றாலும், நிர்ப்பந்தம் காரணமாக அரியானா முதல்வர் பதவி இழந்தார்.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு வி.பி. சிங் - தேவிலால் இடையிலான பேரத்தை வைத்து திடீரென மீண்டும் முதல்வரானார். அருண்நேரு கும்பலிடமிருந்து எதிர்ப்பு நிர்ப்பந்தம் காரணமாக சௌதாலாவும், (∴போர்ஜரி) போலிக் கடிதம் காரணமாக தேவிலாலும் பதவியிழந்தனர். அப்போது தேவிலாலை மிரட்டவும் அரசியல் பேரம் நடத்தவும் வி.பி.சிங் போட்டதுதான் மதோன் விசாரணைக் கமிஷன். மீண்டும் தேவிலாலுடன் சமரசம் செய்துகொள்ள வி.பி.சிங் முயன்றதால் விசாரணைக் கமிஷன் இயங்குவதற்கு எவ்வித ஏற்பாடும் செய்யாமலிருந்தார்.

விசாரணைக் கமிஷனுக்காக முதலில் ஒரு பாழடைந்த மாளிகை ஒதுக்கப்பட்டது. பிறகு தினசரி 10,000 ரூபாய் வாடகையில் ஒரு ஐந்து நட்சத்திர ஓட்டல் அறை போடப்பட்டது; 'நீதி'பதி தானே 2,500 ரூபாய் தின

படிப்பகம்

www.padippakam.com



கஷோகியின் பிறந்தநாள் விழாவில் மாலையணிவித்து மகிழும் சுப்ரமணிய சுவாமி.

சரி வாடகை அறைக்கு மாறிப் போனார். ஆறுமாதம் காலக்கெடு கொடுக்கப்பட்டிருந்தும் பலமுறை கேட்கும் விசாரணையைத் துவங்குவதற்குத் தேவையான ஊழியர்கள், அதிகாரிகள் முதலிய எந்த அடிப்படை வசதியும் செய்து தரப்படவில்லை.

கடைசியாக பத்து நாள் அவகாசம் கொடுத்து புதிய அரசுக்கு 'நீதி'பதி மதோன் எச்சரிக்கைக் கடிதம் கொடுத்தார். அதற்கும் பதில் வராமல் போகவே அவர் டிசம்பர் 6ந்தேதி ராஜினாமா செய்துவிட்டார். அதுவே வசதியாகப் போய்விட்டதென்று கருதும் சந்திரசேகர் - தேவிலால் கும்பல் சௌதாலாவுக்கு அரியானா முதல்வர் பதவி முடிசூட்டத் தயாராகி வருகிறது.

தேர்தல் படுகொலைக் குற்றத்தில் சிக்கிக் கொண்டவரே இப்படித் தப்பிவிடும் போது ஃபோர்ஜரி மற்றும் அந்நியச் செலாவணி மோசடிக் குற்றவாளியான சந்திராசாமி விவகாரத்தை இன்னும் எளிதாக முடித்துவிட்டது சந்திரசேகர் அரசு. அவர் கட்சிமாறிகளை விலைக்கு வாங்கவும், ராஜீவுடன் பேரம் பேசவும் வசதியாக சந்திராசாமி மீது பிடிவாரண்டு இருந்தபோதும் இந்தியாவுக்கு இரகசியமாக வந்துபோனார். சந்திரசேகர் பதவியேற்ற பிறகு எதிர்பார்ப்பு ஜாமீன் பெற்று, நியூயார்க் கஷோகி அடுக்கு மாளிகையில் இருந்து மரியாதைகளுடன் அழைத்து வரப்பட்டுள்ளார்.

இந்த அரசாங்கத்திடம் எந்தக் காரியம் முடியவேண்டுமானாலும் புதுடில்லியிலுள்ள சந்திராசாமியின் மாளிகை - ஆசிரமத்தில் வந்து குவிகிறார்கள், தொழிலதிபர்களும் வர்த்தகர்களும். நாட்டிலேயே அது பெரிய அரசியல் - அதிகாரத் தரகு மையமாகி விட்டது.

இதற்கிடையே சந்திரசேகரின் வீட்டில் 'தோஷம்' இருப்பதாகக் கூறி, பூசை நடத்துவதற்காக டன்டன்னாக நெய்யும், சந்தனக் கட்டைகளும் பிறவும் வாங்கிக் குவிக்கப்படுகிறது.

இதைவிட முக்கியமாக நாட்டின் எரியும் பிரச்சனையாகிவிட்ட அயோத்தி விவகாரத்தைத் தீர்க்கும் பொறுப்பும் சந்திராசாமியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அயோத்தி பாபரி மசூதியை இந்து மதவெறியர்களிடம் ஒப்படைத்து, இடித்து, ராமன் கோவில் கட்டுவதை சந்திரசேகர் - ராஜீவ் கூட்டு ஏற்றுக் கொண்டுவிட்டது. ஆனால் அதன் பெருமை ஆர்.எஸ்.எஸ். பாரதீய ஜனதா முதலிய எதிர்த்தரப்புக்குப் போய்விடக்கூடாது என்பதில் அக்கூட்டு குறியாக உள்ளது. தானே பெருமை தேடிக்கொண்டு இந்துக்களிடம் ஓட்டுவாங்கி ஆதாயம் அடைய முயலுகிறது.

இதனால்தான், ராஜீவ் ஆட்சிக் காலத்திலிருந்தே அயோத்தி விவகாரம் தீவிர நெருக்கடிக்குள்ளாகி இருந்தபோதும் இப்போது திடீரென்று ஒரு திட்டம் வைத்து ஏற்கும்படி சந்திரசேகர் ஆட்சியை நிர்ப்பந்திக்கிறது, ராஜீவ் கும்பல். சந்திராசாமி மூலம் இந்து மதவெறி அமைப்புகளில் பிளவை ஏற்படுத்தி தன் கீழ் ஒரு புது இந்து மதவெறி அமைப்பை உருவாக்க ராஜீவ் - சந்திரசேகர் கூட்டு முயலுகிறது. அதற்காக இந்து மத சாமியார்கள், மடாதிபதிகள், தர்மாச்சாரிகள், சாதுக்கள், ஆதீனகர்த்தர்கள், மகந்துகள் 300 பேரை சந்திரசேகரின் அரியானா - போன்சி கிராம பண்ணை மாளிகை - ஆசிரமத்தில் கூட்டி விருந்தும் சதியாலோசனையும் நடத்தினர். ராஜீவ், சந்திரசேகர், தேவிலால், சௌதாலா முதலிய சதிகாரத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

இவ்வாறு ஏற்கனவே இந்த ஆட்சியாளர்களும் இதன் புரவலர்களும் புரிந்த குற்றங்களில் இருந்து தப்புவதோடு மேலும் பல வற்றை செய்யவும் துவங்கியுள்ளனர்.

ஏர்பஸ் ஏ-320 விமானங்கள் 2,500 கோடி ரூபாய்க்கு ராஜீவ் அரசு வாங்கியதில் ஊழல் நடந்துள்ளது. அவை இரண்டு விபத்துக்குள்ளாகி 250 பேருக்கு மேல் மாண்டனர். தரை இறக்கி முடக்கிவைக்கப் பட்டிருந்த அவ்விமானங்களை மீண்டும் பறக்க விட்டுள்ளது சந்திரசேகர் ஆட்சி.

அரியானாவில் ஒரு களியாட்டப் பூங்கா (டிஸ்னிலாந்து பாணி) அமைக்க தேவிலால் - சௌதாலா குடும்பம் திட்டமிட்டு 1,000 ஏக்கர் நிலத்திலிருந்து விவசாயிகளை விரட்ட முயன்றது. கடும் எதிர்ப்பு வரவே வி.பி.சிங் அரசு அத்திட்டத்தை நிறுத்தி வைத்திருந்தது. இப்போது மீண்டும் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

ராஜீவ் - சந்திரசேகர் கூட்டை உருவாக்கிய முக்கியப் புள்ளிகளுள் ஒருவர், அரசியல் தரகர், மராட்டிய முதல்வர் சரத்பவார். பம்பாயில் பல ஆயிரம் கோடி ரூபாய் புறம்போக்கு நில மோசடி - ஊழல்களில் சிக்கியுள்ளார். அது பற்றி விசாரணையே கிடையாது எனப் புது ஆட்சி மறுத்துவிட்டது.

பாலஸ்தீன விடுதலைக்கு ஆதரவு தெரிவித்து, இஸ்ரேலை அங்கீகரிக்க மறுப்பதுதான் இதுவரை இந்திய அரசின் அதிகார பூர்வக் கொள்கை. அதற்கு எதிராக சி.ஐ.ஏ. மற்றும் மொசாத்துடன் தொடர்பு கொண்டுள்ள சுப்பிரமணியம் சுவாமி வர்த்தகம், சட்டம் - நீதி மந்திரியாகியுள்ளார். சமீபத்தில் 100 உலக நாடுகளின் வர்த்தக மந்திரிகள் மாநாடு பிரெஸெல்ஸில் நடந்தது. அங்கே சுப்பிரமணியம் சுவாமி இஸ்ரேலிய வர்த்தக மந்திரியை அரசுக் கொள்கையை மீறிச் சந்தித்துப் பேசினார்.

அரசுத் துறை நிறுவனம் ஒன்றின் மூலம் 1000 கோடி ரூபாய்க்கு ஜப்பானுடன் ஒப்பந்தம் முடியவுள்ளது. இத்தருணத்தில் அந்த நிறுவனத்தையே கலைத்து, புதுப்பேரம் துவங்கும்படி உத்திரவிட்டுள்ளார் சுப்பிரமணியம் சுவாமி. அவர் பிரெஸெல்ஸ் போன சமயம் அதிகாரிகள் யோசனையின் பேரில் அந்த உத்தரவை ரத்து செய்தார், பிரதமர். திரும்பி வந்த சுப்பிரமணியம் சுவாமி ஆத்திரமடைந்து அதிகாரிகளைப் பதவி மாற்றம் செய்து பழிவாங்கினார்.

மற்றபிற அரசியல் தலைவர்கள், கட்சிகளும் இப்படிப் பல குற்றங்களைச் செய்வதுண்டு. ஆனால் இப்போதைய ஆட்சியாளர்களோ சமூக விரோதக் கிரிமினல் குற்றங்களையே திட்டமிட்டு அமைப்பு ரீதியில் தொழிலாகச் செய்துவருபவர்களாக இருக்கிறார்கள்.

நீதி, நேர்மை, ஒழுக்கம், நாணயம் என்று எதையும் பார்க்கத் தேவையில்லை; பணம் - பதவியை மட்டும் குறிவைத்து அரசியல் நடத்துவதில் தவறில்லை; கொள்ளையடிப்பதுதான் அரசியல் என்றான பிறகு அதையே பகிரங்கமாகச் செய்வதில் என்ன தவறு என்பது போன்ற புதிய அரசியல் பாரம்பரியம் - பண்பாட்டைத் தான் இப்போதைய ஆட்சியாளர்கள் படைத்து வருகிறார்கள்.

பிளவுவாத, வகுப்புவாதச் சக்திகளின் பேரழிவு - நாசவேலைகளில் இருந்து தப்புவதற்கு வேறுவழியே கிடையாது என்கிற பெயரில் இவர்களிடம் ஆட்சி ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. திருடன் கையில் பெட்டிச் சாவியைத் தருவதே புத்திசாலித்தனம்; கற்பழித்தவனுக்கே மணமுடித்து வைப்பதுதான் மானத்தைக் காப்பாற்றும் வழி என்பது போன்று முடிவு செய்துள்ளார்கள். இது, எல்லா ஓட்டுக் கட்சிகள் மற்றும் நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பின் ஓட்டாண்டித் தனத்தையே நிரூபிக்கிறது.

● ஆர்.கே.



படிப்பகம்

www.padippakam.com



பர்மா எல்லையில் தேடுதல் வேட்டையில் இறங்கியுள்ள இந்திய ராணுவத்துக்கு உணவு விநியோகிக்கும் ஹெலிகாப்டர். இவ்வளவு வசதிகள் இருந்தும் கூட போராளி களில் ஒருவரைக் கூட பிடிக்க முடியவில்லை.

# அசாம்: பாசிச கும்பலின் பகற்கனவு பலிக்காது

"அசாமில் சட்டம் - ஒழுங்கு மோசமடைந்து விட்டது; பிளவுவாத, தீவிர வாத அசாம் ஐக்கிய விடுதலை முன்னணி(U.L.F.A.) யின் கொட்டம் எல்லை மீறிப் போய் விட்டது. மகந்தா அரசு கைகட்டி வேடிக்கை பார்ப்பதோடு, இந்த தேசவிரோத அமைப்புக்கு மறைமுகமாக உதவியும் செய்கிறது" என்று கூறி மகந்தா ஆட்சியைக் கலைத்து, அசாம் முழுவதும் கலவரப் பகுதியாக அறிவித்து, "பஜ்ராங் நடவடிக்கை" என்ற பெயரில் இந்திய ராணு வத்தின் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டது ராஜீவ் - சந்திரசேகர் கும்பல்.

"பிரிவினைவாத, பயங்கரவாத அ.ஐ.வி. முன்னணியை விரைவிலேயே அழித்தொழித்து விடுவோம்; பொடியன் களை (போராளிகளை) ஒரே வாரத்தில் கைது செய்து விடுவோம்" என்று கொக்கரித் தது பிரார் என்ற அரசு பயங்கர வாதியின் தலைமையிலான ராணுவ கும்பல்.

ஆனால் அத்தனையும் புஸ்வாணமாகி விட்டது. "பஜ்ராங் நடவடிக்கை" படு தோல்வியில் முடிந்து விட்டது. இன்றுவரை அ.ஐ.வி. முன்னணியின் உயர்மட்டத் தலை வர்களில் ஒருவரைக் கூட கைது செய்ய முடி யவில்லை. அவர்களது ஆயுதங்களையும் கைப்பற்ற முடியவில்லை. அவர்கள் நாட்டை விட்டுத் தப்பியோடியிருக்க வேண் டும்; அல்லது சாதாரண உடையில் மக்களு டன் கலந்திருக்க வேண்டும் என்று தோல் வியை ஒப்புக் கொண்டு கையைப் பிசைகி றது ராணுவம்.

10,000க்கும் மேற்பட்ட, மலைகளிலும் காடுகளிலும் பயிற்சி பெற்ற 2 பட்டாலியன் படைகளைக் குவித்து, உளவுத் துறையின் செய்தித் தொடர்பு வசதிகளையும், ஏ.கே.47 ரகத் துப்பாக்கியிலிருந்து எம்-22 ரக துப் பாக்கி வரை ஆயுதமாகக் கொண்டு, ஹெலி காப்டர் வசதியுடன் தேடுதல் வேட்டையில் இறங்கிய ராணுவம் அ.ஐ.வி. முன்னணி யின் சாதாரண ஸ்குவாடு தலைவரைக் கூட கைது செய்ய முடியவில்லை. 2,000லிருந்து 5,000 கொரில்லா போராளிகளைப் பிடிக்க அதைவிட ஒரு மடங்கு அதிகமான ராணு வத்தைக் குவித்தும், அசாமிலிருந்து பர்மா எல்லை வரை அனைத்து வழிகளையும் அடைத்தும் கூட போராளிகள் யாரையும் பிடிக்க முடியவில்லை.

பர்மா எல்லையிலுள்ள லஹிபதார் காட்டினுள்ளே தமது ரகசிய தளப் பகுதியை நிறுவியிருந்த அ.ஐ.வி. முன்னணியினர், பஜ்ராங் நடவடிக்கை பற்றிய செய்தி அறிந்த தும் இரண்டாம்தர ஆயுதங்களைக் கைவிட்டு விட்டு தப்பியோடி தலைமறை வாகி விட்டனர். கைவிடப்பட்ட அந்த ஆயு தங்களைக் கைப்பற்றி, ஏதோ பெருமளவு ஆயுதங்களைக் கைப்பற்றி விட்டதாகக் காட்டி ஏய்ப்பதை முதலாளித்துவப் பத்திரிக் கைகளே அம்பலப் படுத்துகின்றன. முதல் சுற்று நடவடிக்கையில், மக்கள் மத்தியி லுள்ள 20 ஆதரவாளர்களைத்தான் ராணு வத்தால் கைது செய்ய முடிந்தது. பின்னர் இப்போது 400 பேர்வரை கைது செய்து கணக்கு காட்டினாலும் முக்கிய தலைவர்கள் யாரையுமே பிடிக்க முடியவில்லை.

கலைக்கப்பட்ட அசாம் அரசின் உள் துறை அமைச்சராக இருந்த புகான், "நாங் கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற் றம் சாட்டிய மத்திய அரசு பெருமளவு ராணு வத்தைக் குவித்து சாதித்தது என்ன?" என்று அதன் தோல்வியை தோலுரித்துக் காட்டுகி றார். தனது தோல்வியை மறைக்க இந்திய ராணுவம் பசப்பும் நியாய வாதங்கள் அனைத்தும் மேலும் மேலும் அம்பலமாகி வருகின்றன. 40 ஆண்டுகளாக நாகா, மிஜோ முதலான தேசிய இனப் போராளிக ளுக்கு எதிராக போராடி காடுகளிலும் மலை களிலும் பயிற்சி பெற்ற ராணுவம், ஈழத்தில் புலிகளின் கொரில்லா தாக்குதலைச் சமா ளித்து அனுபவம் பெற்ற இந்திய ராணுவம், "லஹிபதார் காடு மிக அடர்த்தியானது; பட் டப் பகலிலேயே 10 மீட்டருக்கு அப்பா லுள்ள பொருள் கூட தெரியாத அளவுக்கு இருள் சூழ்ந்திருக்கும்; எனவேதான் விரை வாக முன்னேற முடியவில்லை" என்று சாத கமற்ற நிலையில் போரிடுவதாகப் பசப்புகி றது.

"அசாமில் பஜ்ராங் நடவடிக்கையைத் துவங்குவதற்கு 9 நாட்களுக்கு முன்னேரே, அதாவது நவம்பர் 19-ம் தேதியன்றே போராளிகள் தலைமறைவாகி விட்டனர். அ.ஐ.வி. முன்னணியின் தலைமைச் தளபதி பருவா, தனது தோழர்களுக்கு 17-ம் தேதி யிட்டு எழுதிய கடிதம் ஆதாரமாகக் கிடைத் துள்ளது. மகந்தா அரசுதான் அவர்களுக்கு ரகசியமாக தகவல் கொடுத்திருக்க வேண் டும்" என்று பழியை மகந்தா அரசு மீது போட்டு தோல்வியை மறைக்கப் பார்க்கிறது இந்திய ராணுவம். ஆனால் தனது ஆட்சிக் கலைப்பு பற்றி கடைசி நிமிடம் வரை தனக்கு அறிவிக்கப்படவில்லை என்று குற்றம் சாட் டுகிறார் மகந்தா.

போராளிகளைத் தேடிப் பிடிப்பதில் தோல்வி கண்ட ராணுவம், நூற்றுக் கணக்கா னோரை அவர்கள் கொன்றொழித்துப் புதைத்த இடுகாட்டை கண்டு பிடித்து விட்ட தாகக் கூறி, அ.ஐ.வி. முன்னணியை ஒரு பயங்கரவாத அமைப்பாக சித்தரித்து பீதி யூட்டும் வகையில் பிரச்சாரம் செய்தது. ஆனால் அந்த இடுகாட்டில் காணப்பட்ட சடலங்களில் ஒன்றில் கூட துப்பாக்கித் தோட்டா துளைத்ததற்கான அடையாளமே இல்லை என்று இப்போது நிரூபணமாகியுள் ளது.

போராளிகளைப் பிடிக்க முடியாத ஆத் திரத்தில் அப்பாவி பொது மக்களைத் தாக்கி பயங்கரவாத பீதியூட்டுவதையே ராணுவம் தனது தொழிலாகக் கொண்டுள்ளது. சட்டம் - ஒழுங்கைக் காப்பதாகக் கூறிக் கொண்டு ராஜீவ் - சந்திரசேகர் கும்பல் அசாமில் அரசு பயங்கரவாதத்தை ஏவிய பிறகு, அசாமின் சட்டம் - ஒழுங்கு நிலைமை முன்னிலும் மோசமடைந்து விட்டது. பஞ்சாப், காஷ்மீ ரைப் போலவே, போராளிகளைத் தேடுவது என்ற பெயரில் ராணுவம் நடத்தும் அட்டூழி யங்கள் பட்டியலிட முடியாத அளவுக்குப் பெருகி விட்டன. கவர்னர் தாக்கர் வேறு வழியின்றி, ராணுவம் அட்டூழியம் செய்த பகுதிகளில் நீதி விசாரணைக்கு உத்திரவி டும் அளவுக்கு நிலைமை மோசமடைந்து விட்டது.

புலுகோகாய் என்ற 16 வயது இளம் பெண் ராணுவ வெறிநாய்களால் கற்பழிக் கப் பட்டதோடு மிருகத்தனமாக தாக்கப் பட் டார். "அவர்கள் அ.ஐ.வி.மு. போராளி

படிப்பகம்

www.padippakam.com

களை எனது சேலைக்குள் தேடினார்கள்'' என்று வெறுப்பை உமிழ்கிறார் அவர். இவரைப் போலவே லஹிபதார் பகுதியில் ராணுவக் கும்பலின் பாலியல் வன்முறைக்கு ஆளானவர்கள் கூறும் துயரக் கதைகள் இப்போது கேசெட்டுகளில் பதிவு செய்யப்பட்டு இப்பகுதி முழுவதும் அசாம் மாணவர் சங்கத்தால் பிரச்சாரம் செய்யப்படுகிறது.

டின்சுகியா கிராமத்தில் புகுந்த ராணுவம் ஆண்களை அடித்து விரட்டி விட்டு பெண்களை ராணுவ முகாமுக்கு இழுத்துச் சென்று கற்பழித்து விட்டு மறுநாள் அவர்களை விடுவித்தது. இதேபோல போர்ஜான், பலிஜான், கெண்டுகுர், டிக்மோய் முதலான பகுதிகளில் நடந்துள்ளது என்று அசாம் கண பரிஷத்தின் எம்.பி.யான டேவிட் லெட்ஜர் குற்றம் சாட்டியுள்ளார். இன்னும் பல கிராமங்களிலிருந்து உழைக்கும் மக்கள் வெளியேறி அருகிலுள்ள அரசு கட்டிடங்களில் அகதிகளாகக் குவிகின்றனர். ''விளைநிலங்களின் மீது கவச வண்டி ஏற்றி ராணுவம் நாசப்படுத்தி விட்டது. அறுவடைக்கு காத்திருந்த பயிர்கள் பாழாகி விட்டன. எங்களது அற்ப உடமைகளும் சூறையாடப்பட்டு விட்டது. இனி எங்களால் எப்படி வாழ முடியும்?'' என்று வேதனையோடு குமுறுகின்றனர் நௌஹாங், லஹிபதார் மற்றும் பிரம்மபுத்திரா கரையோரப் பகுதிகளில் வசிக்கும் உழைக்கும் மக்கள். சுருக்கமாகச் சொன்னால் பஞ்சாப், காஷ்மீரைப் போலவே ராணுவம் சுதந்திரமாக கலவரம் செய்யும் இன்னுமொரு மாநிலமாக அசாம் மாற்றப்பட்டு விட்டது.

ஆனால் பாசிச ராஜீவ் - சேகர் கும்பல் கனவு காண்பதைப் போல அரசு பயங்கரவாத அடக்கு முறையின் மூலம் அசாம் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது; தேசிய சுயநிர்ணய உரிமைப் போரை அடக்கிவிடவும் முடியாது. காஷ்மீர் மற்றும் வட கிழக்கிந்திய மக்களின் சுயநிர்ணய உரிமைப் போரைப் போலவே அசாமும் தீராத பிரச்சினையாகி விடும். துரோகிகளை வைத்து தேர்தல் நடத்தி தமது பொம்மையாட்சியை தற்காலிகமாக நிறுவி தேசிய நீரோட்டத்தில் இழுத்துவிட்டதாக மாய்மாலம் செய்ய முடியுமே தவிர, சுயநிர்ணய உரிமைப் போரை ஒருக்காலும் ஒடுக்கிவிட முடியாது.

வடகிழக்கு, வடமேற்கு இந்தியாவை அரசு பயங்கரவாதப் பிடிக்குள் தள்ளிய பாசிச கும்பல் இப்போது அசாம் மாநிலத்தையும் ராணுவ ஆட்சியின் கீழ் தள்ளி விட்டுள்ளது. சட்டம் - ஒழுங்கைப் பற்றி நீலிக் கண்ணீர் வடிக்கும் இப் பாசிச கும்பல், போதைக் குறைக்கு தான் ஆளும் உ.பி. ஆந்திர மாநிலங்களிலேயே வகுப்புக் கலவரங்களைத் தடுக்க வக்கின்றி ராணுவத்தைக் குவித்துள்ளது. இந்நிலையில் படர்ந்து வரும் பாசிச அடக்குமுறை - ராணுவ அட்டூழியங்களுக்கு எதிராகவும், அசாம் மாநிலத்திலிருந்து ராணுவத்தை உடனடியாக வெளியேற்றக் கோரியும், அசாம் ஐக்கிய விடுதலை முன்னணியின் நியாயமான தேசிய சுயநிர்ணய உரிமைப் போரை ஆதரித்தும் புரட்சிகர அமைப்புகளின் பின்னே உழைக்கும் மக்கள் அணி திரண்டு போராட வேண்டியது நேரமிது!

● குமார்

# தி.மு.க. ஆட்சி கலைக்கப்படுமா?

***மீண்டும் கருணாநிதியின் ஆட்சிக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. சந்திரசேகர் ஆட்சியை ஜெயலலிதா கட்சியின் பதினொரு எம்.பி.க்கள் ஆதரிப்பதற்கு நிபந்தனையாக கருணாநிதி ஆட்சியைக் கவிழ்த்து, மாநில இடைத் தேர்தல்கள் நடத்துவதை சந்திரசேகர் - ராஜீவ் கூட்டு ஏற்றுக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது! இதற்கு முகாந்திரமாக தமிழ்நாட்டில் சட்டம் - ஒழுங்கு சீர்குலைந்து விட்டது, ஆட்சியைக் கலையென்று வாழப்பாடி, ஜெயலலிதா, தா.பாண்டியன் போன்றதுகள் கூச்சல் போடுகின்றன. கருணாநிதியோ, ஈழ ஆதரவு இயக்கங்கள், ஈழப்போராளிகள், அகதிகள், தன்னுரிமை இயக்கத்தவர்கள், கம்யூனிசப் புரட்சியாளர்கள் மீது பாய்கிறார். அதன் மூலம் சட்டம் - ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதாக நாடகமாடுகிறார். அதே சமயம் லட்சியத்துக்காக, ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் பதவியைத் துறக்கத் தயார் என்று சவடால் அடிக்கிறார். தனது பரம்பரை ஆட்சியை நிறுவுவதைத் தவிர கருணாநிதிக்கு வேறெதுவும் லட்சியம் இல்லை என்பதுதான் உண்மை.***

''தி.மு.க. ஆட்சி 'டொட்டடைங்' - சௌதாலா பேட்டி'' - இது 'அரசியல்' சமுதாய வார இதழ் தராசு ஏட்டின் (11.12.90) தி.மு.க. ஆட்சிக் கவிழ்ப்பு பற்றியான செய்தி!

''பிரதமர் சந்திரசேகர், தி.மு.க. ஆட்சியைக் கவிழ்க்கும் எண்ணம் இல்லை என்று தான் சொன்னாரே தவிர, கலைக்க மாட்டோம் என்று சொல்லவில்லை'' - இது தமிழக காங்கிரசு தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தியின் தி.மு.க. ஆட்சிக் கவிழ்ப்பு பற்றியான காந்தீய விளக்கம்!

''ஜனவரி 7-ந் தேதி தி.மு.க. ஆட்சிக்கு சாவு மணி அடிக்கப்படும்'' - இது 'புரட்சித் தலைவி' ஜெயலலிதா தன்னை சுற்றியிருக்கும் சீடர்களுக்கு வழங்கியிருக்கும் அரசியல் அருள் வாக்கு!

''... நம்மால் உருவான அரசு! நாமும் அரசியலில் ஓர் அங்கம் என்பதை இப்படிப்பட்ட கால கட்டத்தில் மிகமிக உணர்வது அவசியம்'' - இது 5 கோடி தமிழ் இனத்தின் 'காவலரான' கருணாநிதியின் திடீர் பகுத்தறிவு ஜபம்! ஆட்சிப்பறிப்பு ஆபத்தால் ஏற்பட்டிருக்கும் பதவிக் காய்ச்சலின் அறிகுறி!

- இவையெல்லாம் எதை காட்டுகின்றன. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசு என்பது பிரதமரின் கழிப்பறை காகிதம்! தேவையானால் துடைத்துக் கொள்ளப் பயன்படும்; இல்லையானால் இன்றைய தி.மு.க. அரசு போல கிழிந்து தொங்கும்!

மக்களிடம் ஓட்டுக்கு அலையும் போது இந்த பல வண்ண கும்பல்கள் எல்லாம் என்ன சொல்கின்றன? ''மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு'' ''ஜனநாயகமே உயிர்மூச்சு'' என்று நம்மை வளைய வருகின்றன. இப்போது இவர்களுக்குத் தேவை என்றவுடன் தி.மு.க. ஆட்சியை கலைப்பது என்பது அவசரத்துக்கு ஒதுங்குவது போல் சர்வசாதாரண விஷயமாகி விட்டது!

இதில் வெட்கக்கேடு என்னவென்றால் நாடாளுமன்றத்தில் 60 பிரதிநிதிகளை மட்

ஆட்சிக் கலைப்பு பீதியில் சந்திரசேகரிடம் கெஞ்சும் நாஞ்சில் மனோகரன்.





படிப்பகம்

www.padippakam.com

## புரட்சியாளர்கள் மீது கருணாநிதி அரசு பாய்ச்சல்!



அரசுக்கெதிராக மக்களை வன்முறைக்குத் தூண்டியதாக (பிரிவு 124A) சென்ற 1.12.90 அன்று கைது செய்யப்பட்ட விவசாயிகளின் விடுதலை முன்னணியின் மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் மாதுவும், 3.12.90 அன்று கைது செய்யப்பட்ட கள்ளக்குறிச்சி ஒன்றிய செயலர் தோழர் கதிர்வேலனும் கோவை மத்திய சிறையில் ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மீது மட்டுமின்றி ம.க.இ.க. பொதுச் செயலாளர் தோழர் மருதையன், ம.க.இ.க.வின் மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் சீனிவாசன், உசிலை வட்டார வி.வி.மு. செயலர் தோழர் கே.பி.ராமசாமி ஆகியோர் மீதும் பிரிவு 124Aயின் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இத்தனை பேரும் சேர்ந்து எப்போது, எங்கே வன்முறையைத் தூண்டினார்கள் என்கிறீர்களா? செப்டம்பர் மாதம் பெரியார் மாவட்டம் குருவாரெட்டியூரில் நடந்த வி.வி.மு.வின் ஒன்றிய மாநாட்டில் வன்முறையைத் தூண்டினார்களாம்! மாநாட்டில் பேசியதற்குத்தான் இந்த வழக்கு! செப்டம்பரில் 'தூண்டிய' வன்முறைக்கு டிசம்பரில் நடவடிக்கையாம்! வளர்ந்து வரும் விவசாயிகள் விடுதலை முன்னணியை ஒடுக்குவதற்காக காவல்துறை தீட்டும் சதித்திட்டம்தான் இது என்பதில் என்ன சந்தேகம்?

டுமே ஏலத்தில் எடுத்து ஆட்சி நடத்தும் ஒரு கும்பல் பெரும்பான்மையுடன் இருக்கும் ஒரு ஆட்சியை கலைத்து விடுவேன் என்று மிரட்டுகிறது! வாலைச் சுருட்டிக் கொண்டு கலக்கத்துடன் நிற்கிறது, பெரும்பான்மை மக்கள் அரசு! என்னே...! பாராளுமன்ற ஜன நாயக 'மகிமை'!

தி.மு.க. ஆட்சியைக் கலைப்பதற்கு இவர்கள் சொல்லும் காரணங்கள் இதைவிட வேடிக்கை!

தமிழ்நாட்டில் சீர்கெட்டுள்ள சட்டம் - ஒழுங்கு, இனக்கலவரங்கள், விடுதலைப் புலிகள் மற்றும் தீவிரவாதிகளால் பெருகிவரும் பயங்கரவாதம்; கொலை, கொள்ளை, வன்முறை, ஆயுதச் சந்தை, ஆயுதக் கலாச்சாரம், ஆளும் அரசியல் தலைவர்களால் மறைக்கப்பட்ட கொலைகள், கடலோரப் பகுதிகளில் நடக்கும் கள்ளக்கடத்தல், இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கடத்தப்படும் அத்தியாவசியப் பொருட்கள், தி.மு.க.வினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இருக்கும் நெருக்கமான உறவு... இவைதான் தி.மு.க. ஆட்சியை கலைப்பதற்கு இவர்கள் சொல்லும் முக்கிய காரணங்கள்!

இதில் விலாநோகும் சிரிப்பு என்னவென்றால், தமிழ்நாட்டின் சட்டம் - ஒழுங்கு நிலைமையை நேரில் காண அவசரமாக வந்தார் மத்திய உள்துறை அமைச்சர் சுபோத் காந்த் சகாய்! வழியிலேயே ஆந்திர மாநிலத்தில் இறங்கிவிட்டார். காரணம், காங்கிரசு - ராஜீவ் சீரிய சித்தாந்த தலைமையின் கீழ் இயங்கும் அம் மாநிலத்தின் தலைநகரம் திறந்த வெளி சுடுகாடாக மதவெறிக் கலவரங்களால் பற்றி எரிகிறது! காங்கிரசு பெண் எம்.எல்.ஏ. ஒருவரே அங்கு கலவரம் செய்யும் தலைமறைவு கிரிமினல் கும்பலுக்கு தலைமை வகிக்கிறார்!

அவ்வளவு ஏன்? இப்போது நாடாளுமன்ற இடைத் தேர்தல் நடத்தி மக்களிடம் அனுமதி வாங்கி ஆட்சி நடத்த முடியாது என்று ராஜீவ் - சந்திரசேகர் கும்பல் சொன்னதே, அதற்கு காரணம் என்ன? மதக்கலவரம் - வன்முறையால் நாடே ரத்தத்தில் மிதக்குமாம்! அப்படியானால் இந்திய நாடே தமிழ்நாட்டை விட மோசமாகத்தானே இருக்கிறது...? இந்த லட்சணத்தில் தமிழ்நாட்டின் சட்டம் - ஒழுங்கு நிலையை ராஜீவ் - சந்திரசேகர் உன்னிப்பாக கவனிக்கிறார்களாம்!

டெல்லி போன ஜெயலலிதா அங்கிருந்து கருணாநிதி ஆட்சியை கலைக்காமல் தமிழகம் திரும்ப மாட்டாராம்! எடுபிடி பத்திரிக்கைகள் ஜம்பமடித்துக் கொள்கின்றன. ஆந்திராவில் தனது திராட்சைத் தோட்ட பங்களாவில் இருந்துக் கொண்டு தொலைபேசி மூலமே ராஜீவிடம் அரசியல் நிலவரம் பேசுகிறாராம்! மத்திய வர்த்தக மந்திரி சுப்பிரமணியசாமி ஜெயலலிதா கருத்துக்கு முழு ஆதரவாம்! இன்னொரு பக்கம் வாழப்பாடி, ராஜீவ் மூலம் சந்திரசேகரை நிர்பந்திக்கிறாராம்!

இதிலிருந்து என்ன தெரிகிறது? ஓட்டு போட்ட மக்கள் எல்லாம் வெத்து வேட்டுகள்! மக்களால் ஒதுக்கப் பட்டவர்கள்தான் இன்று நாட்டை யார் ஆள்வது என்பதை தீர்மானிக்கும் உரிமை படைத்தவர்கள்! இதுவும் நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மகிமையோ! என்ன இழவோ!

மறுபுறம் ஆட்சிக் கவிழ்ப்பு மிரட்டலுக்கு எதிராக கருணாநிதி உதார் விடும் போதே அவரது நடுக்கம் தெரிகிறது! தி.மு.க. கட்சி செயற்குழு மற்றும் தி.மு.க. மந்திரி சபை ஆகியவைகளைக் கூட்டி அதற்கெதிராக கண்டனம் செய்கிறார்; தீர்மானம் நிறைவேற்றுகிறார்! கூட்டணி கட்சி நபர்களையும் தி.மு.க. நாலாந்தர மேடைப்பேச்சாளர்களையும் விட்டு மத்திய அரசுக்கு எதிராக பல்லைக் கடிக்கிறார். வி.பி.சிங்கை அழைத்து வந்து கொள்கை மாறாதவராக, ஆட்சிக் கவிழ்ப்புக்கு பயப்படாதவராக காட்டிக் கொள்கிறார். கூடவே திரைமறைவில் ராஜீவ் - சந்திரசேகர் காலைக் கும்பிடவும் ஆளை அனுப்புகிறார். இதற்காக, சந்திரசேகரின் நீண்டநாள் நண்பர் மனோகரனை பின்வாசல் வழியே அனுப்பினார்.

விசயம் வெளியே தெரிந்தவுடன், மனோகரன் சொந்த வேலைக்காக போனதாக புளுகினார். 'சந்திரசேகர் அறிவாளி! அவருக்கு தெரியும், தமிழ்நாட்டில் சட்டம் - ஒழுங்கு எப்படியிருக்கிறது என்று முதுகு சொறிகிறார். புரட்சிகர அமைப்புகளின் முன்னணியாளர்களையும் (பார்க்க பெட்டி செய்தி), ஈழப போராளிகளையும் கைது செய்து சிறையில் அடைக்கிறார். அவர்கள் மீது, தேசிய பாதுகாப்புச் சட்டம் போன்ற கொடிய சட்டங்களைப் போட்டு, மத்திய அரசின் கடைக்கண் பார்வைக்கு ஏங்குகிறார்.

இனமான கருணாநிதி, பார்ப்பன ராஜீவ் கும்பலிடம் ஏன் இப்படி வளைந்து நெளிந்து நிமிர்ந்து குனிகிறார்? காரணம், இதே கருணாநிதி 10 ஆண்டுகளுக்கு முன் காங்கிரசுக்கு - அதன் தலைவி இந்திராவுக்கு, வாழப்பாடி ராமமூர்த்திக்கு அண்ணனாக செயல்பட்டு ஆட்சியிலிருந்த எம்.ஜி. ஆர். அரசைக் கவிழ்த்தவர்.

1980 ஆம் ஆண்டு நடந்த எம்.பி. தேர்தலில் கருணாநிதி - இந்திரா கூட்டு பெருவாரியாக வெற்றி பெற்றது. 2 இடங்களை மட்டும்தான் அ.தி.மு.க. பெற்றது. உடனே, எம்.ஜி.ஆர். அரசைக் கலைக்குமாறு கருணாநிதி, ஊளையிட்டார். இந்திரா கலைத்தவுடன், தனது எம்.பி. தண்டபாணி மூலம் பாராளு மன்றத்திலேயே அதற்கு நன்றி தெரிவித்தார். பிறகு எம்.ஜி.ஆர். வாழப்பாடி ராமமூர்த்தியாக மாறினார்! கருணாநிதி ஆட்சியை கலைக்கச் சொல்லி 1976-ஆம் ஆண்டில் நடையாய் நடந்தார். 'கம்யூனிஸ்ட்டு' கல்யாணசுந்தரம் எம்.ஜி. ஆருடன் 'கட்டு' தூக்கித் திரிந்தார்! எம்.ஜி. ஆர். ஆசையையும் நிறைவேற்றி வைத்தார் அன்னை இந்திரா!


ஆக, கழகங்களின் அரசியல் கலாச்சாரமே இம்மாதிரி 'ஜனநாயகம்' மணக்கும் கொள்கை அடித்தளத்தின் மீது எழுப்பப்பட்டதுதான்! எதிரியை வீழ்த்தச் சொல்லி எஜமானனை முதுகில் தூக்கிச் செல்லும் அரசியல் அலிகள் இவர்கள்! பழிவாங்கப்பட்ட கும்பல் ஜனநாயகம் பற்றி வாய்வலிக்க பேசும்! பழிதீர்த்த கும்பல் அதை பார்த்து ரசிக்கும்! ''சர்வாதிகாரத்துக்கு சாவுமணி'', ''ஜனநாயகப் படுகொலை'' என்று சொரணை இல்லாமல் ஏசிக்கொள்ளும்... இப்போதும் அதுதான் நடக்கிறது... காது புளித்து போகிறது!

● பச்சையப்பன்

படிப்பகம்

www.padippakam.com

# அயோத்தி:



# அகழ்வாராய்ச்சி மோசடி

**அயோத்தி பாபர் மசூதி உள்ள இடத்தில்தான் ராமர் பிறந்தார்; அங்கு ராமர் கோவில் இருந்து, இடித்து, மசூதி கட்டப்பட்டது என்பதை நிரூபிக்க வேண்டியதில்லை; ஆதாரம் தேவையில்லை (கிடையாது) என்று இவ்வளவு காலமும் கூறிவந்த இந்து மதவெறியர்கள் இப்போது அகழ்வாராய்ச்சிச் சான்றுகள் இருக்கிறது என்கிறார்கள். கேட்பவர்கள் முட்டாள்களா — நம்புவதற்கு!**

சிறிதும் கூச்சமோ வெட்கமோ இல்லாமல் முதல்நாள் பேசியதை மறுநாள் மாற்றிப் பேசுகிறது ஆர்.எஸ்.எஸ். கும்பல். பாபர் மசூதி விவகாரம் உயர்நீதி மன்றத் தீர்ப்பின் அடிப்படையில் தீர்க்கப்படலாம் என்று வி.பி.சிங் அரசு கூறிய போது ''இது மத நம்பிக்கை பற்றிய பிரச்சினை — இதில் எந்த கோர்ட்டும் தலையிட்டு தீர்ப்பு வழங்க முடியாது'' என்று திமிராகப் பதிலளித்த இந்து மதவெறியர்கள், இப்போது அகழ்வாராய்ச்சி 'ஆதாரங்களுடன்' வருகிறார்கள்.

1975 - 80-இல் பாபர் மசூதியைச் சுற்றிலுமுள்ள பகுதிகளில் நடைபெற்ற ''ராமாயணம் - அகழ்வாராய்ச்சி''யில் கண்டுபிடிக்கப்பட்ட ஆதாரங்கள் பாபர் மசூதி ஒரு இந்து கோயிலை இடித்து அதன்மீது கட்டப்பட்டதை நிரூபிப்பதாக இந்தியத் தொல்லியல் துறையின் முன்னாள் இயக்குனர் பி.பி. லால் நவம்பர் 18ம் தேதி சென்னையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் கூறியிருக்கிறார். அதைத் தொடர்ந்து, அந்த அகழ்வாராய்ச்சியில் 'பார்வையாளராக' இருந்த அலகாபாத் அருங்காட்சியகத்தின் ஓய்வு பெற்ற இயக்குனர் எஸ்.பி.குப்தா என்பவர் எழுதிய கட்டுரை தினமணியிலும் (நவ.26) இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேட்டிலும் வந்துள்ளது. ''ராம ஜென்ம பூமியில் (ராமன் பிறந்த இடத்தில்) பாபர் மசூதி'' என்று தலைப்பிட்டு அக்கட்டுரையை வெளியிட்டுள்ளன ஆர்.எஸ்.எஸ்-ஸின் அதிகார பூர்வமற்ற ஏடுகளான கோயங்கா பத்திரிகைகள்.

### ஆர்.எஸ்.எஸ். ''ஆய்வாளர்''களின் ஆதாரங்கள்!

கோயிலை இடித்துத்தான் பாபர் மசூதியைக் கட்டினான் என்று இந்துக்கள் கருதுவதாகவும், அவ்வாறில்லையென முஸ்லீம்கள் கருதுவதாகவும், தான் ஒரு தொல்லியல் ஆய்வாளன் என்ற முறையில் கருத்துத் தெரிவிப்பதாகவும் பீடிகை போட்டு கீழ்க்கண்ட 'ஆதாரங்களை' அடுக்கியுள்ளார் குப்தா. அவற்றின் சுருக்கம்:

''பாபர் மசூதியை ஒட்டி மேற்குப் புறத்திலும் தெற்குப் புறத்திலும் நான்கு அகழிகள் வெட்டப்பட்டன. தெற்கு அகழியில் அரை மீட்டர் ஆழத்தில் தூண்களைத் தாங்குவதற்காக உள்ள செங்கல் அடித்தளங்கள் இரண்டு வரிசைகளில் காணப்பட்டன. மசூதிக்கு அடியில் வெட்டிப் பார்த்தால் மேலும் பல தூண்களின் அடித்தளங்கள் கிடைக்கக் கூடும். பாபர் மசூதிக்குள் இருக்கும் கருங்கல் தூண்களைவிட இந்தச் செங்கல் அடித்தளங்களின் சுற்றளவு அதிகமாக இருப்பதால் இவைதான் அவற்றின் அடித்தளமாக இருக்க வேண்டும்.

தற்போது பாபர் மசூதியிலுள்ள கல் தூண்களைப் போன்ற மேலும் இரு தூண்கள் ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் கிடக்கின்றன. அந்தக் கற்களின் வகை பாபர் மசூதித் தூண்களின் கல் வகையைச் சார்ந்ததே. எனவே இடிக்கப்பட்ட கோயிலின் தூண்கள்தான் அவை. அதில் காணப்படும் சிற்பங்கள் 11ம் நூற்றாண்டைச் சேர்ந்தவை.

அகழ்வாராய்ச்சியில் நீல நிறத்தில் பூக்கள் வரையப்பட்ட வெள்ளைப் பீங்கான் துண்டுகளும் கிடைத்தன. இவை 15ம் நூற்றாண்டு இஸ்லாமியக் கலாச்சாரத்தைச் சேர்ந்தவை.

சுருங்கச் சொன்னால் 11ம் நூற்றாண்டில் இங்கே ஒரு இந்துக் கோயில் எழுப்பப்பட்டிருக்கிறது. அது 16ம் நூற்றாண்டில் (பாபர் காலத்தில்) இடிக்கப்பட்டு அந்த இடிபாடுகளைப் பயன்படுத்தியே மசூதி கட்டப்பட்டிருக்கிறது.''

### டெல்லி பேராசிரியர்களின் மறுப்பு!

குப்தாவின் இந்தக் கட்டுரை வெளிவந்தவுடனே டெல்லி ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள் ரோமில்லா தபர், சர்வபள்ளி கோபால், கே.என்.பணிக்கர் ஆகியோர் இதை மறுத்து வெளியிட்ட அறிக்கையில் பி.பி.லால், எஸ்.பி.குப்தா ஆகியோரின் ''ஆய்வு முடிவுகளை'' அம்பலப் படுத்தியுள்ளனர்.

''1975 - '80 இல் நடத்தப்பட்ட ஆய்வின் முடிவுகள் ஏன் பத்தாண்டுகளுக்குப்

படிப்பகம்

www.padippakam.com

பின் இப்போதுதான் முதன்முறையாக வெளியிடப் படுகின்றன? ராம ஜென்ம பூமியை வைத்து நடக்கும் அரசியலுக்கு உதவுவதற்காகத் தரப்படும் புதிய 'ஆதாரம்' தானே இது? அகழ்வாராய்ச்சியில் கிடைக்கும் தடயங்கள் தானே வரலாற்றை விளக்குவதில்லை. தடயங்களின் அடிப்படையில் வரலாற்று அறிஞர்கள் கொடுக்கும் விளக்கங்கள் வேறுபடலாம். ஆனால் வேறு யாரும் பரிசீலிக்க வாய்ப்பில்லாமல் அகழிகள் மூடப்பட்டு விட்டன. பூமியின் மண் அடுக்குகள் புரட்டிப் போடப்பட்டு விட்டதால் இனி அவற்றைப் பரிசீலிப்பதும் கடினம்.

தற்போது இவர்கள் கொடுத்துள்ள ஆய்வறிக்கையும்கூட பாபர் மசூதி இருக்கும் இடத்தில் ஏற்கனவே கோயில் இருந்ததை நிரூபிக்கவில்லை. மசூதியின் சுற்றுச் சுவருக்கு வெளியே உள்ளதாகக் கூறப்படும் செங்கல் அடித்தளங்கள் மசூதியின் உள்ளேயும் இருக்க வேண்டும் என்பதில்லை. அந்த வட்டாரத்தில் இருந்த சிதிலமடைந்த கோயிலின் தூண்கள் கூட மசூதியைக் கட்டுவதற்குப் பயன்படுத்தப் பட்டிருக்கலாம். (பழங்காலத்தில் இது பரவலாக நடந்துள்ளது). செங்கல் அடித்தளங்களின் மீது வளைவுகள் நிறுவப் பட்டிருக்கலாம். அவ்வாறான வளைவுகள் அந்த நாளில் ஏராளமாக இருந்தன. எனவே இது கோயில் தூண்தான் என்று சொல்வதற்கும் எவ்வித ஆதாரமும் கிடையாது. ஒரு கிலோ மீட்டருக்கு அப்பால் கண்டுபிடிக்கப் பட்டதாகக் கூறப்படும் தூண்களின் கற்கள் வேறு பல இடங்களிலும் பயன்படுத்தப் பட்டுள்ளன. பாபர் மசூதியில்தான் இத்தகைய கற்களாலான தூண் இருப்பதாகக் கூறுவது தவறு.''

ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகப் பேராசிரியர்களுக்கு பதிலளித்த குப்தா அந்தப் பகுதியில் 84 தூண்களைக் கொண்ட கோயில் ஒன்று இருந்ததாக பண்டைய சமஸ்கிருத இலக்கியம் ஒன்று குறிப்பிடுவதாகவும் அதில் 14 தூண்களைப் பயன்படுத்தித்தான் பாபர் மசூதி கட்டப்பட்டிருக்க வேண்டும் என்றும் சாதிக்கிறார். ஆனால் மீதம் 70 தூண்களுக்கான அகழ்வாராய்ச்சி ஆதாரம் எதையும் காட்டவில்லை.


பி.பி.லால், எஸ்.பி.குப்தா ஆகியோர் தற்போது வெளியிட்டுள்ள ஆதாரங்கள் பாபர் மசூதியைத் தகர்ப்பதற்கான ஆர்.எஸ்.எஸ்-ஸின் அடுத்த கட்ட இயக்கத்திற்கு மக்களை உசுப்பி விடுவதற்காகத்தான் என்பதில் ஐயமில்லை. இவர்கள் தொல்பொருள் ஆராய்ச்சி நிபுணர்கள் என்பதைவிட இந்தத் துறையில் ஒளிந்திருக்கும் ஆர்.எஸ்.எஸ்-ஸின் ஆட்கள் என்பதே பொருத்தமானது. அயோத்தி விவகாரத்துடன் மட்டும் இவர்களின் கண்டுபிடிப்புகள் முடிந்து விடவில்லை. செப்டம்பர் 1990-ல் ஆர்.எஸ்.எஸ்-ஸின் அதிகாரபூர்வ ஆங்கில ஏடான 'ஆர்கனைசரு'க்கு அளித்துள்ள பேட்டியில் சிந்து சமவெளி நாகரீகத்தை ஆரிய நாகரீகம் என்றும் அது கங்கைச் சமவெளி வரை பரவியிருந்தது என்றும் கூறிகிறார் லால். லாலின் குழுவைச் சேர்ந்த இன்னொரு ஆய்வாளர் சிந்துவெளி நாகரிகத்தை 'இந்து ராஷ்டிரம்' என்று அழைக்கலாம் என்றும் அதற்கான ஆதாரங்கள் இருப்பதாகவும் கூறுகிறார்.

## ''இந்தி – இந்து – இந்தியா''

தேசிய மொழி என்ற பெயரில் இந்தி மொழி ஆதிக்கம், தேசியம் என்ற பெயரில் இந்து தேசியம், ஒருமைப்பாடு என்ற பெயரில் தேசிய இன ஒடுக்குமுறை, அகண்ட பாரதம் எனும் பிராந்திய மேலாதிக்க வெறி ஆகியவை அனைத்தும் இணைந்த கொள்கைதான் இந்து மதவெறி பாரதிய ஜனதா - ஆர்.எஸ்.எஸ் கும்பலின் இந்து ராஷ்டிரக் கொள்கை. இந்து மதவெறியை எதிர்ப்பதாகக் கூறும் கட்சிகள் இதே விஷயங்களை வெறும் வார்த்தைகளில் கூறுகின்றன. இந்து மதவெறியை எதிர்த்த இயக்கத்தில் ''மதசார்பற்ற ஜனநாயகவாதிகள்'' என்ற பெயரில் உலவும் இந்தப் போலிகளை இனங்காண்பது அவசியம். ஆர்.எஸ்.எஸ். இந்து மதவெறியர்களுக்கு எதிராகவும், இப்போலிகளை அம்பலப்படுத்தியும் மக்கள் கலை இலக்கியக் கழகம் தொடர்ச்சியாக அரங்கக் கூட்டங்களை நடத்துகிறது. நவம்பர் - 23 திருச்சியிலும், நவ - 27 கோவையிலும், நவ - 28 தஞ்சையிலும், நவ - 30 சென்னையிலும் நடைபெற்ற கூட்டங்களில் ம.இ.க.வின் பொதுச் செயலர் தோழர் மருதையனும், டிச - 8ம் தேதி மதுரையில் ம.க.இ.க.வின் மாநிலப் பொருளாளர் தோழர் காளியப்பனும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த முன்னணியாளர்களும், மதச் சார்பின்மையை ஆதரிப்போரும், ஆர்.எஸ்.எஸ்.க்கு வால்பிடிக்கும் ஓட்டுக் கட்சிகளால் விரக்தியுற்ற முஸ்லீம் இளைஞர்களும், முதியோரும் பங்கேற்றனர்.

எது மதவெறி? எது மதச்சார்பின்மை? ஆர்.எஸ்.எஸ்.ஸின் முஸ்லீம் எதிர்ப்பு வெறிக்கு காரணம் என்ன? இந்திய 'தேச விடுதலைப் போராட்டம்' மதச்சார்பற்றதா? காந்தி - நேரு கும்பலின் மதச்சார்பின்மை எவ்வாறு போலியானது? இவை போன்ற பல்வேறு விஷயங்கள் வரலாற்று ரீதியாக விளக்கப்பட்டன. கூட்டத்தின் இறுதியில் பார்வையாளர்களின் கேள்விகளுக்கு பதில் அளிக்கப்பட்டது. இந்து மதவெறிக்கு எதிரான கருத்துப் போராட்டத்திற்கு உதவும் வகையில் அமைந்ததென பார்வையாளர்கள் பாராட்டினர். கூட்டங்கள் தொடரும்...



இட்லரின் ஆரிய இன வெறிக்கும், யூத எதிர்ப்பு வெறிக்கும் ஏற்ப வரலாறு, விஞ்ஞானம் ஆகிய அனைத்தையும் திரித்து எழுதிய நாஜி 'வரலாற்றாசிரியர்கள், விஞ்ஞானிகளி'ன் வரிசையில் வைக்கப்பட வேண்டியவர்கள்தான் இந்த 'ஆய்வாளர்கள்.'

இந்து மதவெறியின் ஆதிக்கம் அதிகரிக்க அதிகரிக்க இது போன்ற 'முற்றிலும் புதிய' ஆதாரங்கள் அடுக்கடுக்காக வரத் தொடங்கும். வரலாறு தலைகீழாகப் புரட்டப்படும். பாபர் மசூதி இருந்த இடத்தில் ஏதோவொரு இந்துக் கோயில் இருந்தது என்பதுதான் லால் - குப்தா கும்பலின் தற்போதைய 'கண்டுபிடிப்பு'. ஆனால் இடிக்கப்பட்டது ராமன் கோயில்தான் என்பதும் அதுதான் ராமன் பிறந்த இடம் என்பதும்தான் ஆர்.எஸ்.எஸ் - அத்வானி கும்பலின் வாதம். இதற்கும் கூட ஏதேனும் கோமாளித் தனமான ஆதாரங்களை அவர்கள் உருவாக்கக் கூடும்.

எந்த ஆதாரத்தையும் தடயத்தையும் பரிசீலிப்பதற்கு முன் அது யாரால் முன் வைக்கப்படுகிறது என்பதை கவனிக்க வேண்டியுள்ளது. இந்து மதவெறியர்கள் வரலாற்றை ஆய்வு செய்யவில்லை; இந்து ராஷ்டிரம் அமைக்க விரும்பும் தங்கள் நோக்கத்திற்கேற்ப வரலாற்றைத் திரிக்கிறார்கள்; பொய்த் தடயங்களை உருவாக்குகிறார்கள். இவற்றை அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டியது அவசியமானதுதான். எனினும் இந்து மதவெறியர்கள் எழுப்பும் ஒவ்வொரு பிரச்சினைக்கும் தொல்லியல் ஆய்வு அகழியில் இறங்கி நின்று கொண்டு பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. அந்த அகழியொன்றில் இந்து மதவெறியைப் புதைப்பதுதான் இதற்குத் தீர்வு!

● மனோகரன்

படிப்பகம்

www.padippakam.com

# அவதூறுகளையே விமர்சனங்களாக்கும் வீரமணி கும்பல்

*மார்க்சிய - லெனினிய ஆசான்களும் சரி, பெரியாரும் சரி அவரவர் ஏற்றுக் கொண்ட சித்தாந்தங்களுக்குத் தகுதியான முறையில் வாழ்ந்து காட்டினர். ஒருவரைச் சிறுமைப்படுத்தித்தான் மற்றவரைப் பெருமைப்படுத்த வேண்டும் என்கிற அவசியமே கிடையாது; அது சரியுமில்லை. ஆனால் 'உண்மை' ஏடு அவ்வாறுதான் செய்துள்ளது.*

கேடயம் ஏட்டிற்கு 'உண்மை' ஏடு எழுதிய பதிலை 'புதிய ஜனநாயகம்' தான் பார்ப்பனத் தனமாகத் திரித்தது என்கிறது 'உண்மை' ஏடு. அதேசமயம் மீண்டும் மார்க்சிய - லெனினிய ஆசான்களின் மீது ஆபாசமான வக்கிரமான அவதூறுகளைத் தான் எழுதியுள்ளது.

மார்க்ஸ் குடும்பத்தினர் சடங்குகளுடன்தான் குதூகலமாக 'கிறிஸ்மஸ்' கொண்டாடினர் என்று சாதிக்கும் 'உண்மை' ஏடு மார்க்சிய - லெனினிய வாதிகள் சடங்குகளின்றி அவரவர் மதப் பண்டிகைகளைக் கொண்டாடலாமா என்று கேட்கிறது. பெரியாரின் துணைவியார் நாகம்மையார், ஜென்னியைப் போல எந்த மதப் பண்டிகையையும் கொண்டாடவில்லை என்கிறது.

'உண்மை' ஏடு மேற்கோள் காட்டும் அதே நூலில்தான் மார்க்சின் மருமகன் பால் லாபர்க் பின்வருமாறு எழுதியுள்ளார்: ''1881 டிசம்பர் 2ந்தேதி கம்யூனிஸ்டாகவும் லோகாயத வாதியாகவும் வாழ்ந்த திருமதி மார்க்ஸ் காலமுற்றாள்...'' ''டிசம்பர் 5ந்தேதி ஹைகேட் இடுகாட்டில், மந்திர நீர் தெளிக்கப்படாத இடத்தில் அவளது சடலம் புதைக்கப்பட்டது'' (மார்க்சையும் எங்கெல்சையும் பற்றிய நினைவுக் குறிப்புகள் பக்:127).

இங்கே லோகாயதவாதி என்பது மதம், கடவுள் ஆகியவற்றில் நம்பிக்கையற்றவர் என்பதைத்தானே குறிக்கிறது. (லோகாயதவாதம் என்பது தி.க.வின் கொச்சையான குதர்க்கமான நாத்திகம் போன்றதல்ல. கடவுள், மதம் ஆகியவற்றில் நம்பிக்கை இல்லாத இயங்கியல் அணுகுமுறையும் பொருள் முதல்வாத வியாக்கியானமும் அடிப்படையாகக் கொண்ட அறிவியல் - பகுத்தறிவுக் கண்ணோட்டம்). ஆகவே மதத்தின் மீதோ, மதச் சடங்குகளின் மீதோ மார்க்ஸ் குடும்பத்துக்கு நம்பிக்கை இருந்து மத விழாக்களைக் கொண்டாடினர் என்று 'உண்மை' ஏடு எழுதுவது அவதூறுதான்.

மத நம்பிக்கைகள் இல்லாத போதும் பகுத்தறிவாளர்கள் சமூக ரீதியில் வாழும் போது அண்டை அயலார்கள் பண்டிகைகளைக் கொண்டாடுவதால் சடங்குகளற்ற முறையில் குழந்தைகளுக்காக ஏதாவது ''ஏற்பாடு'' செய்யும் நிர்ப்பந்தம் வரும். அதைப் போல்தான் மார்க்ஸ் குடும்பத்திலும் நடந்தது; குழந்தைகளுக்கு ஆடைகள், துப்பாக்கிகள் போன்ற பொம்மைகள், சமையல் பாத்திரங்கள், இசைக்கருவிகள் முதலானவை அன்பளிப்புகளாக நண்பர்களிடம் இருந்து வந்தன; சில பழவகைகள் இருந்தன; குழந்தைகளை மகிழ்வூட்டுவதற்காக கிறிஸ்மஸ் மரம் அலங்கரித்து மாலைப் பொழுதைக் கழித்தனர்.

முதலாளித்துவ அறிவாளிகளாலும், ஏடுகளாலும் மார்க்ஸ் அளவுக்கு அவதூறுகளுக்கு இலக்கானவர்கள் எவரும் கிடையாது. மார்க்ஸ் உண்மையிலேயே இறந்துவிட்டார் என்று எங்கெல்ஸ் அதிகார பூர்வமாக அறிவிக்காதவரை யாருமே அச்செய்தியை நம்பவில்லை. ஏனெனில் அந்த அளவு மார்க்ஸ் இறந்து விட்டதாக பல முறை பொய்ச் செய்திகளை எதிரிகள் பரப்பியிருந்தனர். லோகாயத வாதத்தைப் படைத்துப் பிரச்சாரம் செய்து வந்து மார்க்ஸ் மதச் சடங்குகளுடன் 'கிறிஸ்மஸ்' கொண்டாடியிருந்தால் அந்த எதிரிகள் என்ன செய்திருப்பார்கள் என்பது கூடவா 'உண்மை' ஏட்டிற்கு உரைக்கவில்லை.

கார்ல் மார்க்ஸ் குடும்பம் வறுமையில் உழன்றது. உணவிற்காக, ரொட்டித் துண்டுக்காக துயரப்பட்டது என்றெல்லாம் எழுதும் 'உண்மை' ஏடு, அது கிறிஸ்மஸைக் குதூகலமாகக் கொண்டாடியது என்று கொஞ்சமும் மனிதத் தன்மையற்ற விதத்தில் விமர்சிக்கிறது. இப்படித்தான் எங்கெல்ஸ் உல்லாச களியாட்டங்கள், விருந்துகள், கேளிக்கைகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டார் என்று எழுதுகிறது. முதலாளி வாழ்க்கையை உண்மையில் விருப்பத்தோடு எங்கெல்ஸ் ஏற்றுக் கொண்டிருந்தாரா? மார்க்ஸின் மகள் எலியனோர் பின்வருமாறு எழுதுகிறார்:

''இந்த நிர்ப்பந்த வேலையின் இறுதிக் கட்டத்தினை அவர் அடைந்தபொழுது நான் எங்கெல்சுடன் இருந்தேன். இத்தனை ஆண்டுகளிலும் அவர் எத்தனை கஷ்டங்களை அனுபவித்திருப்பார் என்பதை நான் கண்டறிந்தேன். கடைசித் தடவையாக அலுவலகத்திற்கு போவதற்காக அவர் தமது காலணிகளை மாட்டிக் கொண்டு 'கடைசித் தடவை!' என்று வெற்றி முகத்தோடு முழக்கம் செய்ததை என்னால் என்றுமே மறக்க முடியாது.

சிலமணி நேரங்களுக்குப் பிறகு அவருக்காக நாங்கள் வாயிலில் காத்துக் கொண்டு நின்றிருந்தோம். அவர் வசித்திருந்த வீட்டிற்கு எதிரிலுள்ள சிறிய வயல் பரப்பில் அவர் வந்து கொண்டிருப்பதைக் கண்டோம். அவர் தமது கைத்தடியினைச் சுழற்றியவாறு பாடிக் கொண்டே வந்தார். அவர் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது. பிறகு நாங்கள் விருந்துக்கு ஏற்பாடு செய்து, ஷாம்பெயின் மது அருந்தி இதைக் கொண்டாடி மகிழ்ந்தோம். அப்போது நான் எல்லாவற்றையும் புரிந்து கொள்ள முடியாத இளம் பெண்ணாக இருந்தேன். இப்போது நினைத்துப் பார்க்கும்போது கண்களில் நீர் வருகிறது'' (மேற்படி நூல் பக்:278-79).

எவ்வளவு நிர்ப்பந்தமான வேலையையும் வாழ்க்கையையும் மகிழ்வானதாக ஏற்றுக்கொண்டு எவ்வித புகாருமின்றி எப்படி எங்கெல்ஸ் வாழ்ந்தார் என்பதை நினைக்கும் போது கண்களில் நீர் வருகிறது என்கிறார் மார்க்சின் மகள். ஆனால் கல் நெஞ்சு படைத்த 'உண்மை' ஏட்டினரோ அத்தகையவருக்கு எதிராக அவதூறு எழுதுகின்றனர்.

''கார்ல் மார்க்சைப் போல் இல்லாவிட்டிலும் அதைவிடக் குறைந்த அளவில் கூட கார்ல் மார்க்சின் துணைவியாரும், அவரின் குழந்தைகளும் குடித்ததாகத் தெரியவில்லை'' என்றும் எழுதும் 'உண்மை' ஏட்டின் அறியாமையையும் எலியனோரின் மேற்கண்ட கூற்று நிரூபித்து விடுகிறது. இங்கே மார்க்சின் மகள் தானே மது அருந்தியதாக எழுதுகிறார்.

''குளிர்ப் பிரதேச நாடுகளில் உடலைச் சூடுபடுத்தி வைத்துக் கொள்ளக் குடிப்பதென்றால் அங்கு வாழும் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவரும் 24 மணி நேரமும் குடித்துக் கொண்டல்லவா இருக்க வேண்டும். 'ஆசான்' மார்க்ஸ் மீது உள்ள 'பக்தி' காரணமாக 'புதிய ஜனநாயகம்' இந்த வாதத்தை வைத்துள்ளதாகத் தெரிகிறது. (மலிவு விலை சாராயத்தை குளிர் நாடுகளில் இவர்கள் ஆதரிப்பார்களா?)'' என்று முட்டாள் தனமாக கேட்கிறது 'உண்மை' ஏடு. அங்கே ஆண்களோடு, பெண்களும் குழந்தைகளும் கூடக் குடிக்கின்றனர்; அது சமூக ரீதியில் தவறெனக் கருதப்படுவதில்லை. உலகம் சுற்றும் வீரமணியிடமே அதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். திராவிட மானமிகுகளும், உடன்பிறப்புகளும், ரத்தத்தின் ரத்தங்களும் வருமானத்தைத் தேடிக் கொள்வது தவிர வேறு எந்தக் காரணமும் இல்லாதபோது மலிவு விலை மது வழங்குகிறது கழக அரசு. குடிக்கு எதி

படிப்பகம்

www.padippakam.com

ராக இவ்வளவு தூரம் வாதாடும் வீரமணி கும்பல் இதை எதிர்க்குமா? என்று திருப்பிக் கேட்கிறோம்!

காரல் மார்க்சைக் 'காமவெறியன்' என்று முத்திரை குத்தவில்லை என்று கூறிக் கொண்டே பின்வருமாறு 'உண்மை' ஏடு கேள்விகள் கேட்கிறது:

''மனைவி மீது கணவன் கொள்ளும் அளவற்ற அன்புக்கு அடுக்கடுக்காகக் குழந்தைகள் பெறுவதுதான் அளவுகோலா? அப்படியானால் குறைந்த குழந்தை பெற்றுக் கொண்டால் அந்தக் கணவனுக்கு மனைவி மீது அளவற்ற அன்பு இருக்க முடியாதா? அன்பு இருந்தால்தான் உடலுறவு கொள்ள வேண்டும் என்று கட்டாயம் இல்லை. மனைவியானாலும் அன்பில்லாமல் கொள்ளும் உடலுறவிலும் குழந்தை பிறக்க வாய்ப்புண்டு. எதிர்காலம் பற்றியும் தமது சமூகப் பொறுப்புப் பற்றியும் அக்கறையுள்ள, அளவற்ற அன்புடைய கணவன் மனைவி குழந்தைகள் பெறுவதைத் தவிர்த்து உடலுறவு கொள்ள முடியாதா?'' என்று கேட்கிறது, 'உண்மை' ஏடு.

இந்தக் குதர்க்கமான, வக்கிரமான கேள்விகள் மார்க்சை 'காமவெறியன்' என்று அவதூறு செய்பவை இல்லையா? ''குழந்தைகள் விஷயத்தில் ஒரு பெரியார் தொண்டருக்குத் தேவைப்படும் சமூகப் பொறுப்பை அவர்கள் மார்க்சிடம் எதிர்பார்ப்பது தவறா? என்று கேட்கிறது 'உண்மை' ஏடு. ''இரண்டு பெண்டாட்டிக்காரன் முருகனைக் கைது செய்!'' விபச்சாரச் சட்டத்தின் கீழ் கள்ளழகரைக் கைது செய்!'' என்று சுவரொட்டி போட்ட 'பெரியார் தொண்டர்கள்', இரண்டு பெண்டாட்டி(!) வைத்துக் கொண்டுள்ள கலைஞரையும், அறுபது வயதுக்கு மேல் வைப்பாட்டி வைத்துக் கொண்டு 'அதை' அரசியல் வாரிசாக்கிய 'புரட்சித் தலைவரையும்' திராவிடப் பாரம்பரியத் தலைவர்களாய் ஏற்றுக் கொண்டனர். இதெல்லாம் 'காமவெறி'யாய்த் தெரியவில்லை.

135 ஆண்டுகளுக்கு முன்பு குடும்பக் கட்டுப்பாட்டுக்கான அவசியமோ, மருத்துவ வசதிகளோ இல்லாத நிலையில் மார்க்சும் ஜென்னியும் ஆறு குழந்தைகளைப் பெற்றனர். மூன்று இறந்து போயின; மூன்று பெண்களே இருந்தனர்; இதைத்தான் அடுக்கடுக்காய் குழந்தைகள் பெற்றார் என்று 'உண்மை' ஏடு அவதூறு செய்கிறது. ஆனால் இப்போதும் ஐரோப்பிய நாடுகளில் அதிகக் குழந்தைகளைப் பெறுவது சமூகப் பொறுப்பாக ஊக்குவிக்கப் படுகிறது.

சமூகப் பொறுப்பின்றி அடுக்கடுக்காய் குழந்தைகள் பெற்றார் என்று 'உண்மை' ஏடு மார்க்ஸ் மீது அவதூறு செய்கிறது; ஆனால் மார்க்சைப் போல சமூகப் பொறுப்புடன் தமது குழந்தைகளை வளர்க்கும் தந்தையர் எவ்வளவு பேரையும் பெற்றுக் கொள்ளலாம் என்பதைத்தான் உண்மை விவரங்கள் காட்டுகின்றன.

மார்க்ஸ் தமது புதல்வியரைச் சிறந்த கம்யூனிஸ்டுகளாகவே வளர்த்தார்; தானும் தந்தை ஆதிக்கமின்றித் தோழனாகவே பழகினார். அம்மூவரும் பின்னாளில் புரட்சியாளர்களாகக் கட்சிப் பணியாற்றினர். புரட்சியைத் தொழிலாகக் கொண்ட கம்யூனிஸ்டுப்



ஜெனனி மார்க்ஸ் —

பிரமுகர்களையே மணந்தனர். மார்க்சின் மூத்த மகள் ஜென்னியின் கணவர் பாரிஸ் புரட்சிக் கம்யூனின் உறுப்பினர் ஷார்ல் லெங்கே. இரண்டாம் மகள் லௌராவின் கணவர் பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியை நிறுவிய கறுப்பின வழிவந்த பால் லாபர்க். மூன்றாவது மகள் எலியனோரின் கணவர் பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சிக்காரர்; மார்க்சின் மூலதனத்தை மொழிபெயர்ப்பு செய்த எட்வர்டு ஏவ்லிங். மார்க்சின் பேரப்பிள்ளைகள் கூட கம்யூனிஸ்டுகளாகிப் பணியாற்றினர்.

ஆனால் திராவிட இயக்கத்தினரின் வாரிசுகளை உருவாக்கும் முறைகளைப் பாருங்கள்! ஒன்று, மேலை நாடுகளில் உயர் கல்விக்கு அனுப்பி, பெரிய இடமாகப் பார்த்து 'கலப்பு மண - பகுத்தறிவு' சம்பந்தம் செய்து கொள்கிறார்கள்; அல்லது ஞான சூனியங்களாகவும், பொறுக்கிகளாகவும் திரியும் வாரிசுகளுக்கும் சினிமா முதல் கருங்கல் ஏற்றுமதி வரை கள்ள - கறுப்புப் பணத் தொழில் ஏற்பாடும், சொத்துப் பிரிந்து போகாமல் சாதி - குடும்ப வட்டத்துக்குள் சம்பந்தமும், சம்பத்தும் சேர்த்து வைக்கிறார்கள். இதையெல்லாம் ஏற்கும் 'உண்மை' ஏட்டார்கள் மார்க்சை சமூகப் பொறுப்பற்றவர் என்று அவதூறு பொழிகின்றனர்.

## வீரமணி கும்பலுக்குள்ள கம்யூனிச எதிர்ப்புத்தான் அம்பலப்பட்டுப் போனது

மார்க்சு - ஜென்னி குடும்ப அமைப்பு பற்றிப் பின்வருமாறு 1-15 மே 1990 'உண்மை'யில் எழுதியிருந்தனர்.

''சுயமரியாதை இயக்கம் கண்டபின் பெரியாரின் குடும்ப அமைப்பு (Family Structure) இந்த சமுதாய - குறிப்பாய நோக்கில் பெற்ற புரட்சிகர மாற்றம்போல் கார்ல் மார்க்சின் எங்கெல்சின் குடும்ப அமைப்பில் மாற்றம் இல்லை என்பதை அவர்களின் வாழ்க்கை வரலாறு உணர்த்துகிறது'' ''ஏற்கனவே இருந்த சமூக ரீதியிலான அமைப்புகளுக்குள்ளேயே கார்ல் மார்க்சின் பொது வாழ்விற்குக் குடும்ப உறுப்பினர்கள் துணை புரிந்தார்கள். அவர்கள் வாழ்ந்த சமூக மதிப்பீடுகள் அவர்கள் குடும்ப அமைப்பில் பெரும்பாலும் உடைக்கப் படவில்லை.''

நாகம்மை - பெரியார் குடும்ப அமைப்பில் அன்றைய சமூக மதிப்பீடுகளை உடைத்து நொறுக்கியதாகவும், மார்க்ஸ் - ஜென்னி உறவு பாரம்பரிய சராசரி மதிப்பீடுகள் அடிப்படையில் இருந்ததாகவும்; புரட்சியாளர்களுக்கு இருக்க வேண்டிய சமூகப் பொறுப்பினை உள்ளடக்கமாகக் கொண்ட மதிப்பீடுகள் அடிப்படையில் இல்லை என்றும் 'உண்மை' ஏடு (1-30 செப் '90) எழுதுகிறது.

இவ்வாறு கூறுவது வீரமணி கும்பலின் அறியாமையினால் அல்ல; அதற்குள் இவ்வளவு நாளும் ஒளிந்து கொண்டுள்ள கம்யூனிச எதிர்ப்பு உணர்வு காரணமாகத்தான் வெளிவருகிறது. நமது இந்த குற்றச்சாட்டுக்கு ஆதாரமாக 'உண்மை' ஏடு ஆதாரம் காட்டிய நூலில் இருந்தே இங்கே சில விவரங்களைத் தருகிறோம்.

ஜென்னி, ஜெர்மனி ஆர்ஜிகல் கோமகன் குடும்பத்திலே பிறந்தவர்; அவரது தந்தை அரசு ஆலோசகர்; சகோதரர் பிரஷ்ய நாட்டு அரசரின் அமைச்சர். ஆனால் தனது கணவருக்காகவும், இலட்சியத்துக்காகவும் ஜென்னி எவ்வளவு தியாகங்கள் புரிந்து, துன்ப துயரங்கள், வறுமையை அனுபவித்தார் என்பதைக் கேட்போர் நெஞ்சு ரத்தக் கண்ணீர் வடிக்கும்.

மார்க்ஸ், ஜென்னி பிறவியிலேயே ஏழைகள் அல்ல; கணிசமான அளவு குடும்பச் சொத்துக்களும், சக தோழர்களிடமிருந்தும் கூட வாரிசுரிமைச் சொத்துக்களும் பெற்றனர். அவற்றை அவர்கள் ஊதாரித்தனமாக இறைத்து விடவும் இல்லை. புரட்சிக் கருத்துக்களைப் பரப்பும் பத்திரிக்கைக்காகவும், புரட்சிக்கு ஆயுதங்கள் வாங்கவும், நாடு கடத்தப்பட்ட புரட்சியாளர்களுக்கு உதவவும் தமது சொத்து - வருமானத்தை முழுக்கவும் செலவிட்டனர். அதற்காக முதலில் பிரஷ்ய அரசும், பிறகு பெல்ஜிய அரசும், அப்புறம் பிரெஞ்சு அரசும் அவர்களை வேட்டையாடி, சிறையிலடைத்து, நாடு கடத்தின. பெல்ஜியப் புரட்சியில் ஏற்பட்ட தற்காலிக அரசின் மந்திரி ப்ளொக்கோன் அவர்களுக்கு நிதி உதவியளிக்க முன்வந்த போதும் மறுத்து விட்டனர். (மேற்படி நூல் பக்.121, 295).

நாடு கடத்தப்பட்டபோது, கடனில் மூழ்கியிருந்த அச்சகத்தை விற்று ஊழியர்களுக்கும் ஊதியமளித்து சக தோழர்களான ஆசிரியர்களை மீட்டுவிட்டு, ஒரு பென்னி கூட இல்லாது அகதியாக லண்டனில் குடியேறினர். கடன் தொல்லையினால் வீடு விட்டு வீடு துரத்தப்பட்டனர்; தட்டு முட்டுச் சாமான்களை அடகு வைத்தனர்; ஜப்தியில் இழந்தனர்; பட்டினி - மருத்துவ வசதியில்லாமை காரணமாக குழந்தைகள் மாண்டு போயின. மார்க்சின் மகன் பிறந்த போது ஒரு தொட்டிலுமில்லை; இறந்த போது சவப் பெட்டியும் இல்லை - வீட்டு முன்புறத்திலேயே புதைத்தனர். இவ்வளவு வறுமையிலும் சர்வதேசத் தொழிலாளர் பிரமுகர்களுக்கும், அகதிகளுக்கும் மார்க்ஸ் - ஜென்னியின் வீடு எப்போதும் திறந்தே கிடந்தது; பலர் அங்கு போய் தங்கி, இருப்பதைப் பகிர்ந்து கொண்டனர். (மேற்படி நூல் பக்.120-21, 195, 245). இவ்வாறு பல



படிப்பகம்

www.padippakam.com

தோழர்கள் நினைவுக் குறிப்புகள் எழுதியுள்ளனர்.

இயக்கங்களில் ஜென்னியும் தீவிர ஈடுபாடு கொண்டிருந்ததால்தான் மார்க்சோடு சேர்த்து அவரையும் ஐரோப்பிய அரசுகள் நாடு கடத்தின; சிறையிலடைத்தன. ஏற்கனவே குறிப்பிட்டபடி அவர் கம்யூனிஸ்டாகவும், லோகாயத வாதியாகவும் வாழ்ந்து, மதச் சடங்கின்றி சவ அடக்கம் செய்யப் பட்டார்.

நாகம்மை, மணியம்மை போன்று இயக்க நிர்வாகப் பணிகளை மேற்கொண்டவரல்ல, ஜென்னி; மாறாக சொந்தமாக அரசியல் விமர்சனம் எழுதுபவராகவும் விளங்கினார்; புகழ்பெற்ற ஜென்னியின் நடைச்சித்திரமும், கடிதங்களும் அறிவுத்திறன், கலை நயம், இயக்கக் கருத்துக்களுக்காகப் பிரசுரிக்கப் பட்டுள்ளன.

''தமது மனைவியின் புத்திக்கூர்மை, விமர்சனத் திறன் ஆகியவற்றைக் குறித்து மார்க்ஸ் பெரிய மதிப்பு வைத்திருந்தார். எனவே, மார்க்ஸ் அவளுக்குத் தமது கையெழுத்துப் பிரதிகளை எல்லாம் காட்டுவார். இத்தகவலை 1866-ல் அவரே என்னிடம் கூறினார். அச்சகத்திற்கு அனுப்பி வைக்கப்படும் முன்பு, திருமதி மார்க்ஸ் தன் கணவரின் கையெழுத்துப் பிரதிகளைப் பிரதி எடுத்து எழுதுவார்'' என்று பால் லாபர்க் எழுதியுள்ளார்.

''திருமதி மார்க்ஸ் மெல்லியளாக இளமைத் தோற்றத்துடன் இருந்தாள் எனவும் கட்சி வாழ்வில் ஆவேசபூர்வமான அக்கறை கொண்டிருந்ததாகவும் கட்சிக்கே தம்மை முற்றிலும் அர்ப்பணித்துக் கொண்டவளாகக் காணப் பெற்றதாகவும் அவர் கூறினார்'' என்று ஜெர்மன் புரட்சிப் பிரமுகர் குகல் மானின் மகள் பிரான்சிஸ்கா எழுதியுள்ளார் (மேற்படி நூல் பக்:425).

''1843ல் மார்க்ஸ் சில காலம் ஆசிரியராக இருந்த முதல் ரெய்னிஷே ஜெய்ட்துங் என்ற ஏடு ஒடுக்கப்பட்ட பிறகு அவர்களது திருமணம் நடைபெற்றது. அன்று முதல் ஜென்னி மார்க்ஸ் தனது கணவருடைய கதியிலும், வேலையிலும் போராட்டங்களிலும் பங்கு மட்டும் கொள்ளவில்லை — இவற்றில் மிகப் பெரிய அறிவாற்றலுடன் பக்தி பூர்வமான பேரார்வத்துடனும் ஈடுபடவும் செய்தாள்'' என்று ஏங்கெல்ஸ் ஜென்னிக்கு இறுதியஞ்சலி செலுத்தினார் (மேற்படி நூல் பக்:284).

''ஜெர்மன் பிரபு குடும்பத்தைச் சேர்ந்தவளாக இருந்த போதிலும் அவளைப் போன்ற சமத்துவ உணர்ச்சி வேறு யாருக்கும் இருந்ததில்லை. அவளுக்கு எந்தவிதமான சமூக வேறுபாடுகளிலும் நம்பிக்கை கிடையாது. உழைப்பாளி மக்களை அவர்களது உழைப்பாளர் உடையுடன் தனது வீட்டி

> இயக்கங்களில் ஜென்னியும் தீவிர ஈடுபாடு கொண்டிருந்ததால்தான் மார்க்சோடு சேர்த்து அவரையும் ஐரோப்பிய அரசுகள் நாடுகடத்தின; சிறையிலடைத்தன. அவர் கம்யூனிஸ்டாகவும், லோகாயதவாதியாகவும் வாழ்ந்தார்; மதச் சடங்கின்றி சவ அடக்கம் செய்யப்பட்டார்.

லும் தனது மேசையிலும் கோமான்களையோ, இளவரசர்களையோ உபசரிப்பது போல அதே நன்னயத்துடனும் ஆதரவுடனும் உபசரித்து வந்தாள். எல்லா நாடுகளையும் சேர்ந்த பல தொழிலாளிகள் அவளது விருந்தோம்பல் பண்பினை அனுபவித்திருக்கிறார்கள். ஆனால் அவர்களில் ஒருவராவது, தங்களை இவ்வளவு இல்லப் பாங்குடனும் கனிவுடனும் வரவேற்கும் இந்தப் பெண்மணி, ஆர்ஜிகல் கோமகன் குடும்பத்தின் பெண் வழி வந்தவள் என்றோ, இவளது சகோதரர் பிரஷ்ய மன்னரிடம் அமைச்சராக இருந்தவர் என்பதையோ கனவிலும் நினைத்திருக்க மாட்டார்கள் என நான் நிச்சயம் கூறுவேன். ஆனால் திருமதி மார்க்ஸ் இதைப் பற்றிக் கவலைப்படவில்லை'' (மேற்படி நூல் பக்:12) என்கிறார் பால் லாபர்க்.

''நம்பகமான ஒவ்வொரு தோழருக்கும் அவரது வீடு எப்போதும் திறந்தே இருந்தது. மற்ற பலரையும் போலவே மார்க்ஸ் குடும்பத்தாருடன் மகிழ்ச்சிகரமாகக் கழித்த பலமணி நேரங்களை நான் என்றுமே மறக்க மாட்டேன். குறிப்பாக திருமதி மார்க்ஸ் பிரகாசமான பிரதிபலிப்பை ஏற்படுத்தினாள். அவள் உயர்ந்த அழகான பெண்மணி; மிகவும் பிரசித்தி பெற்றிருந்தாலும், மிக நல்ல பண்புடையவள்; அன்புடன், சிரிக்கப் பேசி அளவளாவும் தன்மையுடையவள், வீண் பெருமையும் திமிரும் இல்லாதவளாகத் திகழ்ந்தாள். அவள் முன் எவரும் சொந்தத் தாய் அல்லது சகோதரி முன் இருப்பது போன்று உணர்ந்தார்கள். நான் முன்பே சுட்டிக்காட்டியபடி அவள் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் மிகுந்த உற்சாகம் காட்டி வந்தாள். முதலாளி வர்க்கத்திற்கு எதிராகக் கிடைக்கும் வெற்றிகள், எவ்வளவு சிறியதாக இருந்தாலும் சரி அவளுக்கு மிகப் பெரிய திருப்தியையும் மகிழ்ச்சியையும் கொடுத்தன'' (மேற்படி நூல் பக்:247) என்று எழுதுகிறார் ஜெர்மன் தையற் தொழிலாளியும், புரட்சிப் பிரமுகருமான பிரடரிக் லெஸ்சனர். புற்றுநோயால் மரணப் படுக்கையில் - வேதனையில் கிடந்த போதும் ஜெர்மன் தேர்தல் முடிவுகள், பாட்டாளி கட்சியின் வெற்றி குறித்துக் கேட்டறிந்து இறுதி மகிழ்வோடு மரித்தார், ஜென்னி.

''எனது வளர்ச்சியை உருவாக்குவதில் மார்க்ஸ் எந்த அளவு செல்வாக்கு செலுத்தினாரோ அந்த அளவுக்கு மார்க்சின் மனைவியும் செல்வாக்கு செலுத்தி வந்தாள். என்னுடைய 3வது வயதிலேயே என் தாய் காலமானார். நான் கஷ்டத்திற்கிடையே வளர்க்கப்பட்டு வந்தேன்... தேம்ஸ் நதிக் கரையில் ஒதுக்கப்பெற்ற, நண்பர்கள் யாருமற்ற, தன்னந்தனியனான புரட்சித் தொண்டனான எனக்கு அழகிய, கண்ணியமான எண்ணம் படைத்த, புத்தி கூர்மையுள்ள பெண்மணியான மார்க்சின் மனைவி சகோதரியாகவும் அன்னையாகவும் இருந்தாள். நாடு கடத்தப்பட்டவனின் வாழ்க்கையில் ஏற்பட்ட துன்ப துயரங்களின் விளைவாக அழிந்து போக இருந்த என்னைக் காப்பாற்றியது மார்க்ஸ் குடும்பத்தாருடன் நான் கொண்டிருந்த கூட்டுறவேயாகும்...'' (மேற்படி நூல் பக்:166-67) என்று எழுதுகிறார் ஜெர்மன் தொழிலாளியும் கம்யூனிஸ்டுத் தலைவருமான வில்ஹெல்ம் வீட்ஜென்ட்.

''இத்தகைய கூரிய விமர்சக ஆற்றலையும், அரசியல் விவேகத்தையும், உணர்ச்சி உத்வேகமும் கொண்ட இயல்பையும் போராட்டத்தில் சகத் தோழர்களிடம் சிறந்த ஈடுபாட்டையும் கொண்டு விளங்கிய பெண்மணி கிட்டத்தட்ட நாற்பதாண்டு காலம் இயக்கத்திற்காக என்ன செய்தாள் என்பது பொது மக்களின் அறிவுக்குக் கொண்டு வரப்படவில்லை; சம காலப் பத்திரிகைகளிலும் இவை பொறிக்கப் படவில்லை. இதை ஒருவர் வாழ்ந்து கண்டறிதல் வேண்டும்'' என்று ஏங்கெல்ஸ் ஜென்னிக்கு இறுதியஞ்சலி செலுத்தினார்.

முதலாளித்துவம் ஐரோப்பாவில் கோலோச்சியிருந்த காலத்தில் வாழ்ந்த மார்க்ஸ் - ஜென்னியின் குடும்பம் ''பாரம்பரிய சராசரி மதிப்பீடுகள் அடிப்படையில்'' ''அவற்றை உடைக்காமல்'' வாழ்ந்திருந்தால், புரட்சியாளர்களின் சமூகப் பொறுப்பினை உள்ளடக்கமாகக் கொண்ட மதிப்பீடுகள் அடிப்படையில் இல்லை என்றால் மேற்கண்டவாறு இருக்க முடியுமா? ஆனால் கூலிக்கு மாரடிக்கும் 'உண்மை' ஏட்டாருக்கு இவை புரட்சிகர இலக்கு நோக்கி சமூக மதிப்பீடுகளைத் தகர்ப்பதாகத் தெரியவில்லை.

மார்க்சிய - லெனினிய ஆசான்களும் சரி, பெரியாரும் சரி அவரவர் ஏற்றுக் கொண்ட சித்தாந்தங்களுக்குத் தகுதியான முறையில் வாழ்ந்து காட்டினர். ஒருவரைச் சிறுமைப் படுத்தித்தான் மற்றவரைப் பெருமைப் படுத்தவேண்டும் என்கிற அவசியமே கிடையாது; அது சரியுமில்லை. ஆனால் 'உண்மை' ஏடு அவ்வாறுதான் செய்துள்ளது. மார்க்சும் பெரியாரும் வாழ்ந்த காலம், இடம் ஆகிய காரணிகளைக் கணக்கில் கொள்ளாது ஒருதலைப் பட்சமாக வாதங்களை அடுக்குகிறது.

பெரியார் அன்றைய பல சமூக மதிப்பீடுகளை எதிர்த்துப் போராடி, வாழ்ந்தும் காட்டினார். ஆனால் அவர் வாழ்விலும் குறைபாடுகள் இல்லாமலில்லை. நாகம்மை மீது தனது கொள்கைகளைத் திணிக்கும் ஆணாதிக்கப் போக்கிருந்தது; 'தோழர் ஈ.வெ.ரா' என்று நாகம்மை பெயர் சொல்லி அழைத்தது உண்மைதான். ஆனால் மணியம்மையை அது, இது என்று அஃறிணையில் பெரியார் அழைத்தார், எழுதினார். பொருந்தா மணமுறையைப் பல ஆண்டுகளாக எதிர்த்துப் போராடினார்; ஆனால் பார்ப்பனர்களின் அரசியல் குருவான ராஜகோபாலாச்சாரியின் யோசனைப்படி இந்து மதச் சொத்து - வாரிசுரிமையை நிலைநாட்டும் வகையில் எழுபது வயதில் முப்பது வயது மணியம்மையை மணந்தார்; இயக்கத்தின் மீதும் அந்த வாரிசுரிமையைத் திணித்தார்.

(தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

# வல்லம்:

## தி.க.வின் மேல்சாதிவெறி



தஞ்சைக்கு அருகில் வல்லம் கிராமத்தில், 10 ஆண்டுகளுக்கு முன் வீரமணியின் பெரியார் அறக்கட்டளை, பெண்கள் தொழில் நுட்பக் கல்லூரியைத் துவக்கியது. எம்.ஜி.ஆர். அரசு இதற்காக 11 ஏக்கர் நிலம் தந்தது. அப்போதைய தமிழக வருவாய்த் துறை அமைச்சர் எஸ்.டி.சோமசுந்தரம் இதைத் திறந்து வைத்தார். பிறகு, வல்லம் கிராமப் பஞ்சாயத்து நிலம் 48 ஏக்கரையும் 'வாங்கியது'.

இப்படி பரந்து இருக்கும் அக்கல்லூரியின் சுற்றுச் சுவரை ஒட்டிய இடத்தில் ராஜப்பா என்பவர் குடிசை போட்டு குடும்பத்துடன் 10 ஆண்டு காலமாக வாழ்ந்து வருகிறார். அவர் முன்னாள் தி.க. காரர். இந்நாள் தி.மு.க. வல்லம் அவைத் தலைவர். குடிசை நிலத்திற்காக வல்லம் நரசிங்கப் பெருமாள் கோயிலுக்கு 10 வருடமாக வரியும் கட்டி வருகிறார்.

இன்னும் 20 ஏக்கர் நிலம் அக்கோயிலுக்கு அங்கு சொந்தமாக உள்ளது. இதை கல்லூரிக்குச் சொந்தமான நிலமாக மாற்ற பெருமுயற்சி செய்து வருகிறது, வீரமணியின் பெரியார் அறக்கட்டளை நிர்வாகம். இந்த முயற்சிக்கு ராஜப்பாவின் குடிசை தடையாக இருந்தது. ஓமியோபதி மருத்துவம் பார்க்கும் முடி திருத்தும் சாதியைச் சேர்ந்தவரான ராஜப்பாவின் குடும்பத்தை அங்கிருந்து அகற்ற பேரம் பேசியது. முடியாமல் போகவே நீதிமன்றத்துக்கும் போனது. அங்கும் முடியவில்லை. குடிசை இடிப்புக்கெதிராக தடை வாங்கி வழக்காடினார், ராஜப்பா.

வழக்கு நீதிமன்றத்தில் இருக்கும் நிலையில், 5.12.90 அன்று நள்ளிரவு ஒரு மணிக்கு 50 பேர் கொண்ட வீரமணியின் அடியாள் கும்பல், அக்குடும்பத்தை வெளியில் இழுத்துப் போட்டு குடிசையை தரைமட்டமாக்கியது. அக்குடும்பத் தலைவர் முதியவர் ராஜப்பா ஊரில் இல்லாத நிலையில், அவரது மனைவியையும், வயசுப் பெண்கள் இருவரையும், பேரக் குழந்தைகளையும் நள்ளிரவில் கடத்திச் சென்றது. அதில் ரத்தக் காயத்துடன் தப்பித்த மகன் கதிரவன் மூலம் செய்தி வெளி உலகுக்குத் தெரிந்தது.

இதைப் பற்றி விசாரிக்கச் சென்ற ராஜப்பாவின் வக்கீலையும் கல்லூரி நிர்வாகத்தின் அடியாட்கள் விரட்டினர். வக்கீல் தன்னுடைய டி.வி.எஸ். 'மொபெட்'டையும் அங்கேயே போட்டுவிட்டு உயிர் தப்பினார். தமது ஊர் மக்களான வல்லம் கிராமத்தாரிடம் இதை முறையிட்டார். 1000க்கும் மேற்பட்ட கிராம மக்கள் திரண்டு நிர்வாகத்தை எதிர்த்தனர். கடத்திச் சென்றவர்களை உடனடியாக ஒப்படைக்க கோரி சாலை மறியல் செய்தனர். தஞ்சை திருச்சி பிரதான சாலை அரை நாள் இயங்கவில்லை. அதன் பிறகு தான் கடத்தல் கும்பல் பீதியடைந்தது. ஒரத்தூர் என்ற இடத்தில் அக்குடும்பத்தை விடுவித்தது.

இவ்வளவுக்குப் பிறகும் வீரமணியின் அடியாள் கும்பல், கல்லூரி வளாகத்தினுள் லாரி லாரியாக குண்டர்களை இறக்கி மக்களை பீதியூட்டியது. குடிசையை இடிப்பது முதல் குண்டர்களை இறக்குவது வரை, தி.க.வின் தஞ்சை மாவட்ட பொருளாளர், வீரமணியின் விசுவாசி குப்புசாமி செட்டியார் முன்னின்று நடத்தினார்

குடிசையை இடித்து விட்டால், ராஜப்பா குடும்பம் நிர்கதியாகிவிடும் என்று மனப்பால் குடித்தது வீரமணி கும்பல்! அது முடியாமல் போகவே, இப்போது வல்லம் கிராம மக்கள் அனைவர் மீதும் விஷத்தைக் கக்குகிறது. தனது புறம்போக்கு கொள்ளைக்கு புலிவேஷம் போல் பார்ப்பனிய எதிர்ப்பு வேஷம் பூசிக் கொண்டு ஆடுகிறது. தனது அதிகார பூர்வ கொள்கை ஏடான ''விடுதலை''யில் 10.12.90 அன்று ''வல்லத்தில் நடந்தது என்ன?'' என்று முன்பக்கத்தில் விளக்கம் அளித்தது. வல்லத்தில் நடந்ததை இருட்டடிப்பு செய்துவிட முயற்சித்து முடியாமல் போனதையே அக்கட்டுரையே நிரூபிக்கிறது.

''...5-ம் தேதி இரவு கட்டிடம் கட்ட ஆரம்பித்தவுடன் அதை தடுக்கப் போய் தகராறு ஏற்பட்டு விட்டது. ஆனால் இந்த தகராறு பாலிடெக்னிக் நிர்வாகத்தில் உள்ளவர்களுக்குத் தெரியாமலே நடந்துள்ளது.''

தேங்காய் திருடன் மாட்டிக் கொண்டவுடன் புல்லு புடுங்க ஏறினேன் என்றானாம். அதையும் விஞ்சிவிட்டது, வீரமணி கும்பல்! 'வைகுந்தம் தெரிகிறதா என்று ஏறி பார்த்தேன்' என்கிறது.

அனைத்திற்கும் மேலாக, இதை பார்ப்பன, இந்து மதவெறி கும்பலின் தாக்குதலாகத் திரித்துப் புரட்ட ஒவ்வொரு வரியிலும் முயற்சிக்கிறது. தனது பார்ப்பன எதிர்ப்பு -இந்து மதவெறி எதிர்ப்புக் கொள்கையை வீரமணி கும்பல் எதற்காக வைத்துக் கொண்டுள்ளது என்பதை தெட்டத் தெளிவாக விளக்கி விட்டது. தமிழன் சொத்தை சுருட்டுவதற்கும், தனது மேல்சாதி வெறியை மறைப்பதற்கும் தான் அக்கொள்கையை எடுத்துப் போர்த்திக் கொள்கிறது.

தாழ்த்தப்பட்ட முடிதிருத்தும் சாதியைச் சேர்ந்த ராஜப்பா 'மானமிகு' வீரமணியை எதிர்ப்பதா? உடனே அவரை ''ஆர்.எஸ்.எஸ்.காரர்'' என்று முத்திரை குத்துகிறது!

பாவம், அவர் '81 ஆம் ஆண்டு வரையில் இடிக்கப்பட்ட தம் வீட்டில் வைத்து வீரமணிக்கு சோறு போட்டிருக்கிறார். இந்த முதிய வயதிலும் தி.மு.க.வில் உறுப்பினராக இருக்கிறார்! அதே போல், ராஜப்பாவின் வக்கீலும் தி.மு.க.வின் தீவிர உறுப்பினர்! அவரையும் ''இந்து முன்னணி ஆதரவாளர் ஒருவரை நண்பராக வைத்துக் கொண்டிருக்கிறார்'' என்று எழுதுகிறது.

ஆனால், 'மானமிகு' வீரமணி மட்டும் பார்ப்பன சிவசங்கரியுடன் அரட்டை அடிப்பாராம் ஏனெனில், மேல்சாதிக்குள் தீட்டு கிடையாது! இளிச்சவாயன் தி.க.காரனும், பார்ப்பனனும் தான் சந்திக்கக் கூடாது; தி.க. தீட்டாகிவிடும்!

அதேபோல் தமிழின உழைப்பாளி மக்களை விட பார்ப்பன அதிகார வர்க்கத்திடம் 'மானமிகு' வீரமணி எவ்வளவு மரியாதையாக நடந்து கொள்கிறார் என்பதையும் அந்த கட்டுரை சொல்கிறது: ''வன்முறை கும்பல்'' ''கூட்டம்'' என்று வல்லம் உழைப்பாளி மக்களைச் சாடும் அக்கட்டுரை, தமிழக அரசின் உள்துறை செயலாளரையும் போலீசு கமிஷனரையும் ''திரு'' ''அவர்கள்'' என்றும் ''அவர்கள்'' தங்களுடைய ஆதாரங்களை கண்டு ''திருப்தி'' அடைந்து விட்டார்கள் என்றும் பெருமையுடன் சொல்கிறது. சம்பவம் நடந்த இடத்தில் இருக்கும் மக்களின் தீர்ப்பு பற்றி அக்கறையில்லை வீரமணி கும்பலுக்கு. அதிகார ஆளும் பார்ப்பன கும்பலின் தீர்ப்பைத்தான் தெய்வ வாக்காக போற்றுகிறது

இப்போது தெரிகிறதா? வீரமணியின் இனப்பற்று, எந்த அளவு பார்ப்பனிய சூழ்ச்சியை உள்ளடக்கியது என்று. அவர் பேசும் இந்துவெறி - ஆர்.எஸ்.எஸ். எதிர்ப்பு யாரை வீழ்த்தப் பயன்படுத்தப் படுகிறது என்பது இப்போது தெரிகிறதா?

தகவல்: தஞ்சை ம.க.இ.க.

அன்பார்ந்த வாசகத் தோழர்களே, இடமின்மையின் காரணமாக இவ்விதழில் கேள்வி - பதில் பகுதியை வெளியிட இயலவில்லை. அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து வெளிவரும் என தெரிவித்துக் கொள்கிறோம்.
— ஆசிரியர் குழு.

படிப்பகம்

www.padippakam.com

**ஒவ்வொரு மந்திரிசபையும் பதவியேற்றதும், ''பொது மக்களைப் பாதிக்கும் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்துவதுதான் எங்கள் முதல் வேலை'' என்று அறிவிக்கிறார்கள். ஆனால் யாருமே அதைச் செய்யவில்லை.**

# மூச்சுத் திணறவைக்கும் விலையேற்றம்

பரந்துபட்ட மக்களின் நலன்களுக்காகப் போராடும் பலம் வாய்ந்த ஒரு புரட்சிகர அமைப்பு இல்லாத நிலையில், எதிர்க்கட்சிகள் மற்றும் பத்திரிக்கைகளின் வழக்கமான கண்டன ஒப்பாரிகளைப் பொருட்படுத்த வேண்டிய அவசியமில்லை. அதிலும் வகுப்புக் கலவரங்களின் நடுவே நாடு சிக்கிக் கொண்டுள்ள நிலையில் மக்கள் மீதான பொருளாதாரச் சுமையை ஏற்றிக் கொண்டே போவதற்கு எந்தத் தடையும் இருக்காது. போதாக்குறைக்கு வளைகுடா நெருக்கடியையும் பெட்ரோல் தட்டுப்பாட்டையும் காரணம் காட்டலாம். இந்த துணிச்சலுடன் விலையேற்றம், கட்டண உயர்வு, வரி விதிப்புகளைத் தாராளமாக்கி மக்களைக் கசக்கிப் பிழிகின்றனர், ஆட்சியாளர்கள்.

வளைகுடா நெருக்கடி - எண்ணெய் விலையேற்றத்தைத் தொடர்ந்து அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் ஆகாசத்தில் பறக்கத் தொடங்கி விட்டன. 3 ரூபாய்க்கு விற்ற வெங்காயம் கிலோ ரூ.8 ஆகிவிட்டது. 5 ரூபாய் விற்ற உருளைக்கிழங்கு 10 ரூபாய் ஆகிவிட்டது. இது தவிர அரிசி பருப்பு எண்ணெய், டீத்தூள் முதலான அனைத்தும் ஏறத்தாழ 50% விலையேறி விட்டன. இது கூட நாடு தழுவிய அளவிலான சராசரி கணக்குதான். இன்னும் பல மாநிலங்களில் விலையைக் கேட்டாலே மயக்கம் வருமளவுக்கு அத்தியாவசியப் பொருட்கள் கிடுகிடுவென விலையேறி விட்டன.

அண்டை மாநிலமான கேரளாவின் தலைநகர் திருவனந்தபுரத்தில் கிலோ 2 ரூபாய்க்கு விற்ற கத்தரிக்காய் இன்று கிலோ 10 ரூபாயாகி விட்டது. அதாவது 400% விலையேறியுள்ளது. இதே போல் இதர காய்கறிகள் அனைத்தும் 150% லிருந்து 300% வரை விலையேறிவிட்டன. இதே போல் பம்பாயில் கிலோ 5 ரூபாய்க்கு விற்ற அரிசி இன்று 10 ரூபாயாகி விட்டது. 34 ரூபாய்க்கு விற்ற ஒரு கிலோ கடலை எண்ணெய் இன்று 47 ரூபாயாகி விட்டது. உணவுப் பொருட்கள் மட்டுமல்ல; சோப்பு, துணிமணிகள் உள்ளிட்ட இதர அத்தியாவசியப் பொருட்களும் 15 முதல் 30% வரை விலை ஏறிவிட்டன. எல்லாவற்றையும் விட ரேஷன் கடைகளில் 3 ரூபாய்க்கு விற்கப்படும் மண்ணெண்ணை தட்டுப்பாடு காரணமாக வெளி மார்க்கெட்டில் ஒரு லிட்டர் ரூ.10 முதல் 12 வரை விற்கப்படுகின்றது.


பெட்ரோல் விலை உயர்வு, தட்டுப்பாடு காரணமாக சரக்குப் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளதால் தவிர்க்க இயலாமல் இந்த விலையேற்றம் ஏற்பட்டுள்ளதாக அரசு கூறுகிறது. ஆனால், நிலைமையை சீராக்க எந்த நடவடிக்கையுமின்றி கைகட்டி வேடிக்கை பார்க்கிறது. சரக்குப் போக்குவரத்து பாதிப்பினால் இன்னுமொரு எதிர் விளைவும் தோன்றியுள்ளது. இமாசலப் பிரதேசத்தில் ஆப்பிள் விலை கிலோ ரூ.1.70 ஆக இருந்தது போய் இன்று ரூ.1.30க்கு சரிந்து விட்டது. ஆனால் உற்பத்திச் செலவோ ரூ.2.50 ஆக உயர்ந்து விட்டது. இதனால் விவசாயிகள் ஒருபுறம் நட்டம், மறுபுறம் விலையேற்றம் எனும் இருமுனைத் தாக்குதலுக்கு ஆளாகியுள்ளனர்.

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் மட்டுமின்றி ரேஷன் கடை மூலமான பொது விநியோகமும் நாடு முழுவதும் அராஜகமாகவே உள்ளது. அன்னியச் செலாவணி இருப்பு குறைவாக உள்ளதால் வெளிநாட்டிலிருந்து 'பாமாயில்' இறக்குமதி செய்வதை அரசு குறைத்து விட்டது. தட்டுப்பாட்டை சாக்கிட்டு வர்த்தக சூதாடிகள் எண்ணெய் விலையை திடீரென உயர்த்தி கொள்ளை லாபம் ஈட்டுகின்றனர். அதே சமயம் தட்டுப்பாடு இல்லாத போதிலும் - இவ்வாண்டு தேவைக்கு அதிகமாக 110 லட்சம் டன் சர்க்கரை உற்பத்தியாகியுள்ள போதிலும் சர்க்கரை விலை உயர்ந்து கொண்டே போகிறது. சரக்கு போக்குவரத்து பாதிப்புதான் விலையேற்றத்திற்கு காரணம் என்றால், ஹைதராபாத்திலே தயாராகும் சார்மினார் சிகரெட் ஹைதராபாத்திலேயே விலையேறக் காரணம் என்ன? முதலாளிகள், வர்த்தக சூதாடிகளின் கொள்ளையைத் தவிர வேறு காரணம்தான் இருக்க முடியுமா?

இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு வளைகுடா பிரச்சனையும், எண்ணெய் விலையேற்றமும்தான் காரணம் என்பதாக ஆட்சியாளர்கள் ஏய்க்கின்றனர். நெருக்கடி தீவிரமானதற்கு வளைகுடா பிரச்சினையும் ஒரு காரணம்தான் என்றாலும் அதுவே முற்றும் முழுதான காரணமல்ல. ஏற்கனவே மரணப் படுக்கையில் கிடக்கும் இந்தியப் பொருளாதாரம் வி.பி.சிங் ஆட்சிக் காலத்திலேயே நோய் முற்றி புரையோடிப் போய்விட்டது. இன்று அது மேலும் தீவிரமாகி சீழ்பிடித்து அழுகத் தொடங்கி விட்டது.

இவ்வாண்டு பட்ஜெட்டின் போது ஏறத்தாழ 7000 கோடி ரூபாயாக இருந்த பற்றாக்குறை இன்று 13,000 கோடியாகி விட்டது. 7% ஆக இருந்த பணவீக்கம் இன்று 12% ஆக உயர்ந்து விட்டது. அது மேலும் உயர்ந்து 15% ஐயும் தாண்டிவிடும் என்று பொருளாதாரவாதிகள் மதிப்பிடுகின்றனர். அன்னியச் செலவாணி இருப்பு குறைந்து கொண்டே போய் அடுத்த ஒருமாத கால இறக்குமதியை சமாளிக்கும் அளவுக்குத் தான் உள்ளது. இதுதவிர வளைகுடா நெருக்கடியால் ஆண்டுக்கு 7000 கோடி ரூபாய்க்கு இழப்பு ஏற்படும். இதனால் இந்தியா வெளிநாடுகளிடம் வாங்கிய கடனுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகையின் அளவு மேலும் 9,000 கோடி ரூபாய்க்கு உயரும். இவையனைத்தும் சேர்ந்து நாட்டை திவாலாக்கி விடும்; உடனடியாக பொருளாதாரத்தை சீரமைக்க வேண்டும்; பொருளாதார அவசரநிலை அறிவித்து போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆளும் வர்க்கப் பொருளாதாரவாதிகள் எச்சரிக்கின்றனர்.

இன்றைய பொருளாதார நெருக்கடியைத் தணிக்க சர்வதேச நாணய நிதியத்திடம் (IMF) கடன் வாங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்பதே ஆளும் வர்க்கப் பொருளாதார வாதிகளின் தீர்வு. அதே சமயம் நிலையற்ற சந்திரசேகர் அரசுக்கு அது கடன் தருமா என்றும் சந்தேகிக்கின்றனர்.





படிப்பகம்

www.padippakam.com

நிலையானதோ, நிலையற்றதோ தமது நிபந் தனைக்கு கட்டுப்படும் எந்த அரசுக்கும் ஐ.எம்.எப். கடன் தருவதை நிறுத்தியது கிடையாது. பாகிஸ்தானில் தேர்தல் நடக் கும் நேரத்தில்தான் கடன் கொடுத்தது. அதே போல லத்தீன் அமெரிக்க நாடுகளான பொலிவியா, பிரேசில் முதலான நிலையற்ற ஆட்சிகளைக் கொண்ட நாடுகளுக்குக் கூட அது கடன் கொடுத்துள்ளது.

இப்போதைய வளைகுடா நெருக்க டியை ஒட்டி அவசரகாலக் கடனாக ஏறத் தாழ 850 கோடி ரூபாயை இந்தியா கடனா கப் பெற முடியும். இதுதவிர அது விதிக்கும் கடுமையான நிபந்தனைகளை ஏற்று பாசிச

> **மாதந்தோறும் முறையாக ஊதியம் பெறும் மேட்டுக்குடியினரும், தொழிலாளிகளுமே இப்போதைய விலையேற்றத்தினால் கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள் என்றால் வறுமையில் உழலும் கோடிக்கணக்கான கிராமப்புற விவசாயிகள், நகர்ப்புற ஏழைகளின் கதி என்னவாகும் என்று சொல்லத் தேவையில்லை.**

இந்திராவைப் போல நாட்டை அடகு வைத்து மேலும் அதிகமாகக் கடன் பெற முடியும். உணவு மற்றும் உரங்களுக்குத் தரப் படும் சலுகை - மானியங்களை நிறுத்துவது, சேவைத்துறை (தபால், ரயில், பஸ், மின் துறை) கட்டணங்களை உயர்த்துவது, அரசு செலவுகளைக் குறைப்பது - அதாவது ஊழி யர்களின் பஞ்சப்படியை வெட்டுவது, கடன் தள்ளுபடி முதலான சலுகைகளை நிறுத்து வதுமுதலானவை உலகவங்கி - ஐ.எம்.எப்.- ன் நிபந்தனைகள். அமீனா புகுந்த வீடும் ஐ.எம்.எப்.-பிடம் கடன் வாங்கிய நாடும் உருப்பட்டதாக வரலாறில்லை. பணவீக்க மும், விலையேற்றமும் மேலும் தீவிரமாகி மீண்டும் புதைகுழிகள் பொருளாதாரம் சிக்கி நாடே திவாலாகும் என்பதுதான் ஐ.எம்.எப்.-பிடம் கடன் வாங்கிய ஏழைநா டுகள் உணர்த்தும் அனுபவம்.

இருப்பினும் கடன் வாங்குவதைத் தவிர வேறு வழியில்லை. சந்திரசேகர் அரசு மட்டுமல்ல; வேறு எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் ஐ.எம்.எப். -பிடம் கடன் வாங்கு வதிலிருந்து தப்ப முடியாது என்ற ஆளும் வர்க்கப் பொருளாதார வாதிகளே அஞ்சு கின்றனர். நிபந்தனைகளை ஏற்று மானியங் களை வெட்டினால் அடுத்த தேர்தலில் விவ சாயிகளின் ஓட்டைப் பெற முடியாது என் பது காங்கிரசுக்கு நன்றாகத் தெரியும். எனவே, சந்திரசேகர் ஆட்சியில் கடன் வாங் குவது, பின்னர் பழியை அவர் மீதே போட்டு தப்பித்துக் கொள்வது என்கிற திட் டத்துடன் அது சந்திரசேகர் அரசை ஐ.எம். எப்-ஐ நோக்கித் தள்ளுகிறது.

ஐ.எம்.எப்-பிடம் கடன் வாங்குவ தோடு கூடவே, அன்னிய ஏகாதிபத்திய முத லீட்டை அதிகரிப்பது, ஏற்றுமதி அடிப்டை யிலான தொழில்களைப் பெருக்குவது என் பதையும் ஆளும் வர்க்கப் பொருளாதாரவா திகள் ஆலோசனையாக முன் வைக்கின்ற னர். அன்னிய முதலீட்டை தீவிரமாக எதிர்ப் பதாக சோசலிச நாடகமாடிய சந்திரசேகர் இப்போது அன்னிய முதலீட்டை இந்தியா வில் அதிகரிப்பதற்கு பச்சைக் கொடி காட்டி

விட்டார். அதைத் தொடர்ந்து நிதி மந்திரி யஷ்வந்த் சின்ஹா, ''அன்னிய முதலீடுக ளுக்கான கட்டுப்பாடுகளை நாங்கள் மேலும் தளர்த்துவோம். நிர்வாகத் தாமதங்க ளால் அன்னிய முதலீட்டாளர்கள் இந்தியா வில் அதிகமாக முதலீடு செய்வதில்லை. இத் தகைய தடைகளை நீக்கி, அன்னிய முத லீட்டை ஊக்கப் படுத்துவோம்'' என்கிறார். ஆக, பாசிச ராஜீவ் துவக்கி வைத்த அதே தாராளவாதக் கொள்கையைத் தான் சந்திர சேகர் கும்பலும் செயல்படுத்த தீர்மானித் துள்ளது.

சுருக்கமாகச் சொன்னால் நாட்டை போண்டியாக்கும் கொள்கைகள்தான் இவை. சந்திரசேகரின் பொருளாதார ஆலோசகரான எஸ்.கே.கோயல், ''அன் னிய முதலீட்டை மேலும் அதிகரிக்கும் தாரா ளவாதக் கொள்கையானது நாட்டை ஓட் டாண்டியாக்கி விடும்; பணவீக்கம் யானைக் காலாகப் பெருத்துள்ள நிலையில் இத்த கைய கொள்கையானது இந்தியாவை பிரே சிலைப் போல திவால் நிலைக்குத் தள்ளிவி டும்'' என்று உறுதிப் படுத்துகிறார்.

இந்தப் பொருளாதாரச் சுமைகள் அனைத்தும் உழைக்கும் மக்களின் முதுகின் மீதே சுமத்தப்படும். இன்றைய விலையேற றத்தினால், ''எங்கள் காரை வாரத்திற்கு ஒரு முறை கூட வெளியே எடுத்துச் செல்ல முடி யவில்லை'' என்கிறார், திருவனந்தபுரத் தைச் சேர்ந்த வங்கி அதிகாரியின் மனைவி ஜெயாமுரளி. ''நாளொன்றுக்கு பல கோப் பைகள் தேநீர் அருந்தும் பழக்கமுடையவன் நான். இன்றைய விலையேற்றத்தினால் என் னால் 2 கோப்பைகளுக்கு மேல் குடிக்க முடி யவில்லை'' என்கிறார் அகமதாபாத்தைச் சேர்ந்த தொழிலாளி, சங்கர்பாய் நாயக். மாதந்தோறும் முறையாக ஊதியம் பெறும் மேட்டுக் குடியினரும், தொழிலாளிகளுமே இப்போதைய விலையேற்றத்தினால் கடு மையாக பாதிக்கப் படுகிறார்கள் என்றால் வறுமையில் உழலும் கோடிக்கணக்கான கிராமப்புற விவசாயிகளின் கதி என்னவா கும் என்று சொல்லத் தேவையில்லை.

இட ஒதுக்கீடு ஆதரவு - எதிர்ப்பு கிளர்ச்சிகள், அதன் பிறகு அயோத்தி விவ காரம், கூடவே ஆட்சி மாற்றம், மதக் கலவ ரங்கள் என்பதிலே, அடுத்தடுத்து கவனம் செலுத்தும் ஓட்டுக் கட்சிகள் மக்கள்மீது திணிக்கப்படும் பொருளாதாரச் சுமைக ளைப் பற்றி வாயே திறப்பதில்லை. போலிக் கம்யூனிஸ்டுகள் உள்ளிட்டு, தாங்கள் ஆளும் மாநிலங்களில் விலையேற்றத்துக்கு எதிராகப் போராடும் மக்களின் மண்டை யைப் பிளக்கும் இக்கட்சிகள் அகில இந்திய அளவில் மக்களைத் திரட்டிப் போராட ஒரு போதும் முன்வராது. விலையேற்றம் தவிர்க் கவியலாதது என்று தாங்கள் நியாயப் படுத் துவதை மக்கள் எதிர்ப்பின்றி அமைதியாக ஏற்றுக் கொண்டிருப்பதாக அவர்கள் கனவு காண்கிறார்கள். ஆனால், இது புயலுக்கு முந்தைய அமைதி என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். இனியும் குட்டக்குட்ட குனிந்து கொண்டிருப்பதில் பலனில்லை. ஓட்டுக் கட்சிகளுக்கு வெளியே சக்தி வாய்ந்த மக்கள் திரளினரின் புரட்சிகரமான எதிர் தாக்குதலைத் தொடுக்காமல் இத்த கைய பொருளாதாரத் தாக்குதலை முறிய டிக்க வேறு வழியுமில்லை.

☐ குமார்.

# மதுரை மக்கள் ஆவேசம் சாராயக் கடை தகர்ப்பு!


கருணாநிதியின் குடிகெடுக்கும் மலிவு விலை மது, தமிழக மக்களை நிம்மதியாக வாழ விடவில்லை. பள்ளிகள், கோயில்கள், குடியிருப்புகள் மற்றும் பொதுமக்கள் அதி கம் புழங்கும் பொது இடங்களில் கடைகள் திறக்கப் படுவதால் ஓய்வு ஒழிச்சல் இல்லா மல் குடிகாரர்களின் தொல்லைகளுக்கு மக் கள் ஆளாகின்றனர். இவற்றிற்கெதிராக மக் கள் ஆங்காங்கே எதிர்த்து போராடுவதும் நடக்கிறது.

மதுரையின் மையப்பகுதியான கீழ வெளி வீதியில் உள்ள வாழைக்காய் பேட் டையில் அரசின் பாக்கெட் சாராயக்கடை திறக்கப்பட்டது. கடையைச் சுற்றி, குடியிருப் புகளும், எதிரே மார்க்கெட் பகுதியும் இருக் கின்றன. எனவே, கடையை அகற்றும்படி கோரி பகுதியிலுள்ள அனைத்துக் கட்சியின ரும் பொது மக்களும் 9.11.90 அன்று உண் ணாவிரதமும் மறுநாள் மனித சங்கிலிப் போராட்டமும் நடத்தினர். இதில் சுமார் 2000 பேர் கலந்து கொண்டனர். அதன்பின் சாராயக் கடைக்காரர் கடையை 23ந் தேதிக் குள் மாற்றி விடுவதாக (கலெக்டர் மற்றும் போலீசு அதிகாரிகள் முன்) கூறினார். ஆனால் 23ந்தேதி வரை கடை அகற்றப் படாததால் ஆத்திரமடைந்த பகுதி மக்கள் திரண்டு வந்து சாராயக் கடையை அடித்து நொறுக்கினர். உடன் போலீசுப்படை குவிக் கப்பட்டு 30 பேரை கைது செய்தனர். பகுதி யில் முகாமிட்டு பீதி கிளப்பியும், கண்ணில் படுகிறவர்களை மிரட்டியும் தாக்கியும் போலீசு கும்பல் கொட்டமடித்தது.

இன்று சாராயக்கடை வேறு இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. 'அடிக்கிற மாட்டை அடித்துத்தான் கறக்க வேண்டும்' என்பதை பகுதி மக்கள் தெளிவாக உணர்ந்துள்ளனர். மது எதிர்ப்பு பிரச்சார நாடகமாடிக் கொண்டே மதுக்கடைகளுக்கு எதிராக போராடுபவர்களின் மண்டையை பிளக்கும் கருணாநிதி அரசிற்கு விரைவில் பதிலடி கொடுப்பார்கள்.

தகவல்:) ம.க.இ.க. மதுரை.

படிப்பகம்



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

பதவி போனாலும் பாசிச காங்கிரசுக் கட்சியில் கோஷ்டிப் பூசல் மட்டும் ஓய்ந்தபாடில்லை. இம்மாதம் 7ம் தேதியன்று ஒரிசாவின் கன்ஜம் மாவட்ட வெள்ளப் பகுதிகளைப் பார்வையிட பாசிச ராஜீவ் வருகை தந்தார். அவரை வரவேற்க முன்னாள் காங்கிரசு முதல்வர் ஜே.பி.பட்நாயக் மற்றும் காங்கிரசு பெருச்சாளிகள் கையில் பூச்செண்டுகளுடன் முன்வரிசையில் கூடியிருந்தனர். முன்னாள் மத்திய மந்திரி ராம்சந்திர ராத் தலைமையிலுள்ள எதிர் கோஷ்டியினர் தாங்கள் தான் முதலில் ராஜீவுக்கு மலர்ச் செண்டு தரவேண்டும் என்று பட்நாயக் கோஷ்டியை பின்னுக்குத் தள்ளினர். இதையொட்டி தகராறு மூண்டதும், ராத்தின் அடியாட்கள் பட்நாயக்கைப் பந்தாடி அவரது சட்டையைக் கிழித்து ஓட ஓட விட்டினர். தனது திரைமறைவு வாழ்க்கை அசிங்கங்களை அம்பலப்படுத்தியதற்காக ''இல்லஸ்ட்ரேடட் வீக்லி'' பத்திரிக்கை மீது மானநஷ்ட வழக்கு போட்ட பட்நாயக் இப்போது தனது கட்சிக்காரர்களாலேயே அடி உதைபட்டு அவமானப்பட்டுப் போனார்.

மத்திய எரி சக்தித்துறை அமைச்சரான கல்யாண்சிங் கால்வி ''சதி'' எனும் உடன்கட்டை ஏறும் காட்டுமிராண்டித்தனத்தை ஆதரித்துப் பேசியதும் பல்வேறு மகளிர் அமைப்புகள் இதை வன்மையாகக் கண்டித்தன. காங்கிரசுக் கட்சியின் மகளிர் அமைப்பும் எதிர்ப்பு தெரிவிக்கவும் அரண்டு போன மந்திரி, அப்படி பேசியதற்கு வருந்துவதாகக் கூறி திடீர் பல்டி அடித்தார். ஆனால் கால்வியின் சொந்த மாநிலமான ராஜஸ்தானிலுள்ள உடன்கட்டை பழக்கத்தை ஆதரிக்கும் சனாதன வாதிகள், ''மந்திரி இங்கே ஓட்டு கேட்க வரட்டும்; உதைத்து அனுப்புகிறோம்'' என்று எச்சரித்துள்ளனர். ஓட்டுப் பொறுக்கும் போது உடன்கட்டைக்கு ஆதரவு; மந்திரியான பிறகு முற்போக்கு வேடம் என்று நாடகமாடும் இந்த மந்திரி நாளை ராஜஸ்தானுக்குப் போனால் என்ன பேசுவாரோ?

அமெரிக்காவின் கொலைகார உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.வினால் உருவாக்கி ஊட்டி வளர்க்கப்பட்ட நிகரகுவாவின் எதிர்ப்புப் புரட்சி குண்டர் படையான ''காண்ட்ரா''வின் ஆதரவுடன், இடதுசாரி சாண்டினிஸ்டா ஆட்சியை வீழ்த்தி அதிகாரத்தைக் கைப்பற்றினார், வயலெட்டா அம்மையார். அமெரிக்க எதிர்ப்பு இடதுசாரி அரசு வீழ்ந்ததை வரவேற்று, நிகரகுவாவில் ஜனநாயகம் மலர்ந்து விட்டதாக வயலெட்டா அம்மையாரின் ஆட்சிக்கு துதி பாடினார்கள் அமெரிக்க அடிவருடிகள். ஆனால் தங்களது ஆதரவினால் ஆட்சியைப் பிடித்த வயலெட்டா அம்மையார், தங்களது புனர்வாழ்வுக்கு எந்த உதவியும் செய்யவில்லை; ஆட்சியிலும் தமக்கு உரிய பங்கு தரவில்லை என்று காண்ட்ரா கும்பல் இப்போது வயலெட்டாவுக்கு எதிராகவே கலகம் செய்கிறது. கடந்த மாதத்தில் மக்களைத் திரட்டி ஆர்ப்பாட்டம் செய்த இக்கும்பல், சில போலீசு நிலையங்களையும் நகராட்சிக் கட்டிடங்களையும் கைப்பற்றிக் கொண்டு எதிர்த் தாக்குதலைத் தொடுத்தது. வேடிக்கை என்னவென்றால், தானே உருவாக்கிய இந்த எதிர்ப்புரட்சி கும்பலை சாண்டினிஸ்டா அரசு வீழ்ந்த பிறகு அமெரிக்கா கைகழுவி விட்டது. இப்போது வளர்த்த கடா மார்பில் பாய்வதைக் கண்டு அமெரிக்காவும் அதன் அடிவருடி வயலெட்டாவும் விழி பிதுங்கி நிற்கின்றனர். (என்ன செய்வது? வினை விதைத்தால் வினையைத் தானே அறுவடை செய்ய வேண்டும்?

அயோத்தி மசூதியை இந்து வெறியர்கள் முற்றுகையிட்டுத் தாக்கியதைத் தொடர்ந்து, இந்து வெறியூட்டும் ஒலிப்பதிவு நாடாக்கள் தலைநகர் டெல்லியிலும் வட இந்திய நகரங்களிலும் சட்ட விரோதமாக ஏராளமாக விற்பனையாகிறது. வில்லேந்திய கடவுள் ராமன் கோபமாக பார்ப்பது போல் முகப்புப் படம் கொண்ட இந்த 'கேசட்'டுகளில், ''ராமனை எதிர்ப்பவன் இந்தியன் அல்ல; ராமஜென்ம பூமி நமக்கே சொந்தம்; அன்னிய முஸ்லீம்களை அடித்து விரட்ட ரத்தப் புரட்சியில் இறங்குவோம்'' என்று இந்து வெறியூட்டும் உரையும் பாடல்களும் அடங்கியுள்ளது. இது தவிர, தனது மயிரைத் தியாகம் செய்து மொட்டை அடித்துக் கொண்டு சாமியாரிணி போல் வேடமிட்டு அக்.30 அன்று அயோத்தி மசூதிக்குள் நுழைந்து பரபரப்பூட்டிய பாரதீய ஜனதாவின் பெண் எம்.பியான உமா பாரதி பேசிய இந்து வெறியூட்டும் 'கேசட்'டுகளும் இதே போல் விற்பனை செய்யப்படுகின்றன. இந்த 'காசெட்'டில் அயோத்தியில் இந்துக்கள் நுழைய உதவி செய்த உத்திரப் பிரதேச துணை ராணுவப் படையை (PAC) வாழ்த்தியும், முஸ்லீம்களை கேவலப்படுத்தி இந்து வெறியூட்டியும் உமா பாரதியின் உரை அமைந்துள்ளது. எல்லா கடைகளிலும் தாராளமாக கிடைக்கும் இக் 'கேசட்'டுகளை போலீசார் கைப்பற்றவோ, விற்பனையைத் தடுக்கவோ செய்யவில்லை. வகுப்புவாத எதிர்ப்பு நாடகமாடும் ராஜீவ் - சந்திரசேகர் கும்பலின் மதச் சார்பின்மையின் யோக்கியதை இதுதான்!

விவசாயிகளின் கடுமையான எதிர்ப்புக்குப் பிறகு, இதுநாள் வரை மூட்டைகட்டி வைத்திருந்த ''டிஸ்னிலாந்து'' திட்டத்தை இப்போது நிறைவேற்ற தேவிலால் துடிக்கிறார். இப்போது அவர் சுற்றுலாத்துறை மந்திரியாகி விட்டதாலும், அவரது கிரிமினல் வாரிசு சௌதாலா அரியானாவின் 'நிஜ' முதல்வராக உள்ளதாலும் அவருக்கு மிகவும் வசதியாகிவிட்டது. இதைத் தொடர்ந்து அரியானா, குர்கோன் மாவட்டத்தில் 28,000 ஏக்கர் நிலத்தை விவசாயிகளிடமிருந்து பறிக்க அரியானா அரசு மீண்டும் நோட்டீசு அனுப்பியுள்ளது. கேளிக்கை, பொழுதுபோக்கு, குழந்தைகள் விளையாட்டு அரங்கமாக அமையவுள்ள இந்த டிஸ்னிலாந்து திட்டத்துக்கு 1000 கோடி

உடன்கட்டை ஏறும் காட்டுமிராண்டித் தனத்தை ஆதரித்துப் பேசிய மத்திய மந்திரி கால்விக்கு எதிராக பெண்கள் ஆர்ப்பாட்டம்.



www.padippakam.com

ரூபாயைச் செலவிட அரசு முடிவு செய்துள்ளது. விவசாயிகளின் நண்பனாக வேடம் போட்ட தேவிலால் கும்பல் இப்போது விவசாயிகளிடம் இருந்து நிலத்தைப் பறித்துப் பட்டினி போட்டுவிட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து அன்னியச் செலாவணியை ஈட்டப் போவதாக பசப்புகிறது. தமது வாழ்வையே சூறையாடும் இத்திட்டத்திற்கு எதிராக அரியானா விவசாயிகள் போராட்டத்தில் குதிக்க முடிவு செய்துள்ளனர்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (IRDP) உட்பட வறட்சி நிவாரணத் திட்டங்கள் எதுவும் மே.வங்கத்தில் உருப்படியாக நிறைவேற்றப் படவில்லை. ஒதுக்கப்பட்ட நிதியில் 28 சதவீதமே பயன்படுத்தப் பட்டுள்ளது. அதுவும் கூட பாதிக்கப்பட்ட மக்களின் பெயரால் 'மார்க்சிஸ்ட்' கட்சி ஆதரவாளர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது என்று நிதித்துறை அமைச்சகம் கடந்த ஆண்டு கணக்குகளை தணிக்கை செய்து இப்போது குற்றம் சாட்டியுள்ளது.

இந்தியாவில் மனித உயிர் மலிவாகிப் போய் விட்டது. பாதுகாப்பற்ற நிலையிலுள்ள பீகார் நிலக்கரிச் சுரங்கங்களில் விபத்துக்கள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. சுரங்கத்திற்கு வெளியே இவ்வாண்டு மட்டும் 23 தொழிலாளிகள் கொல்லப்பட்டுள்ளனர். சுரங்கத்தினுள் நடந்த விபத்துக்களில் 67 பேர் மாண்டு போயுள்ளனர். இதில் 75% விபத்துக்கள் உரிய பாதுகாப்பு சாதனங்கள் இல்லாததால் நடந்துள்ளன. இவை அனைத்தும் அரசு கட்டுப்பாட்டில் உள்ள சுரங்கங்களில் நடந்த விபத்துக்கள். இதர தனியார் சுரங்கங்களில் நடந்தவை எத்தனையோ? மறைக்கப்பட்டவை எவ்வளவோ?



ஏழைகளின் நாயகன், எளிமையின் மறு அவதாரம் என்று சித்தரிக்கப்படும் பீகார் முதல்வர் லல்லு பிரசாத் யாதவ், பெட்ரோல் செலவைக் குறைக்கப் போவதாகக் கூறிக் கொண்டு தலைமைச் செயலகத்துக்கு இப்போது சைக்கிளிலேயே செல்கிறார். இதை இன்னுமொரு காந்தீய நடவடிக்கையாக ஜனதாதள எடுபிடிகள் சித்தரிக்கின்றனர். ஆனால் அவரது பாதுகாப்புக்காகவும் அதிகார வர்க்கப் பரிவாரங்களுக்காகவும் 3, 4 கார்கள் அவரைப் பின்தொடர்ந்து செல்கின்றன. இதனால் வழக்கத்தை விட பெட்ரோல் செலவு அதிகரித்து விட்டது என்று அரசே ஒப்புக் கொள்கிறது. இதுவும் போதாதென்று, கட்சி மாறிகளால் தனது அரசு கவிழ்ந்து விடுமோ என்ற பீதியில் 11 பேராக இருந்த தனது அமைச்சரவையை 75 பேர் கொண்ட 'சூப்பர் ஏர் பஸ்' மந்திரிசபையாக மாற்றியமைத்து இந்தியாவிலேயே புதிய 'சாதனை' படைத்துள்ளார், பீகார் முதல்வர். ஒருபுறம் மக்களை ஏய்க்க காந்தீய வேடம்; மறுபுறம் மக்கள் வரிப் பணத்தைப் பாழடிக்க மந்திரி சபை விரிவாக்கம். இந்திய ஓட்டுப் பொறுக்கிகளிடம் 'சாதனை' யாக வேறு எதை எதிர்பார்க்க முடியும்?

பாரதீய ஜனதா ஆளும் மத்திய பிரதேசத்தில் கல்வியறிவின்மையைப் போக்கும் ''கரும்பலகைத் திட்ட''திற்காக ஒதுக்கப்பட்ட 80 கோடி ரூபாயை கல்வித் துறை உயர் அதிகாரிகளும் பாரதீய ஜனதா கட்சியினரும் சுருட்டிக் கொண்டு ஏப்பம் விட்டுள்ளனர். தரக்குறைவான கருவிகள், பலகைகளை வழங்கியும், ஐந்தாண்டுகளுக்கு முன்பு வழங்கிய கருவிகளுக்கு இப்போது வழங்கியதாக பொய்க் கணக்கு காட்டியும் ஏய்த்துள்ள இக் கொள்ளையர்களின் அயோக்கியத்தனம் அண்மையில் வெளி வந்துள்ளது.

நாளொன்றுக்கு 14 மணி நேர வேலை; சோறும் வேகவைத்த உருளைக்கிழங்கும் இரண்டு வேளை உணவாகத் தரப்படும். வெளியே செல்லவோ தப்பிக்கவோ முடியாது; இப்படி கம்பி போட்ட கூடாரத்துக்குள் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட இளம் சிறுவர்களும் சிறுமிகளும் உ.பி. மீர்சாபூரிலுள்ள கம்பள - தரைவிரிப்பு நெசவுக் கூடங்களில் கொத்தடிமைகளாக அல்லற்படுகின்றனர். அவர்களது பிஞ்சு விரல்கள் வீங்கியும், உட்கார்ந்து வேலை செய்வதால் முதுகு கூன் விழுந்தும் கால்கள் மெலிந்தும் போயுள்ளன. இது தவிர இளஞ்சிறுமிகள் பலர் நெசவுக் கூட மேஸ்திரிகள், கங்காணிகளால் பாலியல் வன்முறைக்கும் ஆளாகின்றனர். கொத்தடிமைகளாக அவதிப்படும் இச்சிறுவர்களில் 15 பேரை மட்டுமே பல இடர்ப்பாடுகளுக்குப் பின் மீட்டுள்ள 'பந்துவா முக்தி மோர்ச்சா' என்ற அமைப்பு, மேற்கூறிய அதிர்ச்சியூட்டும் தகவல்களை வெளியிட்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு அரசைக் கோரியுள்ளது.

# ''நான் ஒரு விபச்சாரி!'' — போலீசு வாக்குமூலம்

மதுரை ஆண்டிபட்டி தாலுகா பெருமாள் கோவில் பட்டியைச் சேர்ந்த சக்கரையன்; இவர் ஒரு பஞ்சாயத்துக்காரர். படித்துப் பட்டம் பெறாத கிராமப்புற வக்கீல். பணம் வாங்கிக் கொண்டு நியாயத்தை அநியாயம் என்றும் அநியாயத்தை நியாயம் என்றும் கூறுவதில் இவர் கைதேர்ந்தவர்! ஒரு மாதத்திற்கு முன்பாக கருத்தமலைப்பட்டியில் நடந்த பஞ்சாயத்தில் இவரது 'பாச்சா' பலிக்கவில்லை. ஏனென்றால் அப்பகுதி வி.வி.மு. பிரச்சாரக்குழு பொறுப்பாளர் செல்வராக பஞ்சாயத்தில் கலந்து கொண்டு இவருடைய தகிடுதத்தங்களை முறியடித்து விட்டார். வெறுப்புற்ற சக்கரையன் சமயம் பார்த்து பிரதிவாதி கருப்பையாவுடன் சேர்ந்து பஞ்சாயத்து தீர்ப்புக்கு கட்டுப்படாமல் தூக்கி எறியச் செய்து விட்டார். தோழர் செல்வராக சக்கரையனுடைய அயோக்கியத்தனங்களை சுவரொட்டி - துண்டுப் பிரசுரம் மூலம் வெளியிடப் போவதாகக் கூறினார்.

சக்கரையன் தன் பரிவாரங்களுடன் க.விலக்கு போலீசு நிலையத்தில் மானம் போனதாக புகார் கொடுத்து தோழர் செல்வராசை அழைத்து மிரட்டுவதற்காக இன்ஸ்பெக்டரையும் கவனித்தார். விசுவாசமாக இன்ஸ்பெக்டரும் தோழரை அழைத்து வர ஆள் அனுப்பினார். 30.9.90 அன்று மாலை தோழரும் இன்ஸ்பெக்டரை சென்று சந்தித்தார். இருவருக்குமிடையே நடந்த உரையாடலில் இருந்து...

*எஸ்.ஐ.: சரி; சக்கரையன் தவறு செய்து விட்டார் என்று போஸ்டர் ஒட்டுகிறீர்கள். இப்பொழுது என்னிடம் வந்துள்ளீர்கள். நான் தப்பு செய்தால் என்ன செய்வீர்கள்?*

**தோழர்:** *உங்களையும் அம்பலப்படுத்தி போஸ்டர் ஒட்டுவோம்.*

*எஸ்.ஐ.: ஹி... ஹி... எனக்கொன்றும் ஆட்சேபணையில்லை. நான் ஒரு விபச்சாரி மாதிரி. இதைப் பற்றி பெரிதாக நினைத்துக் கொள்ளப் போவதில்லை. ஆனால், இவர் சக்கரையன் கிராமத்தில் பிறந்தவர்; போஸ்டர் ஒட்டுவதை பெரிதாக நினைக்கிறார். அதனால்.... போஸ்டர் ஒட்டுவதற்கு முடிவு செஞ்சது யார் என தெரிஞ்சாகணும்.*

**தோழர்:** *எங்கள் அமைப்பு முடிவு செய்தது.*

*எஸ்.ஐ.: என்னய்யா பெரிய தேசிய கட்சி...?*

*(இடையில் வேறு வழக்கில் சம்பந்தப்பட்ட ஒருவரை கூப்பிட்டு உதைக்கிறார். பிறகு தோழரிடம்) போஸ்டர் ஒட்டக் கூடாது. ஒட்டினால் சட்டம் ஒழுங்கு கெடும்.*

**தோழர்:** *வன்முறையை தூண்டும் விதத்திலும், ஆபாசமாகவும் போஸ்டர் ஒட்டினால் தான் கெடும்.*

*எஸ்.ஐ.: சட்டம் பேசுகிறாயா... சட்டம் பேச வேண்டியவன் நான்.*

**தோழர்:** *சட்டத்தில் எங்களுக்கும் உரிமைகள் உண்டு. அதன் அடிப்படையில் பேசுகிறேன்.*

— இப்படியாக தோழரை மிரட்டி பணிய வைக்க முயன்று, இன்ஸ்பெக்டர் தோல்வியடைந்தார். தனிநபர் சார்பாக 'ஸ்டேட்மெண்ட்' எழுதி தரும்படி தோழரை திர்ப்பந்தித்தார். தோழர் மறுத்து அமைப்புச் சார்பாக எழுதிக் கொடுத்தார். பிறகு புகார் மனுவில் கையெழுத்துப் போடும்படி நிர்பந்தித்தார். அது மான நஷ்ட வழக்கு தொடுப்பதற்கான புகாராக இருக்கவே தோழர் மறுக்கிறார். தோழரின் அணுகுமுறையையும், உறுதியையும் கண்டு அஞ்சி போலீசு கும்பல் வேறுவழியில்லாமல் தோழரை விட்டு விட்டன.

தகவல்: வி.வி.மு.பிரச்சாரக் குழு, தேனி வட்டம்.

படிப்பகம்

www.padippakam.com

## வங்க தேசம்:

# எர்ஷாத் வீழ்ந்தான்

வங்க தேசத்தில் வரலாறு காணாத மக்கள் போராட்ட வெள்ளம் ராணுவ சர்வாதிகாரி எர்ஷாத்தின் பதவியை அடித்துக் கொண்டு போய் விட்டது. போராட்டம் கரைபுரண்டு எங்கே ஆளும் வர்க்க அடக்குமுறை, சுரண்டல் அடிப்படையையும் பெயர்த்தெடுத்து விடுமோ என்று வடிகால்களை தயாராக திறந்து வைத்து விட்டன ஆளும் கும்பல்கள்! சட்டபூர்வ அரசாங்கத்தை தேர்ந்தெடுக்க உடனடியாக தேர்தல் நடத்தப்படும் என்ற உத்திரவாதத்துடன் போராட்டம் முடித்துக் கொள்ளப்பட்டது. ஏறக்குறைய இப்போராட்டம் 40 நாட்கள் வெற்றியுடன் தொடர்ந்தது.

எர்ஷாத்தையும் அவரது கும்பலையும் உடனடியாக பதவி விலகக்கோரி 50 லட்சம் மக்கள் வீதியில் திரண்டார்கள். ஊரடங்கு உத்திரவுகளையும் மீறி சாலை மறியல், முற்றுகை 'கெரோ' ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்கள். அக்டோபர் 10 வங்கதேச போராட்டத்தின் திருப்புமுனை நாள்! "ஜனநாயகத்தை நிலை நாட்டுவோம்" என்ற முழக்கத்தின் கீழ் தலைநகர் டாக்காவிலுள்ள குலிஷ்த்தான் சதுக்கம், மொகரம் மசூதி, மோதி ஜுஷில் பகுதிகளில் பத்தாயிரக் கணக்கில் மக்கள் ஒன்று கூடினர். நிராயுத பாணியாக இருந்த மக்களை வங்கதேச போலீசு, வங்க தேச துப்பாக்கிப் படை இரண்டும் ரத்த வெள்ளத்தில் மூழ்கடித்தது.

முன்னாள் ராணுவ சர்வாதிகாரியும் எர்ஷாத் கும்பலால் சுட்டுக் கொல்லப்பட்ட ஜியாவுர் ரஹ்மான் மனைவி பேகம் கலீடா ஜியா ஒரு போராட்ட தலைவர்! இவர் வங்க தேச தேசீய கட்சி மற்றும் ஏழு கட்சிகளின் கூட்டணித் தலைவர். வங்கதேசத்தை நிறுவியவரும் இந்திய அரசின் கைப்பாவையும் பதவி போட்டியில் ராணுவ கும்பலால் கொல்லப் பட்டவருமான முஜிபுர் ரஹ்மான் மகளான அசீனா வஜீத் ஒரு போராட்ட தலைவர். இவர் அவாமி லீக் மற்றும் எட்டு கட்சிகளின் கூட்டணித் தலைவர். இவர்கள் இருவரும் இப்போது பாகிஸ்தானின் பெநாசீர் பூட்டோ, பிலிப்பைன்சின் அகினோ போல் ஜனநாயகத்தை மீட்டெடுக்க வந்த வீராங்கனைகளாக சித்தரிக்கப் படுகிறார்கள். இவர்களோடு ஐந்து கட்சி கூட்டணி 'இடதுசாரி'க் கட்சிகளும் போராட்ட திற்கு தலைமை வகித்தன. அனைத்து கட்சி மாணவர் கூட்டணி (APSU) மற்றும் டாக்கா பல்கலைக்கழக மத்திய மாணவர் சங்கம் (DU-CSU) ஆகிய மாணவர் அமைப்புகள் போராட்டத்தின் முன்னணியில் நின்றன. பல இடங்களில் மக்களின் போராட்டத்தை வழி நடத்தி சென்றன.

மாணவர் சங்கத்தின் பல முன்னணி தலைவர்கள் கைது செய்யப்பட்டு சித்திர வதை செய்யப் பட்டனர். போராடிய மக்கள் பெருந் தொகையில் சிறையில் அடைக்கப் பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டனர். மக்களின் வீரஞ்செறிந்த போராட்டத்தை கீழ்தரமாக நையாண்டி செய்தார், சர்வாதிகாரி எர்ஷாத். இது ஆண்டு தோறும் நடக்கும் "குளிர்கால கண்காட்சி", "அரசியல் வித்தை" என்றார்.

ஆனால், 'அமைதி'யாக கொள்ளையடித்த ஆளும் கும்பல் பதட்டமடைந்தது



பேகம் கலீடா ஜியா, ஆவேச எதிர்ப்பு;சேக் ஹசீனா, கோபம் கொப்பளிக்கும் பிரச்சாரம்; எதுவரை நீடிக்கும்?

போராட்டக்காரர்களுடன் சமரசத்துக்கு போகும்படி எர்ஷாத்தை நிர்பந்தித்தது. அரசுக்கு ஆதரவாக இருந்த அரசியல் தலைவர்கள், வர்த்தகர்கள், முதலாளிகள், பத்திரிகைகளை மக்கள் சினத்துடன் எதிர்த்தனர். அவர்களின் வீடுகளையும் அலுவலகங்களையும் தாக்கினர். எதிர்கட்சித் தலைவர்கள் என்ற போர்வையில் ஒளிந்து கொண்டிருந்த எர்ஷாத்தின் ஆட்களை மடக்கி அடித்தனர். எர்ஷாத்தின் ஜடியோ கட்சியினர் பலர் ஒளிந்து தப்பினர். மாற்று பெயர்களில் வெளிநாடுகளுக்கு பறந்தனர்.

வீராப்பு பேசிய எர்ஷாத் உருக்கமாக பேச ஆரம்பித்தார். நாடாளுமன்ற, ஜனாதிபதி தேர்தல்களை உடனே நடத்துவதாக சொன்னார். நெருக்கடி நிலையையும், பத்திரிக்கை தணிக்கையும் அகற்றி விடுவதாகக் கூறினார். வானொலி, வானொலிகளிலும் 'நமது நாடு ஏழை நாடு', 'நான் கடுமையான உழைப்பாளி' என்று அனுதாபம் தேடினார். அரசு எதிர்ப்பு கலவரங்களில் பாதிக்கப் பட்ட குடும்பங்களுக்கு உதவிகள், சந்திப்புகள் நிகழ்த்தினார். மக்கள் எதற்கும் மயங்கவில்லை. கடந்த '86 மற்றும் '88 ஆண்டுகளில் நடந்த மோசடி தேர்தல்கள், அதில் எர்ஷாத் கும்பல் நடத்திய தில்லுமுல்லுகள், தாங்களே வெற்றி பெற்றதாக முடிசூட்டிக் கொண்டது ஆகிய குற்றங்களை தோலுரித்தனர். எனவே, எர்ஷாத் உடனடியாக பதவி விலக வேண்டும். இடைக்கால அரசாங்கம் அமைத்து அதன் மேற்பார்வையில் தேர்தல் நடத்த வேண்டும் என்றனர்.

எர்ஷாத், அடிபட்ட பாம்பு.



இதன் நடுவில் மதவெறியை கிளப்பி, பிரச்சனையை திசை திருப்ப எர்ஷாத் முயன்றார். அக்டோபர் 30ந் தேதி - அரசுக்கு எதிரான மக்கள் போராட்டம் உச்சக் கட்டத்திலிருந்த போது - தலைநகர் டாக்காவின் பல இடங்களில் சிறுபான்மை இந்துக்கள் மீது முஸ்லிம் வெறியர்கள் தாக்குதல் தொடுத்தனர். இந்துக்களின் கடைகளையும் வீடுகளையும் நாசம் செய்தனர். 'இந்தியாவில் பாபர் மசூதியை சொந்தம் கொண்டாடும் இந்துக்களுக்கு பாடம் புகட்டுவோம்' என்றனர். போராடிய முஸ்லீம் மக்கள் எச்சரிக்கையுடன் மதவெறியர்களை தனிமைப் படுத்தினர். அரசுக்கெதிரான போராட்டம் கூர்மையடைந்தது. பதவி போனாலும், உயிரோடு தப்பினால் போதும் என்று எர்ஷாத் பதவியை துறந்தார்.

எதிர்க்கட்சிகள் முன்மொழிந்த நபரான வங்கதேச உச்ச நீதிமன்ற நீதிபதி சகாபுதீன் அகமதிடம் இடைக்கால அரசின் தலைமை பதவியை ஒப்படைத்தார். ஆனாலும் "தான் எதற்கும் மன்னிப்பு கேட்க



படிப்பகம்

www.padippakam.com

வேண்டிய அவசியமில்லை'' என்றார். ''ஜனாதிபதி தேர்தலில் நான் போட்டியிடுவேன்'' என்றார்.

எர்ஷாத் கும்பலை உடனடியாக கைது செய்து விசாரணைக்கு உட்படுத்துமாறு ஒருமித்த குரலில் மக்கள் கோரினர். எர்ஷாத் வசிக்கும் டாக்கா கன்டோன்மெண்ட் 5 நட்சத்திர பங்களாவை தாக்கினர். மந்திரிகள் உயரதிகார கும்பலின் வீடுகளை சூறையாடினார். விமான நிலையங்களை முற்றுகையிட்டு எர்ஷாத் கும்பல் வெளியேறி விடாதபடி கண்காணித்தனர்.

போராடியவர்களின் ஒப்புதலோடு, இடைக்கால அரசின் தலைவராக பொறுப்பேற்றிருக்கும் உச்ச நீதிமன்ற நீதிபதி சகாபுதீன் அகமது, மக்களின் ஒருமித்த வேண்டுகோளுக்கு பிறகும் எர்ஷாத்தை குறைந்தபட்சம் வீட்டுக் காவலில் கூட வைக்கவில்லை! பி.பி.சி போன்ற வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள், டி.வி.கள், பத்திரிகைகளுக்கு எர்ஷாத் இன்றளவும், சகஜமாக பேட்டி தரும் அளவுக்கு அவரை 'கண்ணியமாக' நடத்துகிறார். ''90 நாட்களுக்குள் நாட்டில் தேர்தல் நடத்துவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்திடம் அதிகாரத்தை ஒப்படைப்பதுமே எனது தலையாய வேலை'' என்று நழுவிக் கொள்கிறார்.

எர்ஷாத் எதிர்ப்பு போராட்டத்திற்கு தலைமை தாங்கும், தேர்தலில் வெற்றி வாய்ப்பை எதிர்பார்த்து காத்திருக்கும் எதிர்தரப்பினர் எர்ஷாத்துக்கு சற்றும் குறைவில்லாத முன்னாள் ராணுவ அதிகாரிகளின் வாரிசுகள்! இந்தியாவில் காங்கிரசுக்கு மாற்றாக தோன்றிய தேசீய முன்னணி கும்பலைப் போன்றவர்கள்! முஜ்புர் ரஹ்மான், ஜியாவுர் ரஹ்மான் ஆதரவு அதிகார வர்க்க முதலாளிகள், பண முதலைகள்தான் இப்போது எர்ஷாத் எதிர்ப்பு போராட்டத்திற்கு அனைத்து உதவிகளும் செய்கிறார்கள். வங்கதேசத்தின் பிரதான 'உதவி'யாளர்களாக - சுரண்டல்காரர்களாக - இருக்கும் ஜப்பான், பிரிட்டன், அமெரிக்கா ஆகிய எஜமானர்களும் இந்த ஜனநாயக வீராங்கனைகளை ஆதரிக்கின்றனர்.

ராணுவ சர்வாதிகாரத்திற்கு ஊற்று மூலமாக இருந்து நாட்டை கொள்ளையடிக்கும் ஏகாதிபத்தியம், அதற்கு பாதை அமைத்துக் கொடுக்கும் நிலப் பிரபுத்துவத்தை எதிர்க்கும் துணிவு இவர்கள் எவர் ஒருவருக்கும் இல்லை. அவ்வளவு ஏன்? மாணவர் அமைப்புகள் தண்டிக்க வேண்டிய தேசவிரோதிகள் என்று பட்டியலிட்டிருக்கும் நபர்களில் ஒருவர்கூட ராணுவ - அதிகாரவர்க்க கும்பலைச் சார்ந்தவர்களல்ல! இதிலிருந்தே இவர்களது போராட்டம் எவ்வளவு முன்னெச்சரிக்கையுடன், எர்ஷாத் எதிர்ப்பு ஆளும் கும்பலால் வழிநடத்தப் படுகிறது என்பது வெளிச்சமாகிறது.

ஏழை, மூன்றாம் உலக நாடுகளின் வீரஞ்செறிந்த மக்கள் போராட்டங்களை இப்படி திசை திருப்புவதில் சட்டவாத பாராளுமன்றவாத புதை சேற்றுக்குள் இழுத்துவிடுவதில் ஏகாதிபத்தியங்கள் தொடர்ந்து வெற்றிபெற்று வருகின்றன. நேற்று பிலிப்பைன்ஸ், பாகிஸ்தான்... இன்று வங்கதேசம்!

● குணசேகரன்.

# பாகிஸ்தான்: அரங்கேறும் சர்வாதிகாரம்!



பெநாசிர் பூட்டோ ஊழல் குற்றங்களை எதிர்த்து ஆட்சிக்கு வந்திருக்கும் பாகிஸ்தான் புது பிரதமர் முகமது நவாஸ் ஷெரீப் முகவிலாசம் இது.

காஷ்மீரி முஸ்லீமான இவரது குடும்பம், பாகிஸ்தானின் வர்த்தகத்திலும் ஆலை தொழிலிலும் முக்கிய இடம் வகிக்கிறது.

ராணுவ சர்வாதிகாரியும் பின்னாளில் தூக்கிலிடப்பட்டவருமான பூட்டோ (பெநாசீர் தந்தை) 1972 ஆம் ஆண்டில் இவர்களது 'இட்டிபெக்' (Ittefag) ஆலையை தேசீய உடமையாக்கினார். பூட்டோவை அதிலிருந்து எதிரியாக பாவித்தது, நவாஸ் ஷெரீப் குடும்பம்.

தனது தொழிலை மட்டுமே கவனித்து வந்த நவாஸ் ஷெரீப் பூட்டோவுக்கு எதிராக 'ஜனநாயகம்' பற்றிப் பேச ஆரம்பித்தார். அஷார்கான் என்ற ஓய்வுப் பெற்ற விமானப் படை தளபதி பூட்டோவுக்கு எதிராக நடத்தி வந்த தேரிக் - இ - இஸாத்லாப் என்ற கட்சியில் இணைந்தார். அதன் மூலம் புதிய, பழைய ராணுவ கும்பலுடன் மிகவும் நெருக்கமானார். பூட்டோவைக் கவிழ்த்த ராணுவ கும்பலில் பஞ்சாப் மாநிலத்தின் நிதி அமைச்சரானார்.

கட்சி சார்பற்ற தேர்தல் என்று 1985 ஆம் ஆண்டு சர்வாதிகாரி ஜியா - வுல் - அக் நடத்திய போலித் தேர்தல் மூலம், பஞ்சாப் மாநில முதலமைச்சரானார். அப்போது 'முஸ்லீம் லீக்' என்ற மதக் கட்சியின் பஞ்சாப் மாநில தலைவரானார். மீண்டும் ஜியா தேசீய சபையையும், நான்கு மாநில அரசாங்கங்களையும் கலைத்தார். கொடுத்த அதிகாரங்களையெல்லாம் பிடுங்கிக் கொண்டார்.

ஆனால் நவாஸ் ஷெரீப்பை மட்டும் ஜியா தொடர்ந்து இடைக்கால முதலமைச்சராக அனுமதித்தார். ஜியா சாவுக்கு பிறகு 1988 ஆம் ஆண்டில் நடந்த தேர்தலில் அடித்த பெநாசீர் அலையில் பஞ்சாப் மாநிலத்தில் இவர் கும்பல் மட்டுமே தப்பிப் பிழைத்தது. இந்திய எதிர்ப்பு, முஸ்லீம் மத வெறி மூலம் இவர் தொடர்ந்து தனது அதிகார பீடத்தை விரிவு படுத்திக் கொண்டார்.

1982 ஆம் ஆண்டில் ரூ.33.7 கோடியாக இருந்த இவரது தொழிற்சாலைகளின் வரவு - செலவு, இப்போது ரூ.500 கோடி! ஆசியாவிலேயே மிகப் பெரியது இவரது சர்க்கரை ஆலை! பாகிஸ்தானிலேயே மிகப் பெரிய இரும்பு - எஃகு ஆலை, 5 துணி ஆலைகள், ஒரு மிகப் பெரும் 5 நட்சத்திர மருத்துவமனை, மற்றும் ஏராளமான 'ரியல் - எஸ்டேட்' நிறுவனங்கள் ஜப்பான் ஹோண்டா மோட்டார் வாகனங்கள் இணைப்பு - விற்பனை ஆலை முதலியவற்றிற்கு அதிபதி! சென்ற தேர்தலில் 4 தொகுதிகளிலும், தற்போது 5 தொகுதிகளிலும் போட்டியிட்டு அனைத்திலும் வெற்றிப் பெற்று பகட்டிக் கொண்ட விளம்பரப் பித்தர்!


முற்றும் முழுக்க ராணுவ கும்பலின் தயவில் வாழ்பவர். சர்வாதிகாரி ஜியாவின் மகன் இஸாக் - வுல் - அக், மற்றும் ஓய்வுப் பெற்ற முன்னாள் ராணுவ ஜெனரல்கள், ஜெனரல்களின் ஆலோசகர்கள், இவர்கள் தான் இப்போது, நவாஸ் ஷெரீப்பின் மந்திரி சபையை அலங்கரிக்கிறார்கள். சையத் அலி, கௌர் ஷா, இஸ்லாம் நபி, சையத் தரிக் முகமது போன்ற முஸ்லீம் மத தலைவர்கள்தான் நவாஸ் ஷெரீப்பின் ஆட்சியை வழி நடத்துகிறார்கள்.

ஏற்கனவே, 16 - 30 ஆகஸ்டு 1990 புதிய ஜனநாயகத்தில் மீண்டும் ஜியா சகாப்தம் என்று எழுதியிருந்தோம்! அதை மேலும் உறுதிபடுத்துகின்றன இத்தகவல்கள்! ஏறக்குறைய 20 மாதங்களுக்கு முன் பாகிஸ்தானில் ஜனநாயகம் மலர்ந்து விட்டது என்று பூரித்து போனார்கள் முதலாளித்துவ அறிவு ஜீவிகள். மக்களையும் அப்படி நம்பச் சொன்னார்கள். இல்லை! நாடாளுமன்ற ஜனநாயகம் அதற்கு மரண அடியைக் கொடுக்காதுமாறாக, பாசிஸ்ட்டுகளை பாதுகாக்கும் பதுங்கு குழியாகத்தான் இருக்கும் என்பது மீண்டும் நிரூபணமாகி விட்டது.

படிப்பகம்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : எஸ்.மதியழகன், 21 பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.

www.padippakam.com



# இதுதான் இன்றைய இந்தியா

'வீடு போ போ, காடு வா வா' என்கிற வயது! இருந்தாலும் இவர் சோம்பி உட்கார்ந்தது இல்லை! இவர் ஆதிவாசி பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர். ஆந்திரா - கோதாவரி படுகை, கம்மம் மாவட்டத்தில் வாழ்பவர். இவர் உடம்பில் எங்காவது சதை இருக்கிறதா பாருங்கள்! எலும்புக்கூட்டில் சுவாசம் நடந்து கொண்டிருக்கிறது; அவ்வளவுதான்! இந்த நிலையிலும் இன்றளவும் இவர் உழைத்துச் சாப்பிடுகிறார். கடுமையான உழைப்பின் மூலம் மூங்கில்களை சேகரித்து கூடை, முறம் முடைந்து அதை தலைச்சுமையாக விற்பனையும் செய்கிறார்! உலகமே தலைகீழானாலும் தமது வேலையை அவர் நிறுத்தியதில்லை!

இவரைப் போல் ஓராயிரம் முதியவர்கள் கிராமப் புறங்களில் வசிக்கிறார்கள். தம் மகனாக இருந்தாலும் சோம்பி உட்கார்ந்து அவர்களை சார்ந்து வாழ்வதில்லை; முடிந்த வேலையை செய்கிறார்கள். ஆடு, மாடுகளை மேய்ப்பது, புல் அறுப்பது, சுள்ளி, சாணம் பொறுக்குவது, கடலை, புளி உடைத்துக் கொடுத்து கூலி பெறுவது என்று தனது வயதான துணைவியாருடன் சேர்ந்து உழைக்கிறார்கள். கண்பார்வை மங்கி வாத நோயால் கால் முடங்கிப் போனாலும் சோம்பி உட்கார மறுக்கிறார்கள். கடைசியில் உணவு தானியம் காயவைத்து பராமரிக்கும் வேலையாவது செய்கிறார்கள். உடம்பை வைத்துக் கொண்டு எப்படி சும்மாய் இருப்பது? ஓடி ஆடிய உடம்பு இது! என்று வாயடைத்து விடுவார்கள்.

இதோ, பசுமை சூழலில் தமது ஒய்யார செல்ல வாத்துடன் கொஞ்சி விளையாடுபவர், இந்திய பிரதமர் சந்திரசேகர். நான் சாதாரண ஆள் அல்ல, சோசலிசவாதி. கடுமையான உழைப்பாளி என்று சொல்லி திரிந்தவர். ஆனால் இவர் தனது வாழ்க்கைக்காக எந்நாளும் எந்த தொழிலும் செய்தது இல்லை! அரசியல் பொது வாழ்க்கையும் எளிமையாக நடத்துவதில்லை! எங்கு சென்றாலும் 5 நட்சத்திர ஓட்டல் கும்பலுடன்தான் இவருக்கு சகவாசம்! இவரது சொத்து மதிப்பு கேட்பவருக்கே தலையை சுற்றும்! அதில் வெளியில் தெரிந்தது கொஞ்சம்!

4க்கும் மேல் வெளிநாட்டு கார்! டில்லி அருகில் 45 ஏக்கர் நிலப்பரப்பில் பண்ணை அரண்மனை! ஊரை ஏமாற்ற 'போன்ட்சி' ஆசிரமம் என்று அதற்கு எளிமையான பெயர் வேறு!

அதனுள்ளே உல்லாச படகு விட பெரிய ஏரி, இயற்கையான சூழல், மரப்பாலம், நீரோடை, விலங்குகள்! அங்கு மேய்ந்து திரியும் வாத்துக்களுடன் இப்போது கொஞ்சி விளையாடுகிறார். அதிலும் சலிப்பு ஏற்பட்டால் ஏரியில் படகு விடுவார்! பிறகு காலாற இயற்கை சூழலின் நடுவே நடந்து வருவார்! இன்று நேற்றல்ல பத்தாண்டுக்கும் மேலாக இதுதான் இவரது வேலை! இப்போது பிரதமரானதும் கூடுதலான சுகபோக வசதிகள் வேறு!

நாட்டு பிரச்சினைகள், நெருக்கடிகளைத் தீர்க்க மக்கள் ஐக்கியப்பட்டு கடுமையாக உழைக்க வேண்டும் என்று தனது முதல் உரையிலேயே உபதேசம் செய்ய ஆரம்பித்தார்! இவரைப் போல் ஓராயிரம் சந்திரசேகர்கள் நாட்டில் உயர்ரக ரகசிய வாழ்க்கையை வாழ்கிறார்கள். இந்த வாழ்க்கைக்கு இவர்களுக்கு வருமானம் எங்கிருந்து வருகிறது என்பது யாருக்கும் தெரியாது.

உழைக்கும் மக்கள் உயிர் போகும் நிலையிலும் உழைத்து சாப்பிடும் அவலம்! மக்கள் தலைவர்களுக்கோ பொதுச்சேவை என்ற பெயரில் 5 நட்சத்திர ஆடம்பரத்துடன் சோம்பேறி வாழ்க்கை! இந்த அக்கிரமத்தை நாம் ஒன்று சேர்ந்து துடைத்தெறிவது எப்போது?



படிப்பகம்